
# தமிழரசு

16.12.1986 ரூ. 1






சென்னை-எழும்பூர் அரசினர் குழந்தைகள் மருத்துவமனையில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான 10 மாடிக் கட்டடத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்துவைத்தார் (8.12.86). மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் உடனிருக்கிறார்.





# தரமேம்பாட்டு மாதம் வாழ்த்துச் செய்திகள்



மாண்புமிகு பிரதமர்

**திரு ராஜீவ் காந்தி**

ஏழைகள் ஏற்றம் பெறவும், எளியோர் வாழ்வு மலரவும், நாட்டுப் பொருட்கள் நானிலச் சந்தையில் நன் மதிப்புப் பெற்றிடவும் உற்பத்தித் திறனும் ஓங்கு தரமும் சிறந்திடச் செய்து நல்வாழ்வு காண்போம்.''

மாண்புமிகு முதல்வர்

**டாக்டர் எம். ஜி. ஆர்**

அளவிலும், எண்ணிக்கையிலும் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமின்றி உயர்ந்த தரமுள்ள பொருள்களை உற்பத்தி செய்வதை நமது தேசீயக் கடமையாகக் கொள்ள வேண்டும். இதில் நிர்வாகத்தினர் மட்டுமின்றி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிற அனைத்துத் தரப்பினரும் முழு மூச்சாக ஈடுபட வேண்டும். அப்போதுதான் நமது மதிப்பு நம்நாட்டின் மக்களிடம் மட்டுமின்றி அயல்நாடுகளிலும் உயரும். தரத்துக்கு அளிக்கப்படும் முக்கிய தன்மை தான் நமது பொருளாதார வளர்ச்சியை நிலை நிறுத்தும். 1986ம் ஆண்டு நவம்பர் திங்கள் - தரமேன்மைக்கான மாதமாக நமது பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டு கடைப்பிடிக்கப் படுகிறது. தரமிக்க உற்பத்தி எனும் சீரிய குறிக்கோளை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அனைவருடைய உள்ளங்களிலும் பதிய வைத்திட எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெற்றிட அனைவரும் ஒத்துழைப்பு நல்கிடுவோமாக!

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017

அட்சய - மார்கழி 1

16-12-1986

மலர் : 17

இதழ் : 12



# தரமே வளம்

**மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்**

**திரு க. இராசாராம்**

பொருளாதார முன்னேற்றம், வளர்ச்சியின் பயன் பின் தங்கிய பகுதிகளுக்கும் பரவச் செய்தல் ஆகிய குறிக் கோள்களை முக்கியமாக, தொழில் துறையின் மூலமே எட்ட இயலும் என்று அரசு கருதுவதால், தொழில் வளர்ச்சிக்கு மாநிலத்தின் அபிவிருத்தி திட்டங்களில் மிக முககியமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் அளவு கோல்கள்

முன்னேற்றத்தைத் தெளிவு படுத்தும் சில அளவுகோல் களைக் காணலாம்.

1981-82ம் வருடத்திய தொழில்கள் பற்றிய வருடாந்திர ஆய்வின்படி, நாட்டில் பதிவு பெற்றிருந்த தொழிற்சாலைகளில் 11.18 சதவீதமும், மொத்த உற்பத்தியில் 12.55 சதவீதமும், உற்பத்தி மதிப்பு உயர்வில் 12.02 சதவீதமும், நிகர வருமானத்தில் 12.18 சதவீதமும் தமிழ்நாட்டில் அமைந்திருந்தன. தொழில்கள் மூலம் நிகர உற்பத்தி (1970-71) விலைகளின்படி (Net State Domestic Product at Factor cost by Industry at 1970-71 prices) 1975-76இல் ரூ. 2679 கோடியாயிருந்தது, 1984-85ல் ரூ. 3726.9 கோடியாக அதிகரித்துள்ளது (துரித மதிப்பீடு).

1976-77ல் தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 8570 ஆக இருந்தது; இது 31.12.83ல் 11,920 ஆகவும், 30.9.86ல 13,225 ஆகவும் உயர்ந்துள்ளது.

### அயல்நாட்டு தொழில் ஒப்பந்தங்கள்

1985ல் 1024 அயல் நாட்டு தொழில் ஒப்பந்தங்கள் பதிவாகியன. ஒப்பந்தங்கள் செயல்படுத்தக் கூடிய இடங்களின் அடிப்படையில் பார்த்தால், 113 ஒப்பந்தங் களுடன், தமிழகம் இரண்டாவது இடத்தை வகித்தது.

### மாநில அரசு நிறுவனங்கள்

பல்வேறு துறைகளில் தொழில் வளர்ச்சியை ஊக்கு விக்கும் நோக்குடன், மாநில அரசு பல வழிகளிலும் உதவி வருகிறது. வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அமைத்து தருதல், நிதி உதவி உள்ளிட்ட பல உதவிகளைத் தனியார் துறையில் வளர்ச்சி அமையக்கூடிய வகையில் அளித்தல் இவை அடங்கும்.

அரசின் பல்வேறு உதவித் திட்டங்களைச் செயல் படுத்து வதற்கென சில அரசு சார்பு நிறுவனங்கள் அமைக்கப்பட் டுள்ளன.

### அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

இந்நிறுவனம், பொதுத் துறையில் சில பெருரக மற்றும் நடுத்தரத் தொழில்களை அமைத் துள்ளது. இது, தனியார் தொழில் முனைவோரையும் தொழில் வளர்ச்சியில் பங்குபெறச் செய்யும் நோக்குடன் அவர்களோடு இணைந்து, கூட்டுத் திட்டங் களைச் செயற்படுத்தியுள்ளது. இதுவரை, மாநிலத்தில் பொது மற்றும் கூட்டுத் துறையில் ரூ. 608 கோடி முதலீட்டுடன் 45 தொழில்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப் பட்டுள்ள 45 தொழில்களில் 38 தொழில்கள் மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளில் அமைந் துள்ளன. பின் தங்கிய பகுதிகளின் வளர்ச்சியை விரைவு படுத்துவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட் டுள்ளது.

இவை தவிர, ரூ. 775 கோடி முதலீட்டுடன், 15 புதிய தொழில்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

### ஆ. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மாநிலத்தின் பின் தங்கிய மற்றும் ஓரளவு வளர்ச்சி யடைந்துள்ள பகுதிகளில் சீரான தொழில் வளர்ச்சியினைத் துரிதப் படுத்துவதற்காகவும் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்குத் திட்டமிட்டு அவற்றைச் செயல் படுத்துவது இதன் முக்கிய பணியாகும்.

கடந்த சில ஆண்டுகளில் பெரு ரக மற்றும் நடுரகத் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்திட வேண்டுமென்ற அரசின் கொள்கையை நிறைவு செய்திடும் ஓர் அபிவிருத்தி மையமாக இந் நிறுவனம் செயலாற்றி வருகிறது. இதன் செயல் திறன் பற்றிய் ஒரு சில புள்ளி விவரங்களை இதற்கு எடுத்துக் காட்டாகக் குறிப் பிடலாம்.

இந்நிறுவனத்தால் 1972-73 முதல் 1976-77 வரையான காலத்தில் தவணைக் கடன் உதவியாக 64 தொழில்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டது ரூ. 6.66 கோடியாக இருந்தது. இதற்கு மாறாக, 1977-78 முதல் 1985-86 வரையான காலத்தில் 478 தொழில்களுக்கு ரூ. 214.36 கோடி ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் அயல் நாடுகளில் வாழும் இந்தியர் களால் ரூ. 6.76 கோடி மதிப்புள்ள 12 தொழில்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் சுமார் ரூ. 20 கோடி முதலீட்டில் 22 தொழில்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

### சென்னை ஏற்றுமதி மண்டலம், தாம்பரம்

தமிழ்நாட்டில், மீனம்பாக்கத் திற்கு அருகில். தமிழ்நாடு அரசின் உதவியுடன் இந்திய அரசு ஒரு ஏற்றுமதி மண்ட லத்தினை (வரியில்லா வர்த்தக மையம்) அமைத்து வருகிறது.

1986ல் ஜூலை வரை 93 தொழில் களுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இவற்றில் 32 தொழில்கள் அயல்நாட்டு ஒப்பந் தத்துடன் கூடியவை. அயல் நாட்டு முதலீடு ரூ. 6.90 கோடி யாகும். இந்த ஏற்றுமதி மண்டலம் ஏ கனவே செயல் படத் துவங்கிவிட்டது.

### இ. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

நாட்டிலேயே முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்த மாநில நிதி நிறுவனம், தொழில்களுக்கு நிலம், கட்டிடம், இயந்திர சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களைப் பெற ரூ. 60 இலட்சம் வரையில் கடன் அளிக்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் தொழில்களுக்கு, குறிப்பாக சிறு தொழில்களுக்கு அரசின் நிதி உதவி கிடைக்கச் செய்திடும் ஓர் முக்கியமான அங்கமாக இந் நிறுவனம் வடிவெடுத்துள்ளது. இதன் மூலம் எந்த அளவிற்குத் தொழில்களுக்கு உதவி கிடைத் துள்ளது என்பதனைக் கீழ் காணும் புள்ளி விவரங்களி லிருந்து அறியலாம். 1949 முதல் 1978 வரையான காலத்தில் இந்நிறுவனத்தால் தொழில் களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை ரூ. 118.77 கோடி யாகும். இதற்கு மாறாக, கடந்த எட்டு ஆண்டுகளில் மட்டும் தொழில்களுக்கு ரூ. 394.5 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் 84 சதவீதத்திற்குமேல் சிறு தொழில்களுக்கு கிடைக்கப் பெற்றிருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

### ஈ. தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்

மாநிலத்தில் மின்னணுத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாகும். பொது மற்றும் கூட்டுத் துறைகளில் தொழிற்சாலைகளை அமைப் பதோடு, தனியார் துறையிலுள்ள மின்னணுத் தொழில்களுக்கு விற்பனை உதவியையும் இந் நிறுவனம் அளிக்கிறது. 1984-85ல் இந்நிறுவனத்தின் உற்பத்தி மதிப்பு ரூ. 1.13 கோடி யாகவும், இதன் கூட்டு நிறுவனங்களின் உற்பத்தி ரூ. 3.3 கோடியாகவும் இருந்தது; இவை 1985-86ல் முறையே ரூ. 3.18 கோடி, ரூ. 10 கோடியாக உயர்ந்துள்ளன.'

தொழில் துவங்க ஆர்வம் கொண்டுள்ள தொழில் முனை வோருக்கு தமிழகம் எல்லா வகையிலும் மிகவும் உகந்த ஓர் மாநிலமாகத் திகழ்கிறது. சிறப் பான அடிப்படை வசதிகள், பயிற்சி மற்றும் திறன் பெற்ற மனித வளம், பெருகி வருகின்ற நகர்ப்புறங்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாகக் கிடைக்கப் பெறும் சமுதாய வசதிகள் ஆகியவை தொழில்கள் தோன்றி வளர்ந்திட அமைந் துள்ள சில அடிப்படை வசதி களாகும். வரும் ஆண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மேலும் சிறப்பானதாக அமைந் திடும் என்பதில் ஐயமில்லை.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில், நாட்டில் இதர பகுதிகளில் உள்ள தொழில் களைப் போலவே தமிழகத்தி லுள்ள தொழில்களும் பொருள் களின் தரம், விலை இவற்றின் அடிப்படையில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு போட்டியிட்டு வெற்றி பெறக் கூடிய நிலையை அவை அடைந்தால்தான் நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் பணியாற்ற இயலும், தரமும் உற்பத்தி திறனும் தொடர்ந்து உயர வேண்டிய அவசியமும், அவசரமும் தற்போது ஏற்பட் டுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் தரத்தை நமது தொழில்கள் அடைவதோடு உபயோகிப்பாளர்களின் [illegible] அதே அளவிற்கு நம்பிக்கை யையும் தோற்றுவிக்க வேண்டிய நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது

# தரம்- இன்றையத் தேவை!

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்

**திரு ஆனூர் பி. ஜி. ஜெகதீசன்**



சமீப ஆண்டுகளில், சிறு தொழில்கள் எண்ணிக்கையில் மட்டுமின்றி, அதி நுட்பமான பொருள்களையும் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு மிகச் சிறந்த வளர்ச்சி கண்டுள்ளன. நாட்டின் மொத்த தொழில் உற்பத்தியில் பாதி, சிறு தொழில் மற்றும் கிராமத் தொழில்கள் மூலம் கிடைக்கப் பெறுகின்றது. நாட்டின் ஏற்றுமதியில் சிறு தொழில் துறையின் பங்கு சுமார் 25 சதவீதம் ஆகும்,

**போற்றத்தக்க முன்னேற்றம் :**

மாநில அளவிலும். சிறு தொழில் துறையில் வளர்ச்சி போற்றத் தக்கதாக அமைந் துள்ளது. மாநிலத் தொழில் வணிகத் துறையால் வழங்கப் பட்ட நிரந்தரப் பதிவுச் சான்றிதழ் களின் எண்ணிக்கை, 1978 மார்ச் திங்கள் இறுதியில் 18,789 ஆக இருந்தது, 1982 மார்ச் இறுதியில் 42,252 ஆகவும், 1986 செப்டம்பர் இறுதியில் 76,444 ஆகவும் உயர்ந்துள்ளது.

இவற்றில் முதலீடு 1978 மார்ச் இறுதியில் ரூ. 158.10 கோடியா யிருந்தது, 1986 மார்ச் இறுதியில் ரூ. 947.42 கோடியாக உயர்ந் துள்ளது. இதே காலததுல, இவற்றின் மூலம் 2.61 இலட்ச மாக இருந்த வேலை வாய்ப்பு, 8.61 இலட்சமாக வளர்ந்துள்ளது.

**சிறு தொழில்களுக்கு பலவகைகளில் உதவி**

சிறு தொழில்களின் வளர்ச்சியை விரைவுபடுத்துவ துடன், அதன் பயன் பின்தங்கிய பகுதிகளுக்கும் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அவற்றின் வளர்ச்சிக்குப் பல்வேறு நிலைகளில், தேவை யான அனைத்து உதவிகளும் அளிக்கப்படுகின்றன.

மின்சார மற்றும் மின்னணுத் தொழில்களுக்கு மட்டுமென அமைக்கப்பட்டுள்ள ஏழு தொழிற்பேட்டைகளில், அனைத்து வசதிகளையும் கொண்ட 138 தொழிற்கூடங் களும் சுமார் 400 செப்பனிட்ட மனைகளும் சிறு தொழில்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. கடந்த ஏழு ஆண்டுகளில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் எல்லாத் தொழில்களுக்கும் நிதி உதவியாக வழங்கப்பட்ட மொத்த தொகையான ரூ. 394.50 கோடியில் ரூ 332.83 கோடி அல்லது மொத்த உதவியில் 84.31 சதவீதம் சிறு தொழில் களுக்கே அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) ஒரு சில பணிகள்

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் சிறு தொழில்களுக்கு வழங்கப்பட்ட கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள்களின் அளவு, 1984-83ல் 36,602 மெட்ரிக் டன்னாக இருந்தது. இது 1985-86 ல் 46,179 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. இந்நிறுவனத்தால், பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் களுக்கு அளிக்கப்பட்ட விற்பனை உதவி 1981-82ல் ரூ. 221.66 இலட்சமாக இருந்தது; இது 1985-83ல் ரூ. 537.18 இலட்ச மாக அதிகரித்துள்ளது.

**தர உயர்வின் அவசியம்**

இத்துறை, ஓரளவு முன் னேற்றம் அடைந்துள்ள போதிலும், எதிர்காலத்தில் எழக் கூடிய பிரச்னைகளை எதிர் கொள்ளக்கூடிய வகையில் அவற்றை வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது வெளிநாடு களிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள்; உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் இவற்றோடு, தரம், விலை இந்த இரண்டு கூறுகளிலும் போட்டி யிட்டு சமாளிக்கக்கூடிய நிலை யைப் பொறுத்தே இவற்றின் எதிர்காலம் அமையும் என்று கூறினால் அது மிகையாகாது. தொடர்ச்சியான முறையில் தர மேம்பாடு, உயர்ந்து வரும் உற்பத்தித் திறன் ஆகியவை சிறு தொழில்களின் நிலையான வளர்ச்சிக்கு இன்றியமையாத வையாகும்.

நுட்பம் வாய்ந்த தொழில்களில் சிறு தொழில் பிரிவுகள் அபி விருத்தியடைய வேண்டு மானால், அவற்றின் பொருள்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க தரம் உடையவையாயும், நீடித்து உழைக்கக் கூடியவையாகவும் இருக்க வேண்டியது அவசிய மாகும்.

எந்த அளவிற்கு சிறு தொழில்கள் அவற்றிற்கு தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களை சிறு தொழில்கள் அடைந்திடும் என்பது அவற்றின் தரம், உற்பத்தித் திறன் இவற்றைப் பொறுத்தே அமையும்.

## தர உயர்விற்கு உதவி:- தொழில் வணிகத் துறையால் அளிக்கப்படும் பரிசோதனை வசதி

**1, இரசாயன ஆய்வுக் கூடங்கள்:**

1. இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடம், தொழிற்பேட்டை, கிண்டி சென்னை 600 032.

அ. இரசாயனப் பிரிவு

தாது மற்றும் கனிமப் பொருட்கள் உலோகம் மற்றும் உலோகக் கலவை, சோப், கொழுப்புப் பொருட்கள், உரங்கள் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள் சிமெண்ட், வர்ணம் மற்றும் அதன் சார்பு பொருள்கள், பெட்ரோலியப் பொருட்கள் இவற்றைப் பரிசோதித்தல்.

ஆ. இயந்திரவியல் ஆய்வு

''டெஸ்ட்ரக்டிவ்'' சோதனை ''டென்சைல்'' தன்மை அழுத்தம், ''இம்பாக்ட்'' கடினம் வளைவுத் திறன்.

'நான்-டெஸ்ட்ரக்டிவ்' சோதனை

'வெல்டு'கள் வார்ப்படங்கள், 'போர்ஜிங்கு'கள் இவற்றின் 'ரேடியோ கிராபி'.

உப்பு தயாரிப்பதில் பயிற்சி

சிறு உப்பு தயாரிப்பாளர்களுக்கு விஞ்ஞான முறைகளின் படி உப்பு தயாரிப்பதற்கு பயிற்சி

2. மண்டல ஆய்வுக்கூடம், அவனாசி சாலை, விமான நிலையம் அஞ்சல், கோயம்புத்தூர் 641 014

தொழிலியல் மூலப்பொருட்கள் மற்றும் கருவியல் பரிசோதனை 10 குதிரைத் திறன் வரை திறன் கொண்ட பம்புகளின் திறன் பரிசோதனை.

3. மண்டல ஆய்வுக்கூடம், தொழிற்பேட்டை, கே. புதூர், மதுரை 625 007

தொழிலியல் மூலப் பொருட்கள் மற்றும் நிறைவு செய்யப்பட்ட பொருட்களின் இரசாயனப் பகுப்பாய்வு மற்றும் இதர பரிசோதனை.,

4. சவ்வரிசி ஆராய்ச்சிக்கூடம், போல்க் வளாகம், சேலம் 636 001

சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களுக்கு பரிசோதன

5. உப்பு மற்றும் கடல்படு இரசாயனப் பொருள்கள் மாநில ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி 628 001

சிறு உப்புத் தொழிற்சாலை களுக்கு தொழில் நுட்ப உதவி, உப்பு மற்றும் கடல்படு இரசாயனப் பொருள்களுக்கு பரிசோதனை வசதி

இப்பரிசோதனைக் கூடங்கள் வழங்கிடும் தரச்சான்றிதழ்களை இந்தியத் தர நிர்ணய நிறுவனம் மைய அரசின் பண்டங்கள் வாங்கும் துறை போன்ற பல நிறுவனங்கள் ஏற்றுக் கொள்ளுகின்றன. தொழில் வணிகத்துறையிடம் பதிவு பெற்றுள்ள சிறு தொழில்களுக்கு கட்டணத்தில் 50 சதவீத சலுகை அளிக்கப்படுகிறது.

**மின்சார மற்றும் மின்னணு ஆய்வுக் கூடங்கள்**

1. மைய மின்சார ஆயவுக்கூடம் காக்களூர்

அனைத்து மின்சார சாதனங் களின் தரம் பற்றிய பரிசோதனை செய்து, சான்றிதழ் வழங்குதல் பல பொருள்களுக்கு சான்றிதழ் வழங்கிட இந்தியத் தர நிர்ணய நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது. பல்வேறு அரசுத் துறைகளால் வாங்கப்படுகின்ற மின்சாரப் பொருள்கள், இந்த ஆய்வுக் கூடத்தால் அவற்றின் தரத்திற்கு சான்றிதழ் அளிக்கப்பட்ட பிறகே வாங்கப்பட வேண்டுமென அரசு ஆணை வழங்கியுள்ளது.

2. மின்னணுப் பரிசோதனை மற்றும் அபிவிருத்தி மையம், டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டை, திருவான்மியூர். சென்னை 600 041

இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் குறியீடுகள் அல்லது இதர குறியீடுகளுக் கேற்ப பொருள்களின் தரம் உள்ளதா என்பதை ஆய்வு செய்து சான்றளிக்கிறது.

3. மின்னணு ஆய்வுக்கூடம், தொழிற்பேட்டை, மதுரை 625 007

மின்னணுப் பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டு சான்றிதழ் அளிக்கப்படுகின்றன.



# ஜப்பான் டாக்டருக்கு

## தமிழகத்தின் பாராட்டு

செய்ந்நன்றி மறவாச் செந்தமிழர் பண்பாட்டுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கியது. ஜப்பான் நாட்டு நரம்பியல் விஞ்ஞானப்பேராசிரியர் டாக்டர் கானுவுக்குத் தமிழ்நாடு அரசு 11-12-86 அன்று நடத்திய பாராட்டு விழா.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் உடல்நலங் குன்றியபோது தமிழ் மக்கள் பேரச்சத்திற்கு ஆளானார்கள். வேதனையின் விளிம்பில் தமிழ்நாடே நின்று கொண்டிருந்தபொழுது ஓடோடி வந்து உதவியவர் டாக்டர் கானு. அவர் அன்று கொண்டு வந்த மருந்து பேருதவியாக அமைந்தது. பிணி என்ன என்பதைக் கண்டுபிடித்த முறையும், எத்தகைய மருத்துவச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்கு உதவியது. இதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முழுமையான தலமெய்த முடிந்தது.

நம்முடைய முதல்வர் அவர்களின் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ள டாக்டர் கானு தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்திலும் நீங்கா இடம் பெற்றுள்ளார.

டாக்டர் கானுவுக்கு அரசு நடத்திய பாராட்டு விழாவுக்கு, தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அனைவரையும் வரவேற்றார்.

அ.இ.அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர், டாக்டர் எச். வி. ஹண்டே, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு டி. ராமசாமி, மாண்புமிகு தொழிலமைச்சர் திரு. க. ராசாராம், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன், மாண்புமிகு கல்வி சட்டத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன், முன்னாள் அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், விழாத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் தமது பாராட்டுரையில் பேசியதாவது:

"என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

நம் நாட்டில் நடைபெறும் பல மாநாடுகளில் கலந்து கொண்டு டாக்டர் கானு அவர்கள் உரையாற்றுகிறார்.

இவரைக் காண்பதில் மிக்க மகிழ்ச்சி.

டாக்டர் கானு அவர்கள் உலகில் தலை சிறந்த நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர்களில் ஒருவர்.

இளம் வயதிலேயே இத்துறையில் பேராசிரியர் பதவி வகிப்பவர்.


ஜப்பான் நாட்டில் பதினாறு மருத்துவமனைகள் இவருடைய கண்காணிப்பில் நடத்தப்பட்டு வருகின்றன.

சுமார் 136 நரம்பியல் அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள் இவரின் கீழ்ப் பணியாற்றுகின்றனர்.

சுமார் 300 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் 20 புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

இரத்த நாளங்கள் பாதிப்பால் உண்டாகும் மூளை நோய்கள்

**அட்டை சொல்லும் செய்தி**



டாக்டர் கானு அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். 10-12-86 அன்று அளித்த விருந்தின்போது அர்த்த நாரீஸ்வரர் சிலையை நினைவுப் பரிசாக அளித்தார்கள். மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் உடனிருந்தார்.

பற்றிச் சுயமான ஆராய்ச்சிகள் நடத்தி வருகிறார்.

உலகம் எங்கும் நடைபெறும் உலக நரம்பியல் மாநாடுகளின் தலைவராக இருந்து வருகிறார்.

நரம்பியல் துறை மட்டுமல்லாமல், பொது மருத்துவத் துறையிலும் சிறந்த ஞானம் உள்ளவர்.

இவ்வளவு சிறப்புகள் பெற்ற டாக்டர் கானு அவர்கள் இங்கு வந்திருந்து நம் எல்லோரையும் சிறப்பித்து இருக்கிறார். அவரை வருக வருக என்று மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது எல்லா உதவிகளையும் செய்ய உத்தரவிட்டதோடு, டாக்டர் கானு அவர்களை வரவழைத்த அன்னை இந்திரா அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க! நன்றி! வணக்கம்!''.

**சிறப்பு ஆலோசகர்**

**சிறப்புப் பேராசிரியர் :**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சென்னை பொது மருத்துவக் கல்லூரியின் நரம்பியல் அறுவைச் சிகிச்சைத் துறையில் சிறப்பு ஆலோசகர், சிறப்புப் பேராசிரியராக டாக்டர் கானு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அரசின் நியமன ஆணையை இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் டாக்டர் கானு அவர்களிடம் அளித்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், 1.6 கிலோ எடையுள்ள ஏறத்தாழ நான்கே கால் இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட சங்கிலியுடன் உள்ள தங்க யானையை நினைவுப் பரிசாக டாக்டர் கானுவுக்கு அளித்தார்கள்.

தனக்கு அளித்த பாராட்டுகளுக்கும் பரிசுக்கும் நன்றி தெரிவித்துப் பேசிய டாக்டர் கானு தமது உரையில் கூறியதாவது :

''கடந்த சில நாட்களாக சென்னை பொது மருத்துவமனையில் மூளை மற்றும் நரம்பு நோயால் பாதிக்கப்பட்ட ஏழை மக்களைச் சந்தித்து ஆலோசனை அளித்தேன். இத்தகைய நோயால் பாதிக்கப்பட்ட ஏழைக் குழந்தைகளின் பெற்றோர்கள் நம்பிக்கை தளராமல், தங்களின் குழந்தைகளுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளித்தால் உரிய பயன் கிடைக்கும்.

''எனக்குச் சகோதரனோ சகோதரியோ, கிடையாது. இரண்டாவது உலகப் பெரும் போரின்போது தந்தையைப் பறி கொடுத்தவன் நான். தாயின் பாதுகாப்பிலும் பராமரிப்பிலும் வளர்ந்த எனக்கு வறுமையும் ஏழை எளியோர் நிலையும் நன்கு தெரியும்.

*மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் சார்பில் 6-12-86 அன்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் டாக்டர் கானு அவர்களுக்கு 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினார்.*





ஜப்பான் நாட்டு நரம்பியல் மருத்துவ அறிஞரான டாக்டர் டெட்சு கானு அவர்கள் தம்முடைய பதினைந்து நாள் இந்தியச் சுற்றுப் பயணத்தின் தொடக்கமாக (5-12-86) சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தடைந்தபோது மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வரவேற்றார்.

''தற்பொழுது எனக்குக் கிடைத்த சிறப்புகள் எல்லாம் என் தாய்க்குக் கிடைத்த சிறப்பே ஆகும்! எனக்கு அளித்த பரிசுகளை என் தாயிடம் காட்டி அவர்களின் வாழ்த்துக்களைப் பெறுவேன்.''

இந்நிகழ்ச்சியில் நரம்பியல் மருத்துவ வல்லுநர் டாக்டர் நரேந்திரன் நன்றி கூறினார்.

**மதுரையில் டாக்டர் பட்டம்**

மதுரைப் பல்கலைக் கழக விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள், டாக்டர் கானுவுக்குச் சிறப்பு டாக்டர் பட்டத்தை (டாக்டர் ஆஃப் சயின்ஸ்) 6-12-86 அன்று வழங்கினார்.

**சென்னையில் ஃபெலோஷிப் விருது**

9-12-86 அன்று, சென்னை மருத்துவக் கல்லூரி டாக்டர் கானு அவர்களுக்கு ஃபெலோஷிப் விருதை வழங்கியது.

சென்னை மருத்துவக் கல்லூரியின் சார்பில் திருமதி ராஜம் பாரதி நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவை ஆற்றினார் டாக்டர் கானு.

பாரிசவாயு என்னும் நோய் குறித்தும், ஜப்பானில் அளிக்கப்படுகின்ற சிகிச்சை குறித்தும், சிலைடுகள் காண்பித்து விரிவுரையாற்றினார்.

அப்போது அவர் தெரிவித்த சில செய்திகள் வருமாறு:

''பாரிசவாயு என்று சொல்லப்படும் பக்கவாத நோயினால் கடுமையாகத் தாக்கப்பட்டவர்களுக்கு மூளையில் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. அதனால் 24 மணி நேரத்திலேயே முன்னேற்றம் காணப்படுகிறது.

''எந்தவிதச் சிகிச்சையும் செய்ய இயலாது என்று கைவிடப்பட்ட நபர்கள் - இந்த நோயின் காரணமாக எந்தவிதச் செயல்பாடும் இல்லாத விதத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள்-இந்த அறுவைச் சிகிச்சையின் மூலம் பயன்பெற்றுள்ளனர் என்பது பல்வேறு ஆய்வுகளின் வாயிலாகத் தெரிய வந்துள்ளது.

''ஸ்டிமுலேட்டர் பொருத்தி அதன் மூலம் மூளையின் செயல்பாட்டைத் தூண்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதில் வெற்றி கிடைத்துள்ளது. உணர்வையே இழந்த அவர்கள், பிறர் சொல்வதைக் கேட்கவும் புரிந்து கொள்ளவும் தொடங்கியுள்ளனர்.

''ஜப்பான் நாட்டைப்பொறுத்தவரை பல்வேறு மருத்துவ, சுகாதார நடவடிக்கைகளின் வாயிலாக அங்குள்ள மக்களின் சராசரி வயது 75 ஆக உயர்ந்துவிட்டது.''

—நமது செய்தியாளர்



## டாக்டர் கானு

ஜப்பான் நாட்டு பூசிதா காகுவென் நல்வாழ்வுப் பல்கலைக் கழக மருத்துவப் பள்ளியின் நரம்பியல் அறுவை மருத்துவத்துறைத் தலைவரும் பேராசிரியருமான டாக்டர் டெட்சு கானு, அனைத்துலக அறுவைச் சிகிச்சை நிபுணரெனப் போற்றப்படுபவர்.

டோக்கியோவின் தொன்மையான பெருமைமிக்க கேயோ பல்கலைக்கழகத்தில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு படித்துப் பட்டம் பெற்றவர் டாக்டர் கானு. உலகிலேயே மிகப் பெரிய பக்கவாதப் பிணி நலமையமாகக் கருதப்படும் மருத்துவமனைக்கு இவர் தலைவர் ஆவார்.

நூற்று முப்பத்தாறு நரம்பியல் அறுவை நிபுணர்கள் கொண்ட பதினாறு பெரிய மருத்துவமனைகள் இவரது நேரடி நிருவாகத்தில் இயங்குகின்றன.

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் முதலிய நாடுகளில் நடைபெற்ற அறுவைச்சிகிச்சை நிபுணர்கள் மாமன்றங்கள் பலவற்றிற்குத் தலைமை ஏற்றிருக்கிறார் டாக்டர் கானு.

டாக்டர் கானு, சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாட்டுப் பல்வேறு பல்கலைக் கழகங்களில் சிறப்புப் பேராசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார்

நரம்பறிவியல் பொதுமைத் துறைத் தொடர்பாக முந்நூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும், இருபது நூல்களையும் எழுதியுள்ளார். தொற்றித் தொடராய்த் தீங்கு தரும் மூளைக் கட்டி நோய் நீக்க நோக்கும் இவர் ஆய்வு, வருங்காலத்தில் இந்நோயினின்றும் மனித இனத்தை உய்விக்க வழி உண்டாக்கும் எனக் கருதப்படுகிறது.

## சட்டமன்றம் நிறைவேற்றிய

# ஆட்சி மொழித் தீர்மானம்

இந்தி பேசாத மாநிலங்களில், ஆங்கிலமே ஆட்சி மொழியாக நீடிக்கும் என மறைந்த பிரதமர் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழி அரசியல் சட்டத்தில் இடம்பெற வலியுறுத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் தீர்மானத்தை, 13-11-'86 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு. சி. பொன்னையன் அவர்கள் முன்மொழிந்தார். அன்று வழக்கமான கேள்வி நேரம் சட்டப் பேரவையில் ரத்து செய்யப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் தனித்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீது பேசிய பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

பின்னர் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் விவாதத்தை முடித்து வைத்துப் பேசினார்.

அதன் பிறகு தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானத்தின் முழுவடிவம் வருமாறு:

"டாக்டர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, தமிழும் மற்ற தேசிய மொழிகளும் இணையத்தின் (யூனியனின்) ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்றும், அதன்படியே அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும், இதை ஏற்கும் வரையில் ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும் என்றும் ஆட்சிமொழி பற்றி அரசமைப்புச் சட்டத்தில உள்ள அத்தியாயத்தைத் தக்கவாறு திருத்த வேண்டும் என்றும் இந்த மன்றம் 1968 ஜனவரித் திங்கள் 23-ஆம் நாள் தீர்மானம் நிறைவேற்றியது.

தற்போதைய முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள், 'காலஞ்சென்ற அண்ணா அவர்களால் தெளிவுற உரைக்கப்பட்ட இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதுதான் இந்த அரசின் உறுதியான கொள்கை' என்றும், 'இந்தக் கொள்கை தமிழ்நாட்டு மக்களின் விருப்பங்களை முழுமையாக எடுத்துரைப்பதோடு, அவற்றை முழுமையாகப் பிரதிபலித்து நிற்கிறது' என்றும் ஆளுநரின் உரை வாயிலாக, 1977 ஜூலைத் திங்கள் 7-ஆம் நாள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மேலும் சர்க்காரியா கமிஷனுக்கு 1985 டிசம்பர் திங்களில் இந்த அரசு அளித்த அறிக்கையில் ஆங்கிலத்தை அரசமைப்பின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், எட்டாவது இணைப்புப் பட்டியலில் உள்ள எல்லா மொழிகளுமே இணையத்தின் ஆட்சி மொழிகளாக விளம்பப்பட வேண்டும் என்றும் அத்தகைய முடிவொன்று எடுக்கப்படும் வரையிலும் ஆங்கிலத்தையே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வர வேண்டும் என்றும் இந்த அரசு கருத்துத் தெரிவித்துள்ளது.

அவ்வப்போது இந்தி பேசாத மக்கள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தியைத் திணிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது, இந்திபேசாத மக்களுக்குப் பெருங்கவலையை ஏற்படுத்தி வருகின்றது. பொதுவாக, இந்தி பேசாத மக்களும் குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களும் காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால தரப்பட்டு, காலஞ்சென்ற, திருமதி இந்திராகாந்தி அவர்களாலும் தற்போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களாலும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுமான, உறுதி மொழியானது, அதாவது இந்தி பேசாத மக்கள் மாற்றம் ஒன்றை விரும்பாதவரை ஆங்கிலமே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும் என்கிற உறுதிமொழியை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்துள்ளனர்.

மையச் சட்டம் எண் 1—1968 இனால் திருத்தப்பட்ட ஆட்சிமொழிகள் சட்டத்தில் வகைமுறைகள் வெறும் சட்டரீதியான தன்மை வாய்ந்தவை என்பதால், நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையினரால நிறைவேற்றப்படும் ஒரு சட்டத்தினால் கூட இந்த வகை முறைகளை எந்தச் சமயத்திலும் மாற்றியமைத்துக் கொள்ள முடியும்—அல்லது ரத்து செய்து விட முடியும்; எனவே காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அளிக்கப்பட்டு, காலஞ்சென்ற திருமதி இந்திராகாந்தி அவர்களாலும், தற்போதைய பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உறுதிமொழிக்கு, அரசமைப்பு ரீதியான ஓர் அங்கீகாரத்தை அளிப்பதன் மூலமாக, ஆங்கில மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்குப் பெரிய அளவில் பாதுகாப்பினை உறுதிப படுத்திக் கொள்வது 'தவையானதாக உள்ளது.

அத்தகைய ஓர் அரசமைப்பு சட்டத் திருத்தம்தான் இந்தி பேசாத மக்களின் மனத்தில எழுந்துள்ள உண்மையான அச்ச உணர்வுகளையும் கவலைகளையும் நீக்குவதோடு, இந்தித் திணிப்பின் காரணமாக அவ்வப்போது எழுகின்ற குழப்பம், சீர்குலைவு, மற்றும் கடுமையான சட்டம் ஒழுங்கு சூழ்நிலைகள் ஆகியவற்றையும் தவிர்க்கும்.

அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவையும் சேர்க்கக் கருதப்பட்டு உள்ளவையுமான எல்லா மொழிகளையுமே இணையத்தின் ஆட்சிமொழிகளாக அங்கீகரிக்கும் வரை, ஆங்கில மொழியை மட்டும் இணையத்தின் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வருவது பற்றி அரசமைப்பு ரீதியான உத்தரவாதம் கொடுப்பதற்காக, ஆட்சிமொழி தொடர்பான அரசமைப்புச் சட்டம் 17ஆம் பத்தியை உடனடியாகவும் அவசியமாகவும் திருத்தி அமைத்தல் வேண்டும் என்று இந்த மன்றம் தீர்மானிக்கிறது."



# குழந்தைகள் மருத்துவத்துறைப் புதிய கட்டடம்

சென்னை - எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில், ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள புதிய 10 மாடிக்கட்டடத்தை மாண்புமிகு முதலவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் (8.12.86) திறந்து வைத்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் நடை பெற்ற இவ்விழாவில், தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

பொதுப்பணித்துறைத்தலைமைப் பொறியாளர் திரு என். பாலசுப்பிரமணியம் புதிய கட்டடம் பற்றிய விவர அறிக்கை படித்தார்.

மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் டி. துரைராஜ், உள்ளுறை மருத்துவ அலுவலர் திரு. சண்முகம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர். சண்முகம் ஆகியோர் இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார்கள்.

விழா முடிவில் டாக்டர் நர்மதா நன்றி கூறினார்.

ஆசியாவிலேயே வேறெங்கும் இல்லாத அளவுக்கு மிகப் பெரியதான இந்தப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய
தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும்
பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான
உடன்பிறப்புக்களே!

இந்தியாவில் மருத்துவ சேவையில் சிறந்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

மக்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டவன் நான். ஆகவேதான் தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகம், பெண்களுக்கு ஒரு பல்கலைக் கழகம், அண்ணாவின் பெயரில் தொழில் கல்விக்கு ஒரு பல்கலைக் கழகம் அமைத்தேன்.

இன்று மருத்துவக் கல்விக்குப் பல்கலைக் கழகம் ஒன்று அமைத்து இருக்கிறேன் எனப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவில் இதுபோல் வேறு எங்கும் இல்லை. மருத்துவத் துறையில் சிறந்த வல்லுனர்கள் நமது தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருந்து வருகிறார்கள்.

நீங்கள் எல்லோரும் உங்கள் கடமைகளை உணர்ந்து தொண்டு ஆற்றிட வேண்டும். அப்படிக் கடமை ஆற்றினால் நமது மருத்துவத் துறை உலகில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

உங்களுடைய சேவை கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும் எளிதாகக் கிடைக்க வேண்டும். முக்கியமாகக் குழந்தை நலத்திற்குத் தொண்டு செய்வதைத் தங்கள் பிறவிப் பயனாக நீங்கள் கருத வேண்டும்.

இந்தியாவில் குழந்தைகளுக்கு எனத் தனி யாக அமைத்துள்ள மருத்துவமனைகளில் இதுவே மிகப் பெரியதாகும்.

எந்தச் சமயத்திலும் 250 நோயாளிகளுக்கு மேல் சேர்க்கக் கூடாது. இந்தப் பல அடுக்கு கொண்ட புதிய கட்டடத்தைத் திறந்து வைக்கிறேன்; அதைக் குழந்தைகளின் நலனுக் காக அர்ப்பணிப்பதில் பெருமை அடைகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி.

வணக்கம்''

—நமது செய்தியாளர்





# தரமேம்பாட்டின் முக்கியத்துவம்

ஒரு பொருளை உபயோகிப்பவர் வாங்கும்போது, அவரது குறிப்பிட்ட ஒரு தேவையை நிறைவு செய்வதற்காகவே வாங்குகிறார். பொருள் தயாரிப்பாளரும் இத்தகைய தேவைகளை நிறைவு செய்யக் கூடிய வகையில் பொருள் அமைய வேண்டுமென்ற கருத்தில்தான் உற்பத்தியை மேற்கொள்ளுகிறார். ஆனால் பெருவாரியான நேரங்களில் இவ்வாறு உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருள் எல்லாச் சிறப்புகளையும் கொண்ட ஒன்றாக அமைவதில்லை. எந்த ஒரு இலக்குக்கு உகந்ததாகப் பொருள் அமைய வேண்டுமென்று தயாரிக்கப்படுகிறதோ, அதற்கும் உண்மையில் தயாரிக்கப்பட்டு உபயோகிப்பாளருக்குக் கிடைப்பதற்கும் இடையே ஓர் இடைவெளி அமைந்து வருகிறது. இந்த இடைவெளி மிகக் குறுகியதாக அமைந்தால் பொருள் தரம் மிக்கது எனவும், இடைவெளி மிகப் பெரியதாயிருந்தால் தரமே இல்லாத பொருள் என்றும் கூறலாம்.

**தரம் என்றால் என்ன?**

உபயோகிப்பவருக்குக் கிடைக்கப்படுகின்ற பொருள், அதன் விலை, தேவையானபோது அது உபயோகிப்பவருக்குக் கிடைக்கக் கூடிய தன்மை, உபயோகத்திற்கு மிகவும் உகந்ததாயிருத்தல் ஆகிய இந்த மூன்று அடிப்படைக் கூறுகளையும் நிறைவு செய்வதாக இருந்தால் அதனைத் தரமான பொருள் என்று கூறலாம். உற்பத்தியாகும் பொருள் அடிப்படையாகப் பெற்றிருக்க வேண்டிய குறிப்பிட்ட சில கூறுகளைக் கொண்டதாக உள்ளதா என்று அன்றாடம் உற்பத்தி நடவடிக்கைகளைப் பரிசீலிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளையே தரக்கட்டுப்பாடு என்கிறோம். பெருவாரியான பொருள்களுக்கு, உபயோகிப்பாளர்களது தேவைகளைக்கால நிறைவு செய்திட அவை பெற்றிருக்க வேண்டிய கூறுகள் எவை எவை என்பதனை இந்தியத் தர நிர்ணய நிறுவனம், இது போன்ற இதர நாடுகளில் உள்ள நிறுவனங்கள் இவற்றால் நிர்ணயித்து, அறிவிக்கப்பட்டிருக்கின்றன. உற்பத்தியில் உபயோகிக்கப்படுகின்ற மூலப் பொருள்கள் பெற்றிருக்க வேண்டிய தரக் குறியீடுகள் எவை, இறுதியாக உற்பத்தியாகும் பொருளில் இருந்திட வேண்டிய தகுதிகள் இவையெல்லாம் இக்கூறுகளில் தெரிவுபடுத்தப்படுகின்றன. அதாவது, அடிப்படையாக அவற்றில் எதிர்பார்க்கப்படும் தன்மைகள் எவை, அதிகமாக எந்த அளவிற்கு அவை இருந்திடவேண்டும் என்பதெல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றன.

**வி. சங்கரசுப்பையன்,**
**இ. ஆ. ப.,**
**ஆணையர் மற்றும் இயக்குநர்,**
**தொழில் வணிகத்துறை.**

நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில், நாட்டின் தேவைகளை நிறைவு செய்ய, பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிகளையே எதிர்நோக்க வேண்டிய நிலை இருந்தது. கடந்த நாற்பதாண்டுகளில் நாட்டில் தொழில் வளர்ச்சி மிகவும் சிறப்பான முறையில் அமைந்திருந்த போதிலும், நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களின் தரம், பொதுவாக அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் பொருள்களின் தரத்தோடு ஒப்பிடக்கூடியதாக அமைந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். நம் நாட்டிலுள்ள தொழில்கள் நிலைத்து நின்று, மேலும் வளர்ச்சி காண வேண்டுமானால், தரத்தின் அடிப்படையிலேயே உள்நாட்டிலும் வெளிநாட்டுச் சந்தைகளிலும் போட்டியிடவேண்டிய நிலை தற்போது உருவாகியுள்ளது. தர உயர்வு, தர உத்தரவாதம் ஆகியவை தொழில் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதவையாக உருவெடுத்துள்ளன.



**தரப்பரிசோதனை மற்றும் கட்டுப்பாட்டிற்குரிய வசதிகள்.**

பொருள்களின் தரத்தைப் பரிசோதனைகள் மூலம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தொழில்களை ஊக்குவிப்பதற்கென, மைய, மாநில அரசுகள் பல்வேறு வசதிகளையும் சலுகைகளையும் அளிக்கின்றன.

**இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் சான்றிதழ்கள்**

உற்பத்தியாகும் பொருள்களின் தரம் பற்றி உற்பத்தியாளரே எடுத்துச் சொன்னால் அது ஓர் விளம்பர உத்தியாகவே கருதப்பட வாய்ப்புண்டு. எனவேதான் பொதுவான ஓர் தேசிய நிறுவனம் பொருள்களின் தரத்தைப் பரிசோதித்து, தர உத்தரவாதத்திற்குச் சான்றளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது. இந்தச் சான்றிதழ்களைப் பெற்றிடும் சிறு தொழில்கள் வாங்கிடும் கடன் தொகைகளுக்குரிய வட்டியில், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் போன்றவை 1-2 சதவீத சலுகை அளிக்கின்றன. தரப் பரிசோதனைக்குரிய கருவிகளை வாங்க, சிறு தொழில்களிடமிருந்து ஏதும் எதிர்பாராமல் கடன் உதவி அளிக்கப்படுகிறது. மைய, மாநில அரசு நிறுவனங்கள் பண்டங்கள் வாங்குகையில், தரச் சான்றிதழ் பெற்றுள்ள பொருள்களுக்கே முன்னுரிமையளிக்கின்றன.

**பரிசோதனைக் கூடங்கள்**

தொழில்கள், அவற்றின் பொருள்களின் தரப் பரிசோதனைகளை மேற்கொள்ள உதவும் நோக்குடன் மைய, மாநில அரசுகள் பல்வேறு இடங்களில் பரிசோதனைக்கூடங்கள் அமைத்துள்ளன.

தமிழக அரசு, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய



கூடங்களில் இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடங்களையும், தூத்துக்குடியில் உப்பு மற்றும் கடல் படு இரசாயனப் பொருள் ஆராய்ச்சி நிலையத்தையும், சேலத்தில் சவ்வரிசி பரிசோதனை நிலையத்தையும் அமைத்துள்ளது. இந்நிலையங்களால் வழங்கப்படும் தரப் பரிசோதனைச் சான்றிதழ்களை இந்தியத் தர நிர்ணய நிறுவனம் ஏற்றுக்கொள்ளுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத் தொழில் வணிகத்துறையிடம், சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் பெற்றுள்ள சிறு தொழில்களுக்குப் பரிசோதனைக் கட்டணத்தில் 50 சதவீதச் சலுகை அளிக்கப்படுகிறது என்பதும் இங்குக்குறிப்பிடத்தக்கது.

மின்னணு மற்றும் மின்சாரத் தொழில்களுக்கென, தரப் பரிசோதனை மற்றும் பொருள் அபிவிருத்தி நிலையங்கள் சென்னை, மதுரை, காக்களூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. காக்களூரில் உள்ள மின்சாரப் பரிசோதனைக்கூடத்தால் குறிப்பிட்ட சில மின்சாரப் பொருள்களுக்கு அளிக்கப்படும் தரச் சான்றிதழ்களை இந்தியத் தர நிர்ணய நிறுவனம், இந்திய இரயில் துறை, அஞ்சல் துறை பண்டங்கள் வாங்கும், விற்கும் துறை இவை ஏற்றுக் கொள்ளுகின்றன. மைய அரசின் 1981ஆம் வருடத்திய மின்சார வீட்டு உபயோகச் சாதனங்கள் தரக்கட்டுப்பாடு ஆணையைச் செயற்படுத்திடும் பொறுப்பு தொழில் வணிகத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தர உயர்வு, விலைக்குறைப்பு இவற்றின் மூலம் எந்த அளவிற்கு வளர்ச்சியடைந்த நாடுகளும் வியக்கும் வண்ணம் சர்வதேச வாணிபத்தில் தலை சிறந்து விளங்க இயலும் என்பதை ஜப்பான், உலகுக்குச்சந்தேகத்திற்கே இடமில்லாத வகையில் எடுத்துக் காட்டியுள்ளது. எனவே தொழில்களைப் பொறுத்தவரை தர அபிவிருத்திக்கான முயற்சிகள் தொடர்ந்து அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாக உருவெடுக்க வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

# தரத்திற்கு உத்தரவாதம்

தரமான பொருள் என்ற உத்தரவாதம் தருவது ஐ.எஸ்.ஐ. முத்திரை.

இந்தியாவில் உருவான பொருட்களின் தரத்தை மதிப்பிட அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் பொருட்களின் தரம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்தப் பொருள் பிரிட்டனின் பொருளுக்குச் சமமானது என்று கூறித் தரம் பிரிக்கப்பட்டது. இருப்பினும், இந்தியப் பொருட்களின் தரத்தை மதிப்பிட இந்தியாவில் ஒரு நிறுவனம் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில், 1947-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 7ஆம் நாளன்று இந்தியத்தரநிறுவனம் ஐ.எஸ்.ஐ அமைக்கப்பட்டது.

இங்குப் பொருட்களின் தரம் முதலில் நவீன முறையில் பரிசோதிக்கப்படுகிறது. பின்னர் அறிஞர்களையும், நிபுணர்களையும் பிரதிநிதிகளையும் கொண்ட குழுவின் ஒப்புதல்படி ஐ.எஸ்.ஐ. முத்திரை பொறித்த அனுமதி வழங்கப்படுகிறது. வளரும் நாடுகளிலேயே இந்தியாவில் மட்டுமே தரத்தை முறையாகத் தீர்மானிக்கும் இப்படிப்பட்ட நிறுவனம் உள்ளது.

ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற உற்பத்தியாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு வருகின்றனர். ஏனெனில் ஐ.எஸ்.ஐ. முத்திரை பெற்ற பொருட்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நுகர்வோரால் விரும்பி வாங்கப்படுகின்றன. இந்த முத்திரையைப் பதிக்கும் உரிமையைப் பெறுவது எளிதல்ல. கடுமையான தரப் பரிசோதனைக்குப் பின்னரே அனுமதி கிடைக்கும், பொதுவாக ஒரு ஆண்டிற்கு மட்டுமே உரிமை அளிக்கப்படுகிறது.

பின்னர், ஐ.எஸ்.ஐ. அலுவலர்கள், உற்பத்தியாகும் இடத்திற்குத் திடீரென்று சென்று பொருட்களின் தரத்தை ஆராய்வர். தரக் குறைவு தென்பட்டால் ஐ.எஸ்.ஐ முத்திரை உரிமம் மறுக்கப்படும் அல்லது ரூ. 50,000 வரை அபராதம் விதிக்கப்படும். தரம் மேலும் கூடியிருந்தால் சிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும். அதற்கு ஐ.எஸ்.ஐ. மதிப்பீட்டுச் சான்றிதழ்த் திட்டம் எனப் பெயர்.

ஐ.எஸ்.ஐ. முத்திரை பலதரப்பட்ட பொருட்களுக்கும் வழங்கப்பட்டு நுகர்வோரின் தெரிவை எளிதாக்குகிறது. வாங்கும் பொருள் தரமானதுதானா என்ற ஐயத்தைத் தீர்க்கிறது. மீறி ஐயம் எழுமானால் ஐ.எஸ்.ஐ. முத்திரையிடப்பட்ட பொருளை ஐ.எஸ்.ஐ. நிறுவனமே கட்டணமின்றிச் சோதித்துத் தருகிறது.

மில், கைத்தறித் துணி வகைகள், மிக்ஸி, கிரைண்டர், குக்கர், மின்சாதனங்கள், மருத்துவத் தொழில் நுட்பப்பொருட்கள், பிஸ்கட், வனஸ்பதி, காபி, பால் பவுடர் போன்றவற்றுக்கும்எடை அளவை போன்றவற்றுக்கும் ஐ.எஸ்.ஐ. முத்திரை வழங்கப்பட்டுள்ளது. உலகத்தர அமைப்பு நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு நவீன முறையில் தரம் தீர்மானிக்கப்படுகிறது.

ஐ.எஸ்.ஐ. ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதனுடைய உறுப்பு அமைப்புகள் 333 ஆகும். இன்று அது சுமார் 4000க்கும் மேலாக உயர்ந்துள்ளது. இந்த நிறுவனத்தின் சந்தாத்தொகை ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்நிறுவனம் சுமார் 12,000 அல்லது 13,000 பொருட்களுக்குத் தரம் நிர்ணயித்துள்ளது. ஆண்டுக்கு ரூபாய் 12 கோடிக்கு வரவு செலவைக் கொண்டிருக்கும் ஐ.எஸ்.ஐ. நிறுவனம் மேலும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஐ.எஸ்.ஐ. நிறுவனத்திற்கு உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் ஒத்துழைப்பு இருப்பதால் சீரிய முறையில் பணி ஆற்ற முடிகிறது.






# மதுராந்தகத்தில்

# மக்கள் நலப்பணிகள்

மக்களின் அடிப்படைத்தேவை களை நிறைவு செய்து, வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்தியாவிலேயே முன்னோடி யாகத் திகழ்கிறது தமிழ்நாடு அரசு. அதனை மெய்ப்பிக்கும் வகையில், மக்கள் நலப்பணிகள்-வளர்ச்சிப் பணிகளில் நமது அரசு கொண்டுள்ள ஆர்வத்தையும் அக் கறையையும் எடுத்துக் காட்டியது அண்மையில் மதுராந்தகத்தில் பதினைந்துகோடி ரூபாய்க்குமேல் செலவிடப்படும் வளர்ச்சித் திட் டங்களை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த நிகழ்ச்சி!

மதுராந்தகம் நகருக்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர் களை வரவேற்க, 28-11-86 அன்று செங்கை நகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது.

மதுராந்தகம் நகரில் 72 திட்டங்களைத் தொடங்கி வைக்கவும், ஏரியின் சீரமைப்புப் பணியினைப் பார்வையிட்டு மதகுகள் கட்டப்பட்டிருப்பதை இயக்கி வைக்கவும் முதல்வர் வருகை தந்தார்.

சென்ற ஆண்டு தீபாவளியின் போது மதுராந்தகத்தில் வெள் ளக்காடு. வாழ்க்கையில் இருள் சூழ்ந்து இன்னல் விளைந்தது. இந்த ஆண்டும் வெள்ளம்தான்— ஆனால் இது மக்கள் வெள்ளம், ஒளி தவழ்ந்து, ஒவ்வொருவர் முகத்தில் மகிழ்ச்சிப் பூக்கள், ஓ! மக்கள் பாரம் தாங்காமல் மதுராந்தகம் அமுழ்ந்திவிடப் போகிறது!

'அப்படி ஆகாது. ஏரி காத்த ராமரைப்போல், எங்களைக் காக்கும் ராமரின் காலடியல்லவா படுகிறது...'

பல்லாயிரம் மக்கள் பங்கேற்ற மதுராந்தகம் விழா, செங்கை மாவட்டத்தில் ஒரு சரித்திரம் படைத்தது. மகளிர் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொண்ட னர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாத கூட்டம். விழா மேடை, வழித் தடங்கள், நகரின் முக்கிய வீதிகள் மின் அலங்காரம் செய்யப்பட்டு, கண் கொள்ளாக் காட்சியாக இருந் தன.

வழி நெடுக வரவேற்புத் தோரணங்கள்... வாழ்த்தியும் வணங்கியும், போற்றியும் பாராட்டியும் ஒட்டப்பட்ட வண் ணச் சுவரொட்டிகள்.....குழந் தைகள் முதல் பெரியோர்கள் ஈறாக அனைவர் முகங்களிலும் ஆனந்தக் களிப்பு.....

விழாவில் கலந்து கொள்ள மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் இரவு 7 மணக்கு வந்தபோது தாரை, தப்பட்டை, வாண வேடிக்கைகள் முழங்க, மக்கள் கடல், மகிழ்ச்சியால் கொந்த ளித்து ஆர்ப்பரிக்க, சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பேசியதாவது:

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே, என் ரத்தத் தின் ரத்தமான உடன் பிறப்பு களே, இந்த மாபெரும் விழா வில் நான் பங்குகொண்டு உங்



களைக் காண்பதில் மிக்கமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அரசு வெள்ளம், வறட்சி போன்ற நேரங்களில் போர்க் கால வேகத்தில் பணியாற்றி வருகிறது. புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை வேகமாகச் சரிசெய்து வந்திருக்கிறது.

மதுராந்தகம் ஏரி உடைப்பு ஏற்பட்டபின் குறுகிய காலத்தில் பழுது பார்க்கப்பட்டது. இன்று ஏரி முழுவதும் செப்பனிடப்பட்டு விட்டது.

ஏரியில் நீர்ப்பாசனத்தை அதிகரிக்கும் வகையில் உயர்மட்டக் கால்வாய் கட்டப்பட இருக்கிறது.

இதனால் வெள்ள அபாயம் தடுக்கப்படும். அதற்கான பணிகளை இன்று ஆரம்பித்து வைப்பதில் பெருமையடைகிறேன்.

அதனால் மேலும் 31 கிராமங்கள் பாசன வசதி அடையும்.

இத்திட்டத்துக்கு 4.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

மக்களின் வசதிகளைப்பெருக்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இந்த அரசு பல வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகின்றது. 6 நகரங்களுக்கும் 54 ஒன்றியங்களுக்கும் மொத்தம் 3 கோடியே 86 இலட்சம் செலவில் குடிநீர்த்திட்டப் பணிகள் இன்று தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றன.

நலிவுற்ற மக்களின் நல்வாழ்வில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு உள்ளது. ஆதிதிராவிடர்களுக்குச் சிறுதொழில் நடத்த உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித்தொகை, ஏழைகளுக்கு நிலம் மற்றும் வீட்டு மனைப்பட்டாக்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

அண்ணா நாமம் வாழ்க!
நன்றி வணக்கம்.''

**வளர்ச்சிப் பணிகள்-**
**மக்கள் நலப்பணிகள்:**

பொதுப்பணித் துறையினரால் மதுராந்தகம் ஏரி உயர் மட்டக் கால்வாய் வெட்டும் திட்டம். இந்தத் திட்டத்தால் 31 கிராமங்கள் பயனடையும். இதற்கு ஆகும் செலவு ரூ. 4.5 கோடி.

தமிழ்நாடு ஆழ்கிணறு வாரியம், குழாய்க் கிணறுகள் அமைக்கத் தேவையான துளைக்கருவிகள் வாங்குவதற்காக ஒரு கோடியே 16 இலட்சம் ரூபாயினை அரசு வழங்கியது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் முடிக்கப்பட்ட பணிகள் நான்கு ஆகும். இதற்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை ஏறத்தாழ ரூபாய் ஆறரை லட்சம். குடிநீர்வடிகால் வாரியம் தொடங்கவிருக்கும் 60 புதிய பணிகளுக்கு ஆகும் செலவு ஏறத்தாழ 3 கோடியே 87 இலட்சம்.

மதுராந்தகம் நகராட்சியில் அமைக்கப் பெறும் திட்டங்கள்— 100 குடிநீர்க் குழாய்கள், 17 மெர்குரி ஆவி விளக்குகள் அமைக்கச் செலவிடப்படும் தொகை ரூ. 14 லட்சத்து 64 ஆயிரம்.

ரூபாய் எட்டு லட்சம் செலவில் கட்டவிருக்கும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பணிமனை கால்கோள் விழா.

மதுராந்தகம் வட்டம் வீரண்ணகுன்னம் கிராமத்தில் ஏறத்தாழ 3 லட்சம் ரூபாய் செலவில் பள்ளி வகுப்பறைகள் கட்டும்பணி.

செங்கல்பட்டு கோட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் 96 பணிகள். இப்பணிகளுக்கு ஆகும் செலவு ரூ. 17 லட்சத்து 64 ஆயிரம்.

ரூபாய் நான்கு லட்சம் செலவில் மாமண்டூர் ஆதிதிராவிடர் செங்கல் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் செங்கற் சூளை கால்கோள் விழா.

இந்தப் பணிகளோடு, 2831 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியும் ஆதரவற்றோர் 89 பேருக்கு உதவித்தொகை வழங்கியும். சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 466 பேருக்கு உதவித் தொகை வழங்கியும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினரால் அளிக்கப்படும் தொழில் கருவிகளை வழங்கியும்-

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் சார்பில் காஞ்சி வட்டம் வளத்தூரில் துணை சுகாதார நிலையத்தைத் திறந்து வைத்தும், நலிந்தோர் கடன், இறந்த அரசு ஊழியர்களுக்குக் குடும்பநல நிதி முதலிய உதவித் தொகைகளை வழங்கியும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புச் செய்தார்.

## சிறு சேமிப்பில் சிறந்த சாதனை

**இந்தியாவில் தனியார் துறையில், சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருவதற்காக, மதுரை கோட்ஸ் நிறுவனம் 1985-86ஆம் ஆண்டுக்கான விருது பெற்றிருக்கிறது. 6,000 தொழிலாளர்களைக் கொண்ட இந்த நிறுவனத்தில் 6,950 சேமிப்புக் கணக்குள் இருக்கின்றன. மாதந்தோறும் தொழிலாளர்கள் இக்கணக்குகளில் ரூ. 1,95,000 முதலீடு செய்கிறார்கள்.**

**விழா நிகழ்ச்சி**

மதுராந்தகத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. பாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள், தலைமை வகித்தார். மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தலைவர் திரு எஸ். டி. உக்கம்சந்த், தமிழ்நாடு விவசாய உயர் மட்டக் குழுத் தலைவர் திரு முனுஆதி, கதர் கிராமத்தை தொழில் வாரியத் துணைத் தலைவர் கவிஞர் நா.காமராசன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு ஜி. கே. ஜெயபாரதி மற்றும் திருமதி டி. யசோதா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு சா. ராமதாஸ் நன்றி நவின்றார்.

விழாவில் முன்னதாகப்பொதுப் பணித்துறை(பாசனம்) தலைமைப் பொறியாளர் திரு எஸ். முகமது முஸ்தபா திட்ட விளக்கவுரையை வாசித்தார். அவ்வுரையில், "மதுராந்தகம் ஏரிக்குக் கூடுதலாக வரும் வெள்ள நீரை வெளியேற்ற உடைப்பட்ட இடத்தில் ரூ. 84 லட்சம் செலவில் புதிய கலிங்கல் கட்டி முடிக்கப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் ஏரியின் முழு நீர் மட்டத்துக்கு வரும் முன்பே வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீரை வெளியேற்ற முடியும். இதனால், வெள்ளக் காலத்தில் உடைப்பு ஏற்படாது'' என்று அவர் குறிப்பிட்டார்.

—நமது செய்தியாளர்




SAA/NIA/2802/TM


முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**



# தரமே பெருமை தரும்

அனைத்துப் பொருட்களின் தரத்தை மேம்படுத்த, தரமென்றால் என்ன என்பதை மக்கள் அறியச் செய்ய 1986ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் இந்தியா முழுதும் தரமேன்மைத் திங்களாகக் கொண்டாடப்பட்டது.

தரப் பராமரிப்பின் அவசியம், உற்பத்தியாளரின் கடமை, நுகர்வோரின் தர உணர்வு இவை குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அரசின் சார்பிலும் தனியார் நிறுவனங்கள் சார்பிலும் கருத்தரங்குகள், விளக்கக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு அரசு தொழில் துறையின் சார்பில் மாநில அளவிலான சிறப்புக் கூட்டம் ஒன்று 28.11.86 அன்று சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வருகை தந்தோரைத் தொழில்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு.வெ. செல்வராஜ், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார்.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.க.இராசாராம் அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது:

``அனைத்துப் பொருட்கள் தயாரிப்பிலும் அதிக உற்பத்தித் திறன், செலவுக் குறைப்பு, நல்ல தரம், நியாயமான லாபம் இவற்றை முன்னிறுத்திச் செயல்பட்டால் அது மக்களுக்கு ஆற்றும் சிறந்த சேவையாக அமையும். தரமான பொருட்களை உற்பத்தி செய்வதில் அக்கறை காட்ட வேண்டும்.

பொருட்களை வாங்கும்போது எந்தவொரு நாட்டிலும் இல்லாத நிலைமை நம் நாட்டில் உள்ளது. அதுதான் கலப்படம். அடுத்தது பேரம் பேசும் தன்மை. விலை சற்று அதிகம் இருந்தாலும் தரமான பொருட்களையே நுகர்வோர் வாங்க வேண்டும். கலப்படம் பல கிராமங்களில் இன்றும் இருந்து வந்தாலும் கூட்டுறவு, தனியார் துறைகளில் தரமான பலபொருள் அங்காடிகள் பெருகி உள்ளதால் தற்போது பரவாயில்லை.

பொருட்களைப் பரிசோதனை செய்யத் தமிழக அரசின் சார்பில் ஆராய்ச்சிக் கூடங்கள் பலவற்றை உருவாக்கி வருகிறோம். மின்னணு, இரசாயனம் போன்ற பொருட்களின் தரத்தைப் பரிசோதிக்கவும் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 84-85 ஆம் ஆண்டில் 30,000 பொருட்களும், 85-86ஆம் ஆண்டில் 60,000 பொருட்களும்பரிசோதிக்கப்பட்டன. இதன காரணமாக அகில இந்திய மார்க்கெட்டில் நமது பொருட்களுக்கு நல்ல மதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

நுட்பமான சோதனை வசதிகள் கொண்ட பரிசோதனை நிலையங்களைத் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இந்தியத் தர நிர்ணயக் கழகம் ஏற்படுத்த வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள பரிசோதனை நிலையங்களில் இரசாயனத் தொழில் தொடர்பான பொருட்களைச் சோதனை செயயச் சோதனைக் கட்டணத்தில் பாதித் தொகைக் கட்டணச் சலுகையை மின்சாரம் மற்றும் மின்னணு தொழில்களுக்கும் விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது''.

'உற்பத்தித்திறன் உயர்விற்குத் தர நிர்வாகம்' என்ற தலைப்பில் 'இண்ட்செம்' எலக்ட்ரானிக் நிறுவனத்தின் தலைவர் திரு எஸ். குமார் உரையாற்றினார். தரக் கட்டுப்பாட்டை ஒரு கலாச்சாரமாகக் கருதிச் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கத் தலைவர் திரு கே.யூ. நாயுடு 'தரம் -சீரிய பொருள் விற்பனைக்கு ஒரு கருவி' என்ற தலைப்பில் உரையாற்றுகையில், 'நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தர மேம்பாடு கொண்ட பொருட்களை உற்பத்திசெய்வது உற்பத்தியாளரின் கடமை. அப்பொருட்களுக்கு தமது ஆதரவைத் தருவது மக்களின் பொறுப்பு' என்றுகூறினார்.

ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு.வி.சங்கரசுப்பையன் இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

இந்நிகழ்ச்சிக்குத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஆகியவை ஒத்துழைப்பு நல்கின.




# தெலுங்கு கங்கைத் திட்டம் விரைவில் நிறைவேற தீவிர நடவடிக்கை

''சென்னைக்குக் குடிநீர் வழங்குவதற்கான தெலுங்கு-கங்கைத் திட்டததை வரைவில் நிறைவேற்ற ஆந்திர முதல்வர் என.டி. ராமராவைச் சந்தித்துப் பேசுவேன்'' என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அறிவித்தார்.

சென்னை நகருக்கான குடிநீர்த் திட்டங்கள், கழிவு நீர்த்திட்டங்கள், ஐக்கிய நாட்டுக்குழு நீர் ஆய்வுத் திட்டம் ஆகிய ரூ.15 கோடிக்கான துட்டபபணிகளை 27.11.86 அன்று அறிஞர் அணணா நகர் திருமங்கலத்தில் மாணபுமிகு முதல்வர் டாக்டா எம்.ஜி.ஆர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே, ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புகளே, இந்த அரசு தமிழக மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதில் தீவிரப் பணி ஆற்றி வருகிறது.

''நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின், குடிநீர் வழங்குவதற்காக இது வரை 428 கோடி ரூபாய் செலவு செய்துளளோம். அதில் 60 கோடி ரூபாய் சென்னைப் பெருநகருக்காக மட்டும் செலவு செய்துள்ளோம்.

''வறட்சிக் காலங்களில் தண்ணீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க பல இடங்களிலிருந்து வாகனங்களில் தண்ணீர் கொணடு வந்து வழங்கப்படுகிறது. சென்னைப் பெருநகருக்குத் தண்ணீர் தாராளமாகக் கிடைக்க ஆந்திர மாநில அரசு உதவியுடன் தெலுங்கு கங்கைத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கான பணிகள் தமிழக எல்லைக்குள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் செயலாக்கம் குறித்து பிரதமருக்கும், ஆந்திர முதல்வருக்கும் கடிதம் எழுதி இருக்கிறேன். ஆந்திர முதல்வருடன் விரைவில் பேசப் போகிறேன்.

''சென்னைப் பெருநகரில் மேலும் பல பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கத் திட்டம் போடப்பட்டுள்ளது. பல இடங்களில் கழிவு நீரகற்று நிலையங்கள் உருவாக்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டங்களுக்காகச் சுமார் 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளின் முதல் கட்டமாக அண்ணா நகர் மேற்கு மற்றும் வில்லிவாக்கம் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.3.75 கோடி செலவிலான திட்டம் இன்று தொடங்கப்படுகிறது.

''இவற்றை உங்களுக்கு அர்ப்பணிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டங்களால் நீங்கள் நல்ல பயன் பெறுவீர்கள் என்று வாழ்த்துகிறேன்.

''அண்ணா நாமம் வாழ்க, நன்றி, வணக்கம்''.

முன்னதாக, சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியததலைவர் திரு ஜேப்பியார் அவர்கள் வரவேற்றுப் பேசுகையில்—

''ரூபாய் பதினைந்து கோடிக்கான இந்தத் திட்டங்களில் ஏறத்தாழ பததுக் கோடி ரூபாய் மட்டும் குடிநர்த திட்டததுக்கானவையாகும். அத்தியாவசியத தேவையான இந்தக் குடிநீர்த் திட்டத்தை ஒரு காண்டிராக்டாிடம் விட்டால் மூன்று ஆணடுகள் ஆகும் என்று சொன்னார்கள். விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகப் பலபேர் மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறோம். அந்தவகையில் 12 மாதங்களில் குடிநீர் கிடைக்கும் அளவில் செய்யப்படும்'' என்றார்.

மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு க. ராசாராம் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில்:

''வரலாற்றுச்சிறப்புமிக்க இந்த விழாவில், சுத்தமான சுகாதாரமான குடிநீர்த் திட்டப் பணிகளுக்கு அடிகோலப்படுகின்றது. குடிதண்ணீர் வாரி வழங்குகிற ஒப்பற்ற வள்ளலாகப் புரட்சித்தலைவர் அவர்கள் விளங்குகிறார். கடந்த ஒன்பது ஆண்டுக்காலத்தில் எத்தனையோ காரியங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கோயில்களில் ஒரு புரட்சியை உண்

# ரூ.15 கோடி செலவில் பயனுள்ள திட்டங்கள்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், ரூ 15 கோடிச் செலவில் சென்னை நகருக்கான குடிநீர்த் திட்டங்கள், கழிவு நீர்த்திட்டங்கள், ஐக்கிய நாட்டுக்குழு நீர் ஆய்வுத்திட்டம் ஆகியவற்றை மேற்கு அண்ணா நகரில் தொடங்கி வைத்தார். அவற்றின் விவரம் வருமாறு:

கொளத்தூர், வில்லிவாக்கம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்:

மதிப்பீடு ரூ. 277 இலட்சம்
பயன்பெறும் மக்கள்தொகை 92,000
குடிநீர் அளவு: நாளொன்றுக்கு 46.44 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாய்களின் நீளம்: 8.6.கி.மீ.

திருமங்கலம், மேற்கு அண்ணாநகர், மத்திய அரசு குடியிருப்புப் பகுதிகள் ஆகியவற்றிற்கு மேலே கூறப்பட்ட திட்டத்தின் தொடர்ச்சியாகக் குடிநீர் வசதி அளித்தல்:

மதிப்பீடு: ரூ.141 இலட்சம்.
பயன்பெறும் மக்கள்தொகை 78,390.
குடிநீரின் அளவு: நாளொன்றுக்கு 5.59 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாய்களின் நீளம்: 8.60 கி.மீ.

எருக்கஞ்சேரி, கொடுங்கையூர் பகுதிகளில் குடிநீர் வசதியில்லாத பகுதிகளுக்குக் குடிநீர் வசதியளித்தல்:

மதிப்பீடு: ரூ.146 இலட்சம்
பயன்பெறும் மக்கள்தொகை:27,000
குடிநீர் அளவு; நாளொன்றுக்கு 1.89 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாய்களின் நீளம்: 36 கி.மீ.

திருவான்மியூர் தெற்குக் கரையோரப் பகுதிகளிலிருந்து நிலத்தடி நீரினைக் கொணர்ந்து தென்சென்னைத் தொகுதி, திருவான்மியூர், கனகம்-தரமணி, வேளச்சேரி பகுதிகளுக்கு வழங்குதல்:

திட்ட மதிப்பீடு: ரூ.250 இலட்சம்
மக்கள்தொகை: 64,000
நீர்த்தேவை நாளொன்றுக்கு 3.36 மில்லியன் லிட்டர்.
குடிநீர்க் குழாயின் நீளம்:சுமார் 18 கி.மீ.

கழிவுநீரகற்று வசதி;

அரும்பாக்கம் மேற்குப் பகுதிகளுக்குக் கழிவு நீரகற்று வசதியமைத்தல்:

மதிப்பீடு : ரூ.273 இலட்சம்
பயன்பெறும் மக்கள் தொகை: 27,000
கழிவு நீர்க் குழாய்களின் நீளம்: 16. கி.மீ.

பெரியார் நகருக்குக் கழிவு நீரகற்று வசதியளித்தல்:

மதிப்பீடு: ரூ.232 இலட்சம்
பயன்பெறும் மக்கள் தொகை 15,000
கழிவுநீர்க் குழாய்களின் நீளம்: 13 கி.மீ.

ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் குழு ஆய்வு - ரூ. 148 இலட்சம்:

ஐக்கிய நாட்டு வளர்ச்சிக் குழு தன்னுடைய முதல் கட்டமாகிய நிலநீர் ஆய்வு மற்றும் செயற்கை நில ஊடுருவு மூலம் நிலத்தடி நீரைச் சிக்கனமாக உபயோகப்படுத்தும் வழியைக் கண்டறிந்தது. அதன் தொடர்ச்சியாக 2 வது கட்டமாக ஏரிகளின் நீரையும் நிலத்தடி நீரையும் ஒருங்கிணைத்து வழங்கும் முறையைக் கையாள்வதற்காக ஆய்வு செய்ய உள்ளது.

பகுதி ஐந்து அலுவலகம் கட்டுதல்:

மதிப்பீடு:ரூ. 10.00 இலட்சம்.

அண்ணாநகர் பகுதியைச் சார்ந்த மக்கள் நுகர்வோர் தேவைகளான குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வசதிகளில் ஏற்படும் குறைபாடுகளை கவனிப்பதற்காக அப்பகுதியிலேயே பகுதி-5 அலுவலகம் கட்டப்படும்.

டாக்கியவர் நமது புரட்சித்தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள (பல்) கோயில்களில் சமபந்தி போஜனத்தைக் கொண்டு வந்தவர். வேளாண்மை பெருகிட, சிறு விவசாயிகள் வாழ்ந்திட மானியங்கள் தந்தவர்: தொழில் துறையில் வளம்பெருகிட உதவி வருபவர்'' என்று கூறினார்.

சென்னைப் பெருநகர்க் குடிநீர் நிர்வாக இயக்குநர் திரு துரைசுந்தரேசன், இ.ஆ.ப. அவர்கள் குடிநீர்த் திட்டப் பணிகளை விளக்கிக் கூறினார்.

திரு ஜெயபாரதி எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''இருபது அம்சத் திட்டத்தினை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்குகிறது'' என்றார்.


திருமதி வளர்மதி எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், ''தண்ணீர் பிரச்சினை போக்குகின்ற வகையில் பல நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன' என்றார்.

குடிசைமாற்று வாரியத் தலைவர் திரு பா அங்கமுத்து அவர்கள் பேசுகையில்;'மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில், ஏழைகள் ஏற்றம் பெற்று வருகிறார்கள். அவர்களின் வீட்டுக் கஷ்டத்தைப் போக்கக் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிக் குடியிருப்புகளைக் கட்டி வருகிறார்'' என்றார்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு திருப்பூர் மணிமாறன் அவர்கள் பேசுகையில், ''வீட்டு வசதி வாரியப் பணிகளை, அமெரிக்கா, ஜெர்மனி நாட்டிலிருந்து வந்த குழுவினர் மிகவும் பாராட்டியுள்ளார்கள். இதேபோல சத்துணவுத் திட்டத்தையும் மேலை நாட்டினர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்'' என்றார்.

வாரியத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசாக வெள்ளித் தட்டு ஒன்றை, திரு ஜேப்பியார் அவர்கள் வழங்கினார்.

—நமது செய்தியாளர்



# வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி தந்தவர்

''வீழ்ச்சியுற்ற தமிழகத்திற்கு எழுச்சி தந்தவர்; அரண்மனையிலே உலவிய அழகு தமிழை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தவர், பண்டிதர் மத்தியிலே விளங்கிய தமிழைப் பாமர மக்கள் மத்தியிலே கொண்டு வந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்'' என்று மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புகழாரம் சூட்டினார்.

உலகத் தமிழராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத் திறப்பு விழா மற்றும் தமிழகக் கலைச் செல்வங்கள் தொடர்க் கருத்தரங்கத் துவக்க விழா 28.11.86 அன்று சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் நடந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''யார் இந்த நிறுவனத்தை உருவாக்கக் காரணமாக இருந்தார்களோ, அவரது திருவுருவப்படத்தைத் திறந்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுக்குச் சொல் சுவை ஏற்றியவர்கள்; பொருளுக்குப் பொருள் ஏற்றம் தந்தவர்கள்.

''பேரறிஞர் அண்ணா அவர்களிடம் இரண்டு வன்மைகள் இருந்தன. ஒன்று நாவன்மை. மற்றொன்று பேனா வன்மை. இதைத் தவிர அவருக்குப் பண வன்மை போன்ற எதுவும் இருந்ததில்லை. அவர் மிகமிகச் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். 'அவரைப் போன்று இவர்' என்று சொல்வதற்கு எவரும் இல்லை; அவருக்கு இணையே இல்லை''.

தமிழ் வளர்ச்சி உயர் மட்டக் குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ சிவஞானம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்:

''தமிழைப் பயிற்று மொழியாகப் படித்தவர்களுக்கு, அரசுப் பணியில் முதலிடம் தரப்படும் என்று அறிவித்தால் அதனால் பயன் ஏற்படும் என்று கருதுகிறேன். உலகில், ஒவ்வொரு துறைக்கும் பத்திரிகைகள் இருக்கின்றன. அதைப் போல ஆட்சி மொழித் துறைக்கும் பத்திரிகை அவசியமாகும். 'தமிழாட்சி' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை அரசு தொடங்கலாம். இது ஒரு 'கெஜட்' மாதிரி விளங்க வேண்டும். ஆட்சி மொழி தொடர்பான ஐயங்களைத் தெளிவுபடுத்துவதாக இந்த இதழ் அமைய வேண்டும்''

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் பேசுகையில், ''இந்த நிறுவனம் தலை சிறந்த கோட்பாட்டை விரிந்த அளவில் பன்முகத்தால் ஆராய்கின்ற நிறுவனமாகத் திகழவேண்டும்'' என்று கூறி, கருத்தரங்கம் வெற்றிபெற வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்.

தொடக்கத்தில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் அ.நா பெருமாள் வரவேற்புரை நிகழ்த்தினார்:


''இந்த நிறுவனம் 1968 இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் உள்ளத்து உணர்ச்சியாக உருவம் பெற்றது. நிறுவனம் இதுவரை 126 நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழ் அல்லாதவர்க்கான மொழிப் பயிற்சியையும் நிறுவனம் தருகிறது. தமிழ் நாடகக் கலைக்களஞ்சியம் ஒன்றையும் தயாரித்து வருகிறது.

''பாரெல்லாம் பரந்து வாழும் தமிழர்களைப் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றை நிறுவனம் வெளியிட முனைந்துள்ளது. இது 1987 இல் வெளிவரும்''.

உலகத் தமிழராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் க.த. திருநாவுக்கரசு நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்

# பிரெஞ்சு அகராதியைத் தயாரித்த தமிழர்!




**பி**ரெஞ்சு - தமிழ் அகராதியை தமிழர் ஒருவர் தயாரித்திருக்கிறார்!

அவர் பெயர் திரு ந.கைலாசம். வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தத்தைச் சேர்ந்தவர். 44 வயதுள்ள இவர் 1972-இல் பொழுதுபோக்காகப் பிரெஞ்சு மொழியைக் கற்க ஆரம்பித்தார். பிறகு அதன் இனிமையிலே மயங்கி அம்மொழியை முழுவதுமாகப் படிக்கத் தொடங்கி அதில் தேர்ச்சியும் பெற்றார்.

பிறகு அவர் மனத்தில் பிரெஞ்சு-தமிழ் அகராதி ஒன்றைத் தயாரிக்க வேண்டும என்ற எண்ணம் முளைத்தது. அதற்காக இவர் பல நூல்களைத் தேடிப் படித்தார். குறிப்புகள் எடுத்தார். மாலை 6 மணியிலிருந்து இரவு12 மணி வரை அகராதித் தயாரிப்பில் தீவிரமாக ஈடுபட்டார். இரவு எழுதியதைக் காலையில் சரி பார்ப்பார். இப்படி மூன்று ஆண்டுகள் உழைத்து இந்த அகராதியை உருவாக்கினார்.

''நெடுநாளைய என் கனவு நனவானது. பிரெஞ்சு மொழியில் புலமை மிக்க புதுச்சேரி எஸ். மார்க்கண்டன் அவர்களிடம் அகராதியைக் கொடுத்து வாழ்த்துகள் பெற்றேன். பிறகு என் சொந்தச் செலவிலேயே அதை அச்சிட்டேன். 1983-இல் இது வெளி வந்தபோது நான் மகிழ்ச்சிக் கடலில் நீந்தினேன்'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் திரு கைலாசம்.

பிரெஞ்சு-தமிழ் அகராதியில் 15,000 சொற்கள் உள்ளன. இதன் விலை ரூ. 30. பிரெஞ்சு நாட்டுக் கல்வி அமைச்சர் திரு ஜான்பியர் செவனுமான் அவர்கள் இந்த அகராதியைப் பார்த்துவிட்டு, ''அகராதியைக் கண்டு பிரமிப்பு அடைகிறேன். இது தமிழ்நாட்டுக்கும்பிரெஞ்சு நாட்டுக்கும்கலாச்சாரத்தொடர்பினை அதிகப்படுத்தும் நூல்'' என்று கருத்து தெரிவித்திருக்கிறார்.

இந்த அகராதியைத் தயாரித்ததற்காக, புதுவை மத்தியப் பல்கலைக் கழக ஓராண்டு நிறைவு விழாவில் இவருக்குச் சிறப்பு தரப்பட்டது.

இந்த அகராதி, ஆரம்பநிலையில் பிரெஞ்சு கற்க விரும்புவோர்க்குப் பெரிதும் உதவும். தமிழில் வெளிவரும் முதல் அகராதி என்ற பெருமையோடு விளங்கும் இது, இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. முதற் பிரிவில் பிரெஞ்சுச் சொற்களுக்குத் தமிழில் பொருள் கூறப்பட்டுள்ளது. இதில் சுமார் 10,000 சொற்கள உள்ளன. இரண்டாவது பிரிவில் தமிழ்ச் சொற்களுக்குப் பிரெஞ்சில் பொருள் தரப்பட்டுள்ளது. இதில் சுமார் 5,000 சொற்கள் உள்ளன.

''பிரெஞ்சு மொழிச் சொற்களை இன்றும் பாண்டிச்சேரியில் தமிழுடன் கலந்து பேசும் வழக்கம் உண்டு. அந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றுக்குத் தமிழில் இரண்டு அல்லது மூன்று வார்த்தைகளைப் பொருள் விளங்குமாறு கொடுத்திருப்பது இதிலுள்ள சிறப்பம்சம்'' என்று கூறும் திரு கைலாசம், சென்னையில் பாரத ஸ்டேட் வங்கியில் பணியாற்றி வருகிறார். திருமணமாகாத இவரின் எதிர்காலத் திட்டம்:

பிரெஞ்சு நாட்டோடு வணிகத் தொடர்புள்ள கலைச் சொற்களை ஆங்கிலம் - பிரெஞ்சு மொழியில் தயாரித்தல்: பிரெஞ்சு நாட்டுச் சிறுகதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தல்: தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கவியரசு கண்ணதாசன் ஆகியோரின் சிறுகதைகளைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்தல்.

பேட்டி: பி. வி. கிரி

## கொழுப்புச் சத்து உணவால் புற்று நோய் வரலாம்!

**கொ**ழுப்புச்சத்து நிறைந்த உணவு, புற்றுநோய்க்கு வழி வகுக்கக்கூடும் என்று டாக்டர் ஜான் ஹிக்கின்சன் என்னும் அமெரிக்க நிபுணர் எச்சரித்திருக்கிறார்.

வயிறு, பெருங்குடல், மலக்குடல், மார்பகங்கள் ஆகிய இடங்களில் புற்றுநோய் தோன்றுவதற்கு, உணவில் கொழுப்புச்சத்து அதிகம் இருப்பதுதான் காரணம் என்று கருதப்படுவதாகவும், ஆப்ரிக்காவிலும் இந்தியாவிலும் இந்த நோய் பரவலாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவில், புற்றுநோய் காரணமாக மாண்டவர்களில் 35 சதவீதம் பேருக்கு, அவர்களது உணவுப் பழக்கங்கள் காரணமாகவே அந்த நோய் ஏற்பட்டதாக டாக்டர் ஜான் ஹிக்கின்சன் தெரிவித்தார்.

அமெரிக்கர்கள் பெரும்பாலோர் 40 'கலோரிகள்' அளவுக்குக் கொழுப்புச்சத்தை உட்கொள்கின்றனர்; புற்றுநோய், இதய நோய் முதலியவற்றைத் தவிர்க்க வேண்டுமானால், கொழுப்புச் சத்து உணவு 30 'கலோரிகள்' அளவுக்கே இருக்க வேண்டும்.

வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சி', 'பீட்டா-கரோட்டின்' beta-carotene என்னும் உயிர்ச் சத்துப் பொருட்கள் நிறைந்த பழவகைகளையும், காய்கறிகளையும் அதிகம் உண்ண வேண்டும். 'பீட்டா-கரோட்டின்' சத்து பச்சைக் காய்கறிகளில் அதிகம் உள்ளது; இரைப்பையில் உணவு செரிக்கும் போது இந்தச் சத்து 'வைட்டமின்-ஏ' ஆக மாற்றப்பட்டு விடுகிறது.

இரத்தத்தில் 'பீட்டா-கரோட்டின்' சத்து குறைவாக உள்ளவர்களுக்கு, நுரையீரல் புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயம், மற்றவர்களைவிட 4 மடங்கு அதிகமாக உள்ளது. 'வைட்டமின்-இ' சத்துக் குறைவாக இருந்தாலும், நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான அபாயம் இரண்டரை மடங்கு அதிகமாக உள்ளது. காய்கறிகளில் 'வைட்டமின்-இ' சத்து அதிகம் உள்ளது.



# காவலருக்கு வீடும் விருதும்!

**இரா. அண்ணாதுரை**
மாவட்டச் செய்தி
மக்கள் தொடர்பு அலுவலர்
கோயமுத்தூர்

**நா**ட்டு விடுதலைக்குப் பின்னர் மக்களாட்சி பூத்ததன் விளைவாக மக்கள் நல்வாழ்வுப் பணிகளிலும் காவல்துறை தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருகிறதென்பதை அத்துறையின் பணியை உற்றுநோக்குபவர்கள் உணர்வார்கள். சிறப்பான-துணிவான - தீரமிக்க - தியாகமிக்க நற்பணிகளைச் செய்து வருகிற காவல்துறை, தீ அணைப்புத் துறை, சிறைத்துறை, மற்றும் ஊர்க்காவல் படையினருக்கான ''தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்'' வழங்கும் விழா கடந்த நவம்பர் திங்கள் 23-ஆம் நாளன்று கோவையில் நேரு விளையாட்டு அரங்கில் சிறப்பாக நடந்தேறியது.

மக்களைத் தன் இமை போல் கடமை உணர்வுடன் காத்து நிற்கும் காவலர்களுக்கும் நல்ல காவலராய் விளங்கி நிற்கும் தமிழக முதல்வரின் திருக்கரங்களினால் பதக்கம் வழங்கப்பட்ட பெருமைமிக்க - சிறப்புமிக்க நிகழ்ச்சியின்போது நேரு விளையாட்டரங்கம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் காவல்துறை இயக்குநர் திரு கே.ரவீந்திரன் வரவேற்றுப் பேசுகையில் ''இந்தியாவின் வேறு எந்த மாநிலத்திலும் உயர்மட்ட காவலர்களுக்கும் மற்ற காவலர்களுக்கும் இதுபோல் விருதுகள் வழங்கப்படுவது இல்லை. காவல்துறை மானியமாக இந்த ஆண்டுக்கு ரூ.21 கோடி வழங்கப்பட்டுள்ளது. இதுவும் இதுவரை நடைபெறாத ஒன்றாகும்'' என்று கூறினார்.

திறந்த ஜீப் மூலம் திடலில் அணி வகுத்து நின்ற காவலரின் அணிவகுப்பை மாண்புமிகு முதல்வர் பார்வையிட்ட பின் தீரச் செயலுக்கான முதலமைச்சரின் காவல் பதக்கங்களை 10 பேருக்கு வழங்கினார். தொடர்ந்து சிறப்புப் பணிக்கான முதலமைச்சரின் காவல் பதக்கங்களை 45 காவல்துறை அலுவலருக்கும், சிறப்புப் பணிக்கான முதலமைச்சரின் தீயணைப்புப் படை பதக்கங்களை 10 பேருக்கும் சிறைத்துறை அலுவலர்கள் 7 பேருக்கும், ஊர்க்காவல் படையினர் 3 பேருக்கும் முதலமைச்சர் அவர்கள் அணிவித்தார். பதக்கங்களை அணிவித்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பேசியதாவது:

''என்னை வாழ வைக்கும் தெய்வங்கள் ஆகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புக்களே!

காவல் துறையினருக்கு 'முதலமைச்சர் பதக்கம்' வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகக் காவல்துறை கடமையாற்றுவதில் பெரும்புகழ் பெற்றுள்ளது.

மக்களையும் சட்டம் ஒழுங்கையும் காப்பாற்றுவதில் நமது காவல்துறை தலை சிறந்து விளங்குகிறது.

குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைப் பிடிக்கவும், வன்முறையை அடக்கவும் காவல் துறை விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.

கடமையைச் செய்யும் காவலர்களுக்கு இந்த அரசு என்றும் பக்கபலமாக இருக்கும்.

காவல் துறையின் சீரிய பணிக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்த அரசு வழங்கும்.

காவலர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் பரிவுடன் நான் கவனிப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

சிறப்பாகப் பணியாற்றிய காவல் துறையினர்க்கு முதலமைச்சர் பதக்கங்களை மகிழ்ச்சியுடன் அணிவிக்கிறேன்.



## நத்தத்தில் புதிய சார்நிலைக் கருவூலம்

அண்ணா மாவட்டம், நத்தம் தாலுகாவில் ரூ. 4.73 லட்சம் செலவில் கட்டப்பட்ட புதிய சார்நிலைக் கருவூலக் கட்டடத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 10.11.86 ஆம் நாளன்று திறந்து வைத்தார்.

அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டை, நத்தம் ஆகிய ஊர்களில் சார்நிலைக் கருவூலங் களுக்குச் சொந்தக் கட்டடங்கள் உள்ளன. விரைவில் கொடைக்கானலிலும் பழனியிலும் சார்நிலைக் கருவூலங்கள் கட்டடப்படவுள்ளன.

தமிழகத்தில் 196 சார்நிலைக் கருவூலங்கள் உள்ளன. இவ்வாண்டு 8 புதிய சார்நிலைக் கருவூலங்களும் கட்டக்கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

தமிழக காவலர் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அந்த வீடுகளைக் காவலர்களுக்கு வழங்குவதில் பெருமையடைகிறேன்.

தமிழகக் காவல்துறையைச் சிறப்பாக நடத்திச் செல்லும் தலைமை அதிகாரிகளையும், உயர் அதிகாரிகளையும், காவல் துறையின் அனைத்து உடன்பிறப்புக்களையும் பாராட்டுகிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

நன்றி. வணக்கம்.''

—இதே விழாவில் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் ஒரு கோடியே 94 இலட்ச ரூபாய் செலவில் கோவையை அடுத்த கணபதியில் காவலர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள 432 குடியிருப்புக்களையும், சீரநாயக்கன் பாளையத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ரூ. $1\frac{1}{2}$ கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 156 வீடுகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. மணிமாறன் குடியிருப்பு போன்ற வடிவமைப்பை முதல்வருக்கு நினைவுப் பரிசாக வழங்கி உரையாற்றினார்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. அபுல்ஹசன் அவர்கள் வெள்ளியால் ஆன ஸ்தூபியை மாவட்ட மக்கள் சார்பில் நினைவுப் பரிசாக மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வழங்கினார். அதன் மேல் பகுதியில் தாமரைப்பூ போல அழகிய வடிவில் அமைக்கப்பட்டு இருந்தது. விழா இறுதியில் தமிழ்நாடு காவல்துறை வீட்டு வசதி கழகத் தலைவர் திரு கி.இராதா கிருஷ்ணன் நன்றி கூறினார்.

விழாவின் கடைசி நிகழ்ச்சியாக காவல்துறையின் கவின்மிகு கலை நிகழ்ச்சிகள் நடந்தன. திறன் மிக்க காவலர்களின் கவாத்து அணிவகுப்பு, வண்ண ஆடையில் காவலர்கள் ஒரே எண்ணத்தில் நின்று செய்கின்ற உடற்பயிற்சி விளையாட்டுகள், திகைக்க வைக்கும் திறன் கொண்ட ''ஜிம்னாஸ்டிக்'' பயிற்சிகள், மயிர்க் கூச்செறியச் செய்யும் "கராத்தே" சண்டைகள், மாநிலம் முழுவதும் இருந்து வந்துள்ள காவல்துறையின் இசை விருந்து ஆக அனைத்தும் கண்கொள்ளாக் காட்சியாய் மக்கள் மனதில் நீங்கா இடம் பெறும் வகையில் அமைந்தன. காவலர் வாழ்வில் பொன்னாளாக, அத்துறையின் வரலாற்றில் பொன்னேடாக, கோவை நகரில் நடைபெற்ற அந்தக்கோலாகலத் திருவிழா அமைந்திருந்தது.

# நூல் நயம்

நூல் நயம்

நூல் நயம்

## பிழையின்றி எழுதுங்கள்

ஆசிரியர்: தமிழப்பன்
வெளியீடு: தமிழ்மொழிப் பதிப்பகம்,
19, சானிகான்கான்தெரு
ராயப்பேட்டை,
சென்னை-14.

விலை: ரூ.4
பக்கம்: 55

கரணம் தப்பினால் மரணம் என்பதுபோல்-மொழியைப் பிழைபட எழுதினால் அர்த்தம் மாறி அனர்த்தம் ஆகிவிடும் என்ற கருத்தையும், பிழையின்றி எழுத வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்நூலின் வாயிலாக வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

பிழைகள் நேரும் விதத்தை-சான்றுகளுடனும் நகைச்சுவை உணர்வுடனும் குறிப்பிட்டு, பிழை செய்வோரைத் திருத்த முயல்கிறார்.

ஒற்றெழுத்துக்கள், மிக வேண்டாத இடத்தில் மிகுவதால் ஏற்படும் பொருள் மாற்றத்தையும் நெடில் குறிலாக எழுதப்படும் போது ஏற்படும் பொருள் மாற்றத்தையும் சுட்டிக்காட்டி விளக்குகிறார்.

பல்லாண்டுகளுக்கு முன்னர் பொன்னி ஆசிரியர் முருகு சுப்ரமணியம் அவர்கள் 'பிழை நீக்க எழுவீர்' என்று ஒரு கட்டுரை எழுதி, மொழியைத் தக்க வகையில் பயன்படுத்தவேண்டும் என்று தெரிவித்திருந்தார். அவர்து லட்சியத்துக்கு ஆதரவுதரும் வகையில் இந்நூல் எழுந்துள்ளது என்று குறிப்பிடலாம்.

பிழைபட எழுத நேருகின்ற சில சொற்களையும் அவற்றின் பொருளையும் விளக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

—எஸ். எல். சுந்தரம்

## ஒரு விடிகாலைப்பொழுதின் சாட்சியங்கள்

ஆசிரியர்: சகுந்தலை
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600098

விலை: ரூ.15 பக்கம் 224

16 கதைக்களைக் கொண்டதொரு தொகுப்பு நூல். சாதி வேறுபாடற்ற-ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைக் காண விரும்பும் ஆசிரியரின் உள்ளம் புலனாகின்றது.

மருத்துவமனைகளிலும் கூடபெண்மைக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை, 'தேவனே தேவனே' என்ற கதை அழகாகச் சித்திரிக்கின்றது.

சமுதாயத்தின் அடித்தளத்தில் மண்டிக்கிடக்கும் களைகளைக் களைந்தெரிய முனையும் ஆசிரியரின் வேட்கை அனைத்துக் கதைகளிலும் வெளிப்படுகின்றது.

பொதுவுடைமைக் கருத்துக்களைக் கொண்டது, 'எங்கள் பெருமூச்சுகளுக்கெல்லாம் ஒரு அர்த்தம் இருக்கும்' என்ற கதை.

வாழ்ந்துகெட்ட குடும்பம் பற்றியது, 'பட்டமரம் பிரிந்த பறவைகள்'

வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் குடும்பந்தான் 'ஒரு விடிகாலைப் பொழுதின் சாட்சியங்கள்' கதையில் நடமாடவிடப்பட்டுள்ளது. இறந்து விட்ட குழந்தையைக் கட்டிப் பிடித்து, கதறிஅழக்கூட முடியாத பரிதாபமான சூழலிலுள்ள நொண்டித் தந்தையின் மனப் போராட்டமும் ஏழைத்தாயின் ஏக்கங்களும் நன்கு சொல்லப்பட்டுள்ளன.

வட்டார வழக்கு மிகுதியும்பயன் படுத்தப்பட்டுள்ளது.

—டாக்டர் சிவஅரசி முத்துக்காளத்தி

## மிகப் பெரிய நூலகம்!

சோவியத் நாட்டிலேயே மிகப் பழமை வாய்ந்த நூலகம் ஒன்று லெனின்கிராடு நகரில் உள்ளது. இதன் பெயர் ''சால்திகோவ்-ஷ்கெத்ரின் பொது நூலகம்''.

இப்போது இதன் புதிய பிரிவுக்குப் புதிய கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இந்தப் புதிய பிரிவு 2 கோடி நூல்கள் வைப்பதற்கும், 2,000 வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்கும் ஏற்றதாகும். இதில் 16 பெரிய படிப்பறைகள் இருக்கும். இந்த நூலகம் 1795ல் தோன்றியது. ரஷ்ய மொழியில் வெளிவந்த பெரும்பாலான நூல்கள் இங்கு உள்ளன. மொத்தம் 3 கோடி புத்தகங்கள் இந்த நூலகத்தில் இருக்கின்றன.

## பூவுக்குள் பூகம்பம்

ஆசிரியர்: பட்டுக்கோட்டைராஜா
வெளியீடு: பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம்மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

விலை ரூ.20.00 பக்கம்: 251

பல வகை மலர்களால் தொடுக்கப்பட்ட கதம்பமாலை இந்நூல். ஒவ்வொரு மலரும் தனித்தன்மையோடு மணம் பரப்புவது போல் ஒவ்வொரு கதையும் யதார்த்தமாக, தனித்தனியே துலக்கமாக வெவ்வேறு கருவையும், கோணத்தையும் கொண்டிருக்கின்றன.

உணர்ச்சி மயமான அழுத்தமான வார்த்தைகள், எனினும் எழுத்துச் சிக்கனம் கையாளப்பட்டிருக்கின்றது. சிறுகதைகளுக்குத் துவக்கமும் முடிவுமே சிறப்புச் சேர்ப்பவை. இந்நூலில் உள்ள அத்தனை கதைகளிலும்மேற்கண்ட சிறப்பைச் சேர்க்க எடுத்துக் கொண்ட கவனம் மன நிறைவைத் தருகிறது.

இளந்தலை முறையினரின் எழுத்து வேகம், ஆற்றலுக்கு ஆசிரியர் ஓர் உதாரணம்.

இதில் பல கதைகள் 'பூவுக்குள் பூகம்பம்' 'தாழம்பூவே வாசம் வீசு' போன்று இதயத்தைத் தொட்டு, கனக்க வைக்கின்றன. நினைவில் நிற்கின்றன.

தமிழில் மிக அதிகமான (நல்ல) சிறுகதைகளைக் கொண்ட முதல் தொகுப்பு நூல் இதுவாகத்தான் இருக்குமென்று எண்ணுகிறேன். சிறுகதைகளின் எண்ணிக்கை நாற்பது.

—க. குமாரசாமி

## கனவில் வந்தவள்

ஆசிரியர்: முவேந்தர் முத்து.
வெளியீடு: பூவழகி பதிப்பகம்.
31, சீனிவாசப் பெருமாள்

சன்னதி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:148. விலை:ரூ.11.

முதல் கதையில், கொலை செய்யப்பட்டவர்கள் ஆவியாக வந்து பழிவாங்குவார்கள் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இரண்டாவது கதை, கல்லூரி மாணவியைப் பற்றியது. இங்கேயும் ஆவி அவருடன் பேசி கடைசியில் கூட்டிச் செல்கிறது.

ஏழைச் சிறுவன் பெற்றோரை இழந்து இளைஞனானதும், பட்டணம் சென்று வேலை பார்த்துக் கதை எழுதி, காதலி அதைப் பத்திரிகையில் பிரசுரிக்க அலைந்து ஏமாந்து, இறுதியில் ஒரு பெண் தன் தந்தை நடத்தும் பத்திரிகையில் அதை வெளியிட, அதைப் பார்க்காமலேயே அவன் இறந்துவிட ஆரம்பத்தில் அறிமுகமான செங்கமலம் என்ற பெண் அவனது ஆவியின் பாதுகாப்பில் அவன் சமாதி அருகே பண்ணை வைத்துக்கொண்டு சிந்து பாடுகிறாள்....

இப்படிக் கதை ஓட்டங்கள் மூன்று கதைகள் இந்நூலில் உள்ளன. பொழுது போக்காகப் படிக்க நிறைய சம்பவங்கள். நல்ல கற்பனை. சுவாரஸ்யமான நடை.

## பாவேந்தர் வாழ்க்கைப் பாங்கு

ஆசிரியர்: மன்னர்மன்னன்,
வெளியிட்டோர்: முத்து பதிப்பகம்,
269, கிழக்குப்பாண்டி வீதி
விழுப்புரம்-605202

பக்கம்-96 விலை ரூ.11.00

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரை நாம் பார்த்திருக்கிறோம்; அவரது எழுத்தோவியங்களைப் படித்திருக்கிறோம். ஆனால் அவரது வாழ்க்கைச் சம்பவங்கள்?

பாவேந்தரின் மகனார் திரு. மன்னர் மன்னன் அவர்கள் அவற்றின் தொகுப்பாகவே இந்நூலை உருவாக்கியிருக்கிறார். எழுத்தில் அவர் வடித்த ஓவியங்கள், அவரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு இணைந்து காணப்பட்டனவா என்பதை ஒப்பிட்டுப் பார்க்க உதவும் நூல் இது.

புரட்சிக் கவிஞரின் கவிதைகள் பல ,அவரது வாழ்க்கைச் சம்பவங்களின் காரணமாகவே விளைந்திருக்கின்றன என்பது இந்நூலில் இணைத்துக் காட்டப்பட்டிருக்கிறது. குடும்பத்தாருடன், நட்பினருடன், அரசியல் சீர்வாய்ந்தாரிடம், அயலாரிடம் அவர் எப்படிப் பேசினார் -பழகினார், நடந்து கொண்டார் என்பன பற்றிய சிறுசிறு சம்பவங்களை படிக்கிறபோது, புரட்சிக்கவிஞரை நேரிலேயே பார்ப்பது போலிருக்கிறது நமக்கு.

—பி.எல்.ஆர்.

## பஞ்ச தந்திர அறிவுரைகள்

தொகுப்பாளர்: முல்லை பி.எல். முத்தையா

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-98.

விலை : ரூ. 7. பக்: 112.

உலகப் புகழ் பெற்ற பஞ்ச தந்திரக் கதைகள் என்னும் நூலிலிருந்து சேகரிக்கப்பட்ட அறிவுரைகளின் தொகுப்பு இது.

இந்தியாவின் தென் பகுதியில், அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து, ஆட்சி செலுத்திய மன்னன் ஒருவனின் மூன்று மைந்தர்களும் படிப்பறிவில்லாதவர்கள். உலக அறிவு முழுவதையும் சிறுகதைகள் மூலமும் அறிவுரைகள் மூலமும் விளக்கி அவர்களை அறிவிற் சிறந்தோராக்குகிறார் விஷ்ணு சர்மன் என்ற அறிஞர்.

அரசிளங்குமரர்க்கு அந்த அறிஞர் போதித்த அறிவுரைகளே பஞ்ச தந்திர அறிவுரைகள்.

''பலவீனத்தால் தலை வணங்குபவனும், சுயமதிப்பு இல்லாதவனும், புல்லுக்குச் சமமான நிலையை அடைகின்றான்.''

''அளவோடும், இதமாகவும், நன்கு யோசித்தும், அர்த்தத்தோடும் பேசக்கூடியவனால் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும்.''




இப்படிஎல்லாக் காலத்திற்கும், எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையிலான அறிவுரைகள் ஏறத்தாழ 400-க்கும் மேல் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. எத்தரப்பாரும் இவற்றைப் படித்துப்பயன் பெறலாம். —வி. இராவணன்

## சாமானியனின் சகாப்தம்

ஆசிரியர்: பேரறிஞர் அண்ணா.
தமிழாக்கித் தொகுத்தவர்: மு.நமசிவாயம்.
விற்பனை உரிமை:
அபிராமி பப்ளிகேஷன்ஸ்.
307, லிங்கி செட்டி தெரு,
சென்னை-600 001.
விலை ரூ.7.00 பக்கம்.90.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரையை, இனிய தமிழில் நூலாக்கியிருக்கிறார் தொகுப்பாசிரியர்.

இந்தப் பேருரையில், தொடக்கத்திலிருந்து இறுதிவரை சாதாரண - சாமானிய மக்களின் பெருமையைக் குறித்தே அண்ணா தெரிவித்திருப்பதால் இந்நூலுக்கு சாமானியனின் சகாப்தம் என்று பெயரிடப்பட்டிருப்பது பொருத்தம்.

ஒவ்வொரு வரியும் ஒரு வைரம்; ஒவ்வொரு சொல்லும் ஒரு பொன் மலர். கற்கண்டின் இனிமை, சந்தனத்தின் குளுமை இந்நூலைப் படிக்கும்போது நமக்குக் கிடைக்கிறது. அடேயப்பா! எத்தனை வரலாற்றுச் செய்திகள்! எத்தனை அரிய போதனைகள்! எத்தனை தத்துவங்கள்! எத்தனை பகுத்தறிவுப் பிரச்சாரங்கள்!

மாணவ மணிகள் நல்வாழ்வு பெற வேண்டும், உயர் வாழ்வு பெற வேண்டும் என்ற நல்லெண்ணம் இந்நூல் முழுதும் காணக் கிடைக்கின்றது.

பேரறிஞர் அண்ணா பாசமுள்ள அண்ணனாக பண்புமிக்க தந்தையாக - பரிவுமிக்க ஆசானாக இந்நூலில் காட்சி தருகிறார்.

ஆங்கிலத்திலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டதுபோல் தோன்றவில்லை. அண்ணாவே அழகுத் தமிழில் இந்நூலை உருவாக்கியிருக்கிறார் என்று நினைக்கும் அளவுக்கு, மொழிபெயர்ப்பைச் சிறப்பாகச் செய்திருக்கிறார் தொகுப்பாசிரியர் மு.நமசிவாயம்.

—தமிழ்ப்பித்தன்

# மீன் உற்பத்தியில் ஓர் புதிய சாதனை



**கோ. வி. பரசுராமன்**
**சென்னை மண்டல மீன்துறை துணை இயக்குநர்**

வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராய் விளங்கும் வேலூருக்குச் செல்பவர்கள் கலையழகுடன் மிளிரும் கவினுறு கோவிலின் பின்னணியுடன் காணப்படும் கோட்டை அகழியை நிச்சயம் காணாமல் இருக்கமாட்டார்கள். இந்த அகழியில்20-ம் நூற்றாண்டு துவக்கத்திலிருந்தே மீன்பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வகழியானது 20-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அதாவது 1918-ஆம் ஆண்டு இறுதியில் மீன் துறையின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. இவ்வகழி கோட்டையைச் சுற்றி இருந்தாலும் இவற்றில் மண் மூடிவிட்ட காரணத்தினால் தற்போது இரண்டு பகுதிகளில் மட்டும் நீர் வரத்து இருந்து வருகிறது. இந்த நீர்ப் பரப்பில் முதலாவதாகச் சுற்றுப்புற சூழநிலையை மாற்றவும், கொசு உற்பத்தியைக் குறைக்கவும், மீன்வளர்ப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேலும் இவ்வகழியில் மீன்பிடிக்கும் உரிமை 1949-ஆம் ஆண்டு வரை தனியாருக்கே குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. 1950-ஆம் ஆண்டு முதல் இத்துறையே இந்த அகழியில் மீன் விட்டு வளர்த்து மீன் உற்பத்தியைப் பெருக்க உயர் ரக மீன்களான கட்லா, ரோகு, கண்ணாடிக் கெண்டை முதலிய மீன் குஞ்சுகளை வளர்க்க முன் வந்தது. மேலும் இவ்வகழியைச் சுத்தமாகப் பாசி பிடிக்காமல் இருக்க புல்கெண்டை, வெள்ளிக் கெண்டை போன்ற மீன்களும் இவ்வகழியில் வளர்க்கப்பட்டன.

துவக்கக் காலத்தில் 1950 முதல் 1960 வரை ஆண்டொன்றிற்கு 10 முதல் 15 டன்னாக இருந்து வந்த மீன் உற்பத்தியை இத்துறையின் தீவிர மீன்வளர்ப்பு முறைகளினால் இவ்வகழியின் மீன் உற்பத்தியானது பெருக்கப்பட்டு வந்து, 1976-77-ல் மிக உயர்வான உற்பத்தியாக 51 டன் அதாவது 5 மடங்குக்கும் அதிகமாக மீன் உற்பத்தி மட்டுமல்லாது அரசாங்கத்திற்கு வருவாயும் 5 மடங்காக-ரூ. 5,000 ஆக இருந்த வருமானம் ரூ. 57,000 ஆக அதிகரிக்கப்பட்டது. இங்கு பிடிக்கப்படும் மீன்கள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் பிடிக்கப்படுமிடத்திலேயே விற்பனை செய்யப்படுகிறது.


இவ்வகழியின் மொத்த நீர்ப் பரப்பு தற்சமயம் 4.83 எக்டேர் ஆகும். கடந்த ஆண்டுகளில் பிடிக்கப்பட்ட 51 டன் எடை மீன்களே இவ்வகழியின் சாதனை ஆகும். இந்த அகழியின் இதர உதவாத மீன்களை அகற்றி தரமான மீன்களை வளர்த்து உற்பத்தியைப் பெருக்க நவீன கூட்டு இனமீன் வளர்ப்புமுறை கையாளப்பட்டு வருகிறது. இந்த முறையைப் பயன்படுத்திய பின் இவ்வகழியின் உற்பத்தியானது எக்டேருக்கு ஆண்டுக்கு 9 டன் என்ற விகிதத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதனால் அரசுக்கு ஆண்டுக்குக் கிடைக்கும் வருமானமானது ரூ. 1 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது ஒரு புதிய சாதனையாகும். மேலும் இது அகில இந்திய ரீதியிலே உள்நாட்டு மீன்வளர்ப்பின் சாதனையையும், ஒரு புதிய ஊக்கத்தையும் அளிக்கிறது எனக் கூறினால் மிகையாகாது. ஏனெனில் அகில இந்திய உள்நாட்டு மீன்வள உற்பத்தி ஒரு ஆண்டிற்கு எக்டேருக்கு $7\frac{1}{2}$ டன்கள்தான். ஆனால் அதையும் மிஞ்சும் வகையில் வேலூர் கோட்டை அகழியின் மீன் உற்பத்தி கடந்த இரு ஆண்டுகளில் ஒரு புதிய சாதனையை அகில இந்திய ரீதியில் ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.


புரத உணவு மிகக் குறைவாக உள்கொள்ளுவதாலேயே மூளை வளர்ச்சி, கண் பார்வை, உடல் வலிமைக் குறைவுகள் அதிக அளவில் ஏற்படுவதை மீன் உண்பதன் மூலம் தவிர்க்கமுடியும். புரதச்சத்தானது மிருக மாமிசத்திலும், கோழி மாமிசத்திலும் முட்டையிலும் இருந்தாலும், இவை மீனினுடைய புரத உணவிற்கு ஈடாகாது. ஏனெனில் மீன் ஒரு முழு அளவிலான புரதச்சத்துள்ள உணவு ஆகும். இது மிகவும் இலகுவாக ஜீரணிக்கக்கூடியதாகும்.

மீன் மற்ற எந்த மாமிச உணவையும் விட மிகவும் விலை மலிவானதும் ஆகும். மீன் உணவாக மட்டும் பயன்படுவதுடன், மீன்வளர்ப்பினால்வருமானத்தையும் அதிக அளவில் பெறலாம். மீன் வளர்ப்பு கழனிகளில் நெல் சாகுபடி செய்வதைக் காட்டிலும் அதிக வருமானத்தைத் தரக்கூடியது. இதனை முழுமையாகச் சொல்லவேண்டுமானால், 'ஒருவனுக்கு மீனைக் கொடுத்தால் அது அவனுக்கு ஒரு நாள் உணவாகும். ஆனால் அவனுக்கு மீனை வளர்க்கக் கற்றுக்கொடுத்தால் அம்மீனானது அவனுக்கு வாழ்நாள் முழுவதும்உணவளித்து வாழ்வளிக்கும்' என்பது ஒரு சீனப் பழமொழியாகும்.

ஆகவேதான் வேலூர் கோட்டை மீன்வளர்த்து பெருமளவில் உற்பத்தி செய்வதுடன் மிதப்புக் கூடுகளில் தரமான நுண்மீன்குஞ்சுகளை வெளிமாநிலங்களிலிருந்து கொண்டு வந்து அவைகளை வளர்த்து விநியோகிப்பதன் மூலம் மீன் வளர்ப்பவர்களை ஊக்குவிப்பதுடன், நாற்றங்கால்களில் மீன் குஞ்சுகளை வளர்க்கும் முறையை மாற்றி இவ்வாறு மிதப்புக்கூடுகளில் அதிக விழுக்காடுடன் நுண் மீன்குஞ்சுகளை விரலளவு மீன் குஞ்சுகளாக வளர்க்கலாம் என்றும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

மீன்வளர்ப்போம்-புரதச்சத்து நிறைந்த மீன்உற்பத்தியைப் பெருக்குவோம்! மலிவு விலைக்கு மக்களுக்கு மீன் கிடைக்க வழி காணுவோம்.





அழகன் குளத்தின் ஒரு பகுதி.

# அழகன் குளம்

## பாண்டிய நாட்டின் பழம் பெரும் துறைமுகம்

— மாமூலன்

இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று காணப்படும் ஒரு சிற்றூர். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீரும் சிறப்புடனும் திகழ்ந்த துறைமுகம்.

இராமநாதபுரம் நகரத்திலிருந்து கிழக்கே 20 கிலோமீட்டா தூரத்தில் சின்னஞ் சிறிய சிற்றூராகத் திகழ்கிறது. இவ்வூரில் 'கோட்டை மேடு' என்ற மேடிட்ட ஒரு பகுதி. நமது தொல்பொருள் ஆய்வுத் துறையைச் சேர்ந்த அகழ்வாராய்ச்சி ஆய்வாளர்கள், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்த இடத்தை ஆய்வுக்கு உரிய இடமாகத் தேர்ந்தெடுத்தார்கள்.

தொல்பொருள் பாதுகாப்புச் சட்டப்படி, நமது மாநிலத்தில் ஓரிடத்தில் தொல்பொருள் ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்றாலும், மத்திய அரசின் அனுமதி பெற்றாக வேண்டும். மத்திய அரசின் அனுமதிக்குப் பிறகு கோட்டைமேடு பகுதியில் அண்மையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் போதுதான் அழகன் குளத்தின் தொன்மைச் சிறப்புகளும் அதன் வரலாற்றுப் பெருமையும் உணர்ந்து கொள்ளச் சான்றுகள் கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டில், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு ரோமானியர்களுடன் வாணிபத் தொடர்பு இருந்தமைக்குப் பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

தமிழிலக்கியங்களில் யவனர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் கிரேக்கர்கள், ரோமானியர்கள், எகிப்தியர்கள் மற்றும் மத்திய தரைக் கடல் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

புதுவை மாநிலம் அரிக்கன் மேட்டில் கிடைத்த ஆய்வும், பூம்புகார் ஊர் அருகே வெள்ளையன் இருப்பு என்று உள்ள இடத்தில் கிடைத்த தொல்பொருட்களும் இந்த யவனர்களோடு தமிழகத்திற்குத் தொடர்பு இருந்து வந்ததை உணர்த்தியுள்ளன. இவை அனைத்துக்கும் மேலாக இப்பொழுது அழகன் குளத்தில் ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. குவியல் குவியலாகச் சங்கு வளையல் தொழில் நடந்தமைக்கு ஆதாரமாக, சங்குக் குவியல்கள் கிடைத்துள்ளன.


ரோமானியர்கள் பயன்படுத்திய மதுச்சாடிகளின் ஓடுகளும் இங்குக் கிடைத்துள்ளன. அது மட்டுமல்ல, அந்த மதுச்சாடி எந்த நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது என்பதற்கு உரிய வாணிபச் சின்னங்களும் கிடைத்துள்ளன.

கி.பி. நான்காம் நூற்றாண்டில் ஆண்டு கொண்டிருந்த ரோம் நாட்டு மன்னன் தலைபொறித்த நாணயம் கிடைத்துள்ளது. ரோமானிய நாணயங்களும், அணிகலன்களில் சேர்த்துக்கொள்ளும் மணிகளும் உயர்வகைக் கற்களும் கிடைத்துள்ளன.


வடநாட்டில் மட்டும் அகழ்வாய்வின்போது கிடைக்கக்கூடிய மௌரியர் காலத்து ஓவியங் கொண்ட கருமை வண்ணங் கொண்ட பாளை ஓடுகளும் கிடைத்துள்ளன. மௌரியர்களுக்கும் இந்தப் பகுதிக்கும் மிக நெருக்கமான வாணிபத்தொடர்பிருந்ததை இவை நிரூபிக்கின்றன.

இப்பொழுது அழகன் குளத்தில் நடத்தப்பட்ட ஆய்வு மிகவும் சுருங்கியதுதான். ஒரு சிறிய

அகழ்வாராய்ச்சியில் கிடைத்த ரோமானியர் மதுச்சாடிகளின் ஓடுகள்.



2000 ஆண்டுக்கு முந்திய தொன்மையான பொருட்கள்



சங்கு அறுக்கும் தொழிற்கூடம் இருந்தது போலும். அறுத்த சங்குகளின் எஞ்சிய பகுதிகள்.





ரோமானியர் நாட்டு நாணயம். முன்புறமும், பின்புறமும். இந்த நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள ரோமானிய மன்னன் கி. பி. நான்காம் நூற்றாண்டில் ரோம் நாட்டை ஆண்டவன்.

பகுதியில் மட்டும்தான் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

பல இடங்கள் தொல்பொருள் ஆய்வு நடத்த ,அகழ்வாராய்ச்சிக்கு இடையூறாக அமைந்திருக்கும். ஆனால் கோட்டை மேட்டுப் பகுதி அகழ்வாராய்ச்சிக்கு மிக ஏற்றதாக உள்ளது. பெருஞ்செலவு செய்து இங்கு அகழ்வாராய்ச்சியை முழுமையாகச் செய்தால் தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை வெளிவராத பல செய்திகள் தெரியக்கூடும்.

### அழகன்குளம் பெரிய துறைமுகமா?

சோழநாட்டின் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கிய ஊர் பூம்புகார். சோழர்கள் தலைநகராக உறையூர் விளங்கிய போது கூட, பூம்புகார் துறைமுகமாக விளங்கியது. சோழநாட்டின் பெருமைக்குரிய காவிரி ஆறு கடலோடு கலக்குமிடமான புகாரில்தான் சோழநாட்டின் துறைமுகப்பட்டினம் இருந்தது. ஆற்றுவழிப் போக்குவரத்துக்காக ஆறு கடலோடு கலக்குமிடத்தில் தான் அப்பொழுது துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

சேரநாட்டின் முக்கிய ஆறான பேரியாறு கடலோடு கலக்குமிடமான 'முசிறி' சேரநாட்டின் துறைமுகமாக இருந்தது. முசிறியின் அருகே உள்ள ஊர்தான் கொடும்பாளூர்.

பாண்டிநாட்டின் ஆறுகளில் ஒன்றான தண்பொருநை என்ற தாமிரபரணி கடலோடு கலக்குமிடத்தில்தான் கொற்கைத் துறைமுகம் அமைந்துள்ளது. பாண்டிய நாட்டின் குலக்கொடி என்று போற்றப்படும் வைகை ஆறு கடலோடு கலக்குமிடத்தில் உள்ள ஊர் தான் அழகன் குளம்.

ஆகவே, அழகன் குளம் பண்டைய பாண்டிய நாட்டின் துறைமுகமாக விளங்கி உள்ளது. ஆனால், அழகன்குளம் என்பது தான் அதன் பழைய பெயரா? உறுதியாகச் சொல்லமுடியவில்லை. இதுபற்றி ஆராய்ச்சி இனிதான் தொடரவேண்டும்.

கல்வெட்டுகளிலும் நன்கு ஆராய்தல் வேண்டும். ஆனால் பழைய பாடல்களில் 'அழகேந்திர மங்கலம்' என்று குறிப்பிடப் படுவது அழகன் குளமாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர்கள் சிலரின் கருத்தாக இருக்கிறது.

தமிழ்நாட்டின் துறைமுகங்களைப் பற்றி எழுதிய தாலமி, கொற்கைக்கும் சபேரிச் எம்போரியத்துக்கும் (பூம்புகாருக்கும்) இடையில் சாலூரா எம்போரியம் என்ற துறைமுகம் இருந்ததாக எழுதியுள்ளார்.

மதுரைக் காஞ்சியில் நெல்லியனூர் என்ற துறைமுகம் கூறப்படுகிறது. தமிழில் சால் என்றால் 'நெல்' என்றே பொருள். எனவே, சாலூர் என்பது நெல்லியனூர் என்று கருதப்படுகிறது. அழகன்குளம்தான் நெல்லியனூராக இருக்கலாம் என்று நம்பவும் வாய்ப்புள்ளது.


நமது தொல்பொருள் ஆய்வுத் துறையின் ஆராய்ச்சியால் பாண்டிய நாட்டின் பழம் பெரும் துறைமுகம் ஒன்றைப் பற்றிய செய்திகள் கிடைத்துள்ளன.

தொல்பொருள் துறை இயக்குநர் டாக்டர் நாகசாமி அவர்களின் ஒத்துழைப்புடன் இந்த அகழ்வாராய்ச்சியில் மிகுந்த ஊக்கத்துடன் செயல்பட்ட அகழ்வாய்வாளர் திரு து. துளசிராமன் அகழ்வாராய்ச்சித் துறையின் அந்த வட்டார அலுவலர்கள் திரு தே. கோபாலன், திரு. பெ. கௌதமபுத்திரன், திரு. வெ. ராமமூர்த்தி, திரு குணசேகரன் மற்றும் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறையினரின் ஆய்வுப் பணிக்கு அனைவரும் பாராட்டுகள் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அழகன் குளத்தில் கிடைத்துள்ள செய்திகள், ஆதாரங்கள் அதுமிகவும் பழைமையான துறைமுகம் என்பதை உறுதி செய்கின்றன.

அரிக்கன் மேட்டில் கிடைத்ததைவிட அதிக அளவு தொல்லியல் பொருட்கள் ஏராளமாகக் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாராய்ச்சி மேலும் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்கு மேலும் பல வரலாற்று உண்மைகள் கிடைக்கும் காலம் தொலைவில் இல்லை.

தொன்மை மிகுந்த பழங்காலத்து மணிவகைகள்





# பெரியார் பூமியில் பயன்மிகு திட்டங்கள்

கா. சம்சுதீன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்.

பெருந்துறை காசநோய் மருத்துவமனையை அரசு ஏற்றுக்கொண்டு மருத்துவக் 'கல்லூரி துவக்கத்திற்கான அடிக்கல்நாட்டு விழாவும், பல்வேறு நலத் திட்டங்கள் தொடக்க விழாவும், ஜீவாபோக்குவரத்துக் கழகம் சார்பில் 16 புதிய பேருந்து வழித் தடங்கள் துவக்க விழாவும் 24.11.86 அன்று ஈரோட்டில் சிறப்பாக நடைபெற்றன.

ஈரோடு சி. எஸ். ஐ. பள்ளி மைதானத்தில் நடைபெற்ற இவ் விழாவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து கொண்டு பணிகளைத் துவக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு .முதல்வர் அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு அருண் இராமநாதன் இ. ஆ. ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இவ்விழாவிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துசாமி அவர்கள் உரையாற்றுகையில், ''பெரியார் மாவட்டம் உதயமான பிறகு இம்மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் துவக்கப்பட்டு வளர்ச்சி பெற்று வருகின்றன. இந்த மாவட்டம் பிரிக்கப்படுவதற்கு முன்பு மக்கள் கோவை சென்று அரசு அலுவலர்களைச் சந்திப்பதற்குச் சிரமமாக இருந்தது. மாவட்டம் பிரிக்கப்பட்டபின் இங்கேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், அரசு அலுவலகங்கள் என்று வந்தபின் பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள எளிதாக அமைந்துள்ளது. முன்பைவிட இப்பகுதிக்கான வளர்ச்சிப் பணிகளும் தொய்வின்றி நடைபெற்று வருகின்றன. பெருந்துறை அருகில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் புதிய நகரம் உருவாக இருக்கிறது. இங்கு திறக்கப்படும் பொறியியல் கல்லூரி தமிழ் நாடு மட்டுமல்லாது இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஒரு முன் மாதிரி கல்லூரியாகச் செயல்படும் நிலையில் உருவாக்கப்படும்'' என்று கூறினார்.

பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்தார்.

ரூ. 4 கோடியே 75 இலட்சம் செலவில் கட்டப்பட்ட பொறியியல் கல்லூரி கட்டடம், ரூ.9 கோடி மதிப்பிலான மருத்துவமனைக் கட்டடம், ரூ. 6 கோடி செலவில் வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுவாரியங்களினால் கட்டப்பட்ட குடியிருப்புகள் ஜீவா போக்குவரத்துக்கழகத்தின் சார்பிலான புதிய 16 வழித்தடங்கள், சுமார் 3 கோடி செலவில் குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஐரோப்பிய பொருளாதாரம் மற்றும் உலகவங்கியின் சார்பிலான குடிநீர் திட்டப் பணிகள் ரூ. 11 கோடி செலவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பிலான கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள், கூட்டுறவுத்துறையின் மஞ்சள் அரவை ஆலை போன்ற மற்றைய திட்டப் பணிகளையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார். மொத்தம் 1,423 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதாவது:

''என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழிநடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

அனைவருக்கும் என்னுடைய வணக்கம்.

இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்வதின் மூலம் உங்களை எல்லாம் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

பெரியார் மாவட்ட மக்கள் எல்லோரும் என்மீது பற்றும் பாசமும் கொண்டவர்கள். தந்தை பெரியாரின் பாரம்பரியத்தில் வளர்ந்த நீங்கள் எல்லோரும் முற்போக்கு எண்ணமும், செயல்திறனும் படைத்தவர்கள். நாட்டைத் துண்டாட நினைக்கும் தீயசக்திகளை நீங்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும்.

தீய சக்திகளை முழுமையாக அழிக்க நாம் எல்லோரும் மிகுந்த விழிப்புடன் பாடுபட வேண்டும். நாட்டில் அமைதியைநிலை நாட்டடவும், ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் நாம் அனைவரும் அயராது பாடுபடுவோம். ஒருமைப்பாட்டு வாரமாகிய இந்த நாளில் ஒன்றுபட்ட இந்தியாவைக் கட்டிக் காப்போம் என்று உறுதி கொள்வோம்.


தமிழ் காத்த, தமிழ்த்தலைவர்களின் பெயரால் அமைக்கப்பட்டுள்ள போக்கு வரத்துக் கழகங்கள் மூலம் சித்தோட்டில் பொறியியல் கல்லூரி தொடங்குவதிலும் பெருந்துறை காசநோய் . மருத்துவமனையை மருத்துவக் கல்லூரியாக மாற்றுவதிலும் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

ஏழை மக்களுக்காகக் கொண்டு வரப்படும் அரசின் திட்டங்களை நிறைவேற்றப் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

அண்ணா நாமம் வாழ்க!''

பெருந்துறை காசநோய் மருத்துவமனையை அரசு ஏற்று மருத்துவக் கல்லூரியாக்கும் திட்டத்தையொட்டி, மருத்துவமனையை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒப்படைக்கும் வகையில் அதன் மாதிரிவடிவத்தை வெள்ளிப்பேழையில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

விழாவில் முன்னாள் அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு எஸ்.டி.உக்கம்சந்த், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திருப்பூர் திரு இரா. மணிமாறன், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தலைவர் திருமதி சுலோசனாசம்பத் ஆகியோர் உரையாற்றினர்.



**மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வெள்ளியாலான தேர்ச் சக்கரம் போன்ற நினைவுப் பரிசை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.**

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வெள்ளியிலான தேர்ச்சக்கரம் போன்ற நினைவுப் பரிசினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாவட்ட மக்கள் சார்பாக, சந்தனத்தால் செய்யப்பட்ட யானைப் பொம்மைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசாக மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.


பொதுமக்கள் அளித்த மனுக்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

## போலி மாத்திரைகள் முதல்வர் நடவடிக்கை

தலைவலி போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும் 'அனால்ஜின்' மாத்திரைகளில் பெருமளவு போலி மாத்திரைகள் விற்பனை செய்யப்படுவது தொடர்பாகச் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் திருவில்லிபுத்தூர், தர்மபுரி மாவட்டம், ஓசூர் ஆகிய இடங்களில் போலி 'அனால்ஜின்' மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டு அவை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. இதேபோல் தாய்மார்களுக்கு வழங்கப்படும் இரும்புச்சத்து மாத்திரைகள் தரம் குறைந்ததாகவும், போதிய அளவு வீரியம் அற்றதாகவும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி இரண்டு சம்பவங்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து, உடனே கடும் நடவடிக்கை எடுக்குமாறும், தொடர்ந்து கண்காணிப்பில் ஈடுபடுமாறும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரில் ஆணை பிறப்பித்தார்கள்.

இம்மாதிரி புழக்கத்தில் உள்ள போலி மருந்துகளைப் புறக்கணிக்குமாறும், போலி மருந்து பற்றித் தகவல் கிடைத்தால் உடனே அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், மாத்திரைகள் வாங்கும்போது அசல் தானா என்பதைப் பரிசோதித்து உறுதி செய்த பிறகே வாங்க வேண்டும் எனவும் பொது மக்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.



# திருச்சி அழைக்கிறது

**வ. விஸ்வநாதன், இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**மற்றும் மாவட்ட விளையாட்டுக்குழுத் தலைவர்,**
**திருச்சி மாவட்டம்.**

இந்திய அரசு கிராமப்புறங்களில வாழ்வோருக்காக ஊரக விளையாட்டு மையங்களை அமைத்து, விளையாட்டுப் போட்டிகளை வட்ட, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தி வருகிறது.

இந்திய மக்கள் தொகையில் 80 சதவிகிதத்தினர் கிராமத்தில் வாழ்வதால் அவர்களிடமிருந்து பெரும்பான்மையான விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டும் என்கிற எண்ணத்தை இந்திய அரசு கொண்டிருக்கிறது. தேசிய விளையாட்டுப் பள்ளி, பாடியாலா மூலமாக விளையாட்டு வீரர்களின் திறமையை வெளிக் கொணர்ந்து அவர்களுக்கு அறிவியல் முறைப் படிப் பயிற்சி அளித்து உலக அளவிற்கு உயர்த்தி வருகின்றது.

தமிழ்நாடு அரசும் இந்த விளையாட்டுப் போட்டிகளுக்குப் புத்துணர்வு தந்து ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பினை ஏற்படுத்தி, இளைய தலைமுறையினரை ஊககுவித்து வருகிறார்கள்.

திருச்சியில் டிசம்பர் மாதம் 18ஆம் நாள் முதல் 22-ஆம்நாள் முடிய ஐந்து நாட்கள் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிகள் குறித்த விவரங்கள்:

இந்த விளையாட்டு விழாவில் கூடைப் பந்து மற்றும் ஆக்கி ஆகிய ஒவ்வொரு போட்டியிலும் 54 அணியினர் போட்டியிடுவர்.

இப்போட்டிகளில் பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர் தவிர கிராமப்புறங்களைச் சார்ந்த பள்ளியில் பயிலாத 16 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். அவர்கள் வயதுச் சான்றிதழை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் பெற்று வந்து போட்டியில் பங்கு பெறலாம் என்ற சிறப்பு அம்சம் இந்த விழாவில் குறிப்பிடத்தக்கதாகும்.

கூடைப்பந்து விளையாட்டுப் போட்டிக்காக உரிய விளையாட்டுத் திடல்கள் நான்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் இரண்டு திடல்கள் புனித சிலுவைக் கல்லூரியிலும், மற்றும் புனித சிலுவை மேல் நிலைப் பள்ளியிலும் அமைக்கப் பெற்றுள்ளன.

அண்ணா விளையாட்டு அரங்கில் இரு விளையாட்டுத் திடல்களும் அனைத்து உலகத் தரத்திற்கு ஏற்ற வகையில் புதிய விதிமுறைகளின்படி அமைககப்பெற்றுள்ளன. அவற்றில் நிலையான மின்னொளி அமைப்பும் பொருத்தப்படுகிறது. இந்தவிளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும், அமைக்கவும், ஏறத்தாழ இரணடு இலட்சம் ரூபாய் செலவு செய்யப்படுகிறது.

ஆக்கி விளையாட்டுப் போட்டிகள் சேமப்படை மைதானத்தில் அமைந்துள்ள இரண்டு விளையாட்டுத் திடல்களிலும், அண்ணா விளையாட்டு அரங்கில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு விளையாட்டுத் திடலகளிலும் நடைபெறும்.

இந்த விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தவும் அண்ணா விளையாட்டு அரங்கில் நிரந்தரமாக ஒரு புல்தரை மைதானம் அமைக்கவும் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அகில இந்திய அளவில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் பங்கு பெறும் வீரா, வீராங்கனைகளை வரவேற்கும் வகையில் அண்ணா விளையாட்டு அரங்கம் பொலிவும், வலிவும் பெற்றுத் திகழ, சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புனித ஜான் வெஸ்ட்ரி மேல் நிலைப்பள்ளி மற்றும் அரசு மாணவர்கள் விடுதி ஆகிய இரு இடங்களில் விளையாட்டு வீரர்களும் புனித சிலுவைக் கல்லூரி, மற்றும் மேல்நிலைப்பள்ளி விடுதிகளில் விளையாட்டு வீராங்கனைகளும் தங்க இடவசதி செய்யப்பட்டுள்ளது. நாள்தோறும் இவ்விடங்களில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

நகரப் பேருந்துகள் அண்ணா விளையாட்டு அரங்கத்தின் வழியாகச் செல்லவும், சிறப்புப் பேருந்து வசதிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்களும், பார்வையாளர்களும் அமர்ந்து விளையாட்டுக்களைக் கண்டு களிக்க, காலரிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் விளையாட்டு அரங்கில் ஆங்காங்கே தற்காலிக உணவு விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இந்த விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்கும் வகையில் எல்லா விதமான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

**வீர விளையாட்டுக்களுக்குப் பேர் பெற்ற தமிழகத்தின் இதயமாக விளங்கும் திருச்சியில் முதன் முறையாக நடைபெறும் அகில இந்திய ஊரக விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக அமைவது உறுதி.**

# தேசியப் பண்பாட்டு விழா

தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம், புதுவைஆகிய மாநிலங்கள், அந்தமான் நிகோபார், லட்சத்தீவு ஆகிய பகுதிகள் சார்பில் தென்னகப் பண்பாட்டு மையம் ஒன்று இவ்வாண்டு சனவரித் திங்களில் தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் தொடங்கி வைக்கப்பட்டது.

இம் மையத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள், 'கலைகளைச் சிறப்பாக வளர்க்கவும், நமது சந்ததிகளுக்கு, சிறந்த கலைச் செல்வங்களைத் தரவும், மறைந்து கிடக்கின்ற திறமைகளை-புலமைகளை-வெளிக் கொணரவும் இம்மையம் பாடுபடும்' என்றார்.

தற்போது நமது நாட்டில், தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு தென் மத்தி, வடகிழக்கு, வட மத்தி ஆகிய 7 பிராந்தியங்களின் சார்பாக 7 பண்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த மையங்கள் ஒருங்கிணைந்து நடத்தும் தேசியப்பண்பாட்டு விழாவை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் 8.11.86 அன்று வரலாற்றுச்சிறப்புமிக்க டெல்லி செங்கோட்டை மைதானத்தில் துவக்கி வைத்தார்.

நாட்டில் நிலவும் பலதரப்பட்ட பண்பாட்டை மக்கள் உணர்ந்து பேணும் வகையிலும், அவை சம அளவில் வளர்ச்சிபெற வேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும் இவ்விழா நடத்தப்பட்டது.

''நமது விழா'' (அப்னா உத்சவ்) என்று பெயரிடப்பட்ட இவ்விழாவின் துவக்கத்தில் செங்கோட்டையின் 7 இடங்களில் இருந்து இரவின் இருளைக் கிழித்துக்கொண்டு 'டார்ச்' விளக்கு ஒளி பாய்ச்சப்பட்டது. நாட்டின் 7 பண்பாட்டு மையங்கள் கலைஞர்களின் வருகையைக் குறிக்கும் வகையில் இவ்வாறு 7 திசைகளிலிருந்து ஒளிச்சுடர் காட்டப்பட்டது.

குத்துவிளக்கேற்றி மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இவ்விழாவைத் துவக்கி வைத்து உரை ஆற்றினார். பின்னர் நடைபெற்ற கலைஞர்களின் அணிவகுப்பு, கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தொடக்கவிழா முடிந்ததை அறிவிக்க இறுதியில் 7 வண்ணங்களிலான மலை போன்ற பலூன் வானவெளியில் பறக்கவிடப்பட்டது. நவம்பர் 26ந் தேதிவரை நடைபெற்ற இவ்விழாவில் நாடெங்குமிருந்து 4,000 கலைஞர்கள் பங்கேற்றனர்.

தென் மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர் குழுக்கள் 9.11.86 முதல் சில அரிய கலை நிகழ்ச்சிகளை நடத்தின. இவற்றில் சில சுமார் 500 ஆண்டுக் காலப் பழமை வாய்ந்தவை. ஆந்திர மாநிலத்தின் சிந்து பாகவதம் நாட்டியம், தமிழ்நாடு வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தெருக்கூத்துகள், கரகாட்டம், காவடி ஆட்டம், கர்நாடக மாநிலத்தின் சுட்ராடா மற்றும் கோம்பை ஆட்டம், கேரள மாநிலத்தின் கலாரைப் பாட்டு மற்றும் தய்யம் ஆகிய நிகழ்ச்சிகளுக்குப் பார்வையாளர்களிடையே நல்ல வரவேற்பு இருந்தது.

இந்த 4 மாநிலங்களைச் சேர்ந்த நாட்டியக் கலைஞர்கள் மற்றும் சண்டைக் கலை வல்லுநர்கள் உட்பட மொத்தம் 500 பேர் இவ்விழாவில் பங்குபெற்றனர்.

பரதநாட்டியம், கதகளி, குச்சுப்பிடி, யக்ஷகானம் போன்ற மரபுவழிக் கலைகளும் இடம் பெற்றன. மொத்தம் 34 தென்னிந்தியக் கலைகள் இடம்பெற்றன. இவற்றில் 18 கலைகள் மிகவும் அரிதானவை.

இந்தக் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் தென்னிந்திய உணவு வகைகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தியாவில் பெரிய அளவில் திறந்தவெளி அரங்கில் தேசியக் கலைவிழா ஏற்பாடு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

பல்வேறு மொழியினர், சமூகத்தினர் இந்தியாவில் வாழ்ந்தாலும், வேற்றுமையில்ஒற்றுமை காண்போம் என்ற உயரிய நோக்கத்தை வெளிப்படுத்தும் விதமாய்த் திகழ்ந்தது இக்கலைவிழா.



# மாணவர் பக்கம்



தமிழக அரசு ஆண்டுதோறும் நடத்தும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தமிழ்ப்பாடத்தில் தமிழகத்திலேயே முதல் மதிப்பெண் பெறுபவர்க்கு ரொக்கப்பரிசு வழங்கத் தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் ஆதீனம் அறக்கட்டளை நிறுவியுள்ளது.

அருள்மிகு காசிவாசி தில்லை நாயக சுவாமிகள் நினைவு தமிழ் ரொக்கப்பரிசு ரூ.2192, சென்னை அடையாறு காந்திநகர் இராணி மெய்யம்மை பெண்கள் உயர் நிலைப்பள்ளி மாணவி ஜி. பரணி கோமதிக்குக் கிடைத்துள்ளது.

பரிசு பெறும் மாணவி ஜி.பரணிகோமதி தற்போது சென்னை தியாகராயநகர் பனகல் பூங்கா சாரதா பெண்கள் பள்ளியில் மேல்நிலை வகுப்பில் படித்து வருகிறார்.

## பெரியதும் சிறியதும்

உலகிலேயே மிகவும் பெரிய பாலூட்டி ஒட்டகச்சிவிங்கி ஆகும். இதன் உயரம் சுமார் 20 அடிகள்; எடை $1\frac{1}{2}$ இலிருந்து $2\frac{1}{2}$ டன்.

உலகிலேயே மிகவும் சிறிய பாலூட்டி 'எட்டர்ன்ஸகன் ஷர்வ் (Etrnscan Shrew) ஆகும். இதன் தலை மற்றும் உடலின் நீளம் 50 மி.மீ. தான்.

உலகிலேயே வெளிவரும் பத்திரிகைளில் மிகவும் பெரியது— ''கான்ஸ்டெல்லேஷன்' எனும் பத்திரிகையாகும். இது நியூயார்க்கிலிருந்து வெளி வருகிறது.

உலகிலேயே மிகச்சிறிய பத்திரிக்கை ரோம் நகரத்திலிருந்து வெளிவரும்— 'டயோடியோடிரோமா' என்பதாகும். இதன் நீளம் 6.8 செ. மீ., அகலம் 12.7 செ.மீ.

மனித உடலிலுள்ள மிகப் பெரிய உள்உறுப்பு-கல்லீரல்.

மனித உடலிலேயே மிகவும் சிறிய எலும்பு 'ஸ்டேப்ஸ்' எனப்படும் காது எலும்புகள்தான். இதன் நீளம் சுமார் மூன்று மில்லி மீட்டர்களே.

பூமியின் வடதுருவத்திற்கு அருகிலுள்ள நாடு நார்வே. துருவத்திற்கு அருகில் மிக அதிகமான ஜன நெருக்கமுள்ள நாடு நார்வேதான். இந்நாட்டின் மக்கள் தொகை சுமார் 40 இலட்சம்.

உலகிலேயே மிகவும் சிறிய நாடு 'வாடிகன்'. இதன் பரப்பளவு 4 ச.கி.மீ. மட்டுமே.

தொகுப்பு :

**சீர்காழி எஸ். குமார்**




மாணவ மணியே துணிவைக் கொண்டிடு
மணமுள்ள மலராய் விளங்கி வாழ்ந்திடு
ஆணவம் என்பதை என்றும் அகற்றிடு
அறிவால ஆற்றலால் பிறரைக் கவர்ந்திடு!


நீதிவழி சொல்லும் பாதையில் சென்றிடு
நேர்மையை அணியாய்ப் பெற்றுத் திகழ்ந்திடு
சாதிபேதம் நீக்கியே சமதர்மம் நாடிடு
சாகின்ற வரையில் பிறருக்கே உதவிடு!

படிப்பினில் நாளும் சிந்தை செலுத்திடு
படிப்படியாய் வாழ்வில் பக்குவம் பெற்றிடு
உடற்பயிற்சி தவறாது நித்தமும் செய்திடு
உடனுக்குடன் கடமையைச் செய்தே மகிழ்ந்திடு!

—வ. நித்தியானந்தம்



# வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ½%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி

TNSC·BANK/166

# தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஒரு கண்ணோட்டம்

**வெ. பரஞ்சோதி**
உதவி இயக்குநர்,
ஊரக வளர்ச்சித்துறை.

நம்முடைய சமுதாயத்தில், கிராமத்திலுள்ள மக்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றாலும் அல்லது போதுமான வேலையில்லை என்ற நிலைமை ஏற்பட்டாலும், அவை ஒரு துன்பம் நிறைந்த சூழ்நிலையை அவர்களுடைய அன்றாட வாழ்வில் ஏற்படுத்திவிடும்.

1980-ம் ஆண்டுக் கணக்கின் படி இந்தியாவில் 245.90 மில்லியன் உழைக்கும் சக்தி பெற்ற மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர்.

தமிழ்நாட்டில் மட்டும் 55,59,103 பேர்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். தவிர, 60,37,601 பேர்கள் விவசாயத் தொழிலாளர்களாக வேலை செய்கின்றனர். இப்பெருந்திரளானோர், வேளாண்மைக் காலங்கள் தவிர, எஞ்சிய நாட்களில் கூட வேலை வாய்ப்பின்றி பெரிதும் அல்லல்படுகின்றனர். உழைப்பதற்கு இவர்கள் தயாராக இருந்த போதிலும் கிராமங்களிலே வேலை கிடைக்காத நிலை உள்ளது. வேளாண்மை நிலங்கள் நாளடைவில் சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அவை போதுமான வேலையளிக்கக் கூடியதாய் இல்லை.



அதற்கு விடையளித்ததுதான், ''வேலைக்கு உணவு'' என்ற திட்டம், அது 1979-ஆம் ஆண்டு வரை செயல்பட்டது. இத்திட்டத்திலுள்ள சில குறைகள் களையப்பட்டு, புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டு, 1980 அக்டோபர் திங்கள் முதல், ''தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்'' என்ற புதிய பெயரில் நாடு முழுதும் செயல்படத் தொடங்கியது.

இன்று நாட்டிலே நிறைவேற்றப்பட்டுவரும் ,இரண்டு பெரிய திட்டங்களிலே ஒன்று, ''தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்'' மற்றொன்று, ''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்'' என்பதாகும்.

''தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்'' மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டது.

வேலைவாய்ப்பு சிறிது கூட இன்றி அல்லல்படுவோர்க்கும், போதிய வேலைவாய்ப்பின்றி குறைவான ஊதியம் பெற்று, தொல்லையடைவோர்க்கும், அவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, வேலையளிப்பது, திட்டத்தின் முதல் நோக்கம்.

வேலைவாய்ப்பளிப்பதன் வாயிலாக கிராமங்கள், கிராம மக்களுக்குத் தேவையான, அவசியமான நிரந்தரமான வசதிகள் ஏற்படுத்துவதும், அவற்றின் காரணமாக, கிராம மக்களின் பொருளாதார நிலைமை அதிகரிப்பதும், இரண்டாவது நோக்கம்.

வேலையளித்து அதற்கு ஈடாக ஊதியமும், உணவுப்பொருளும் அளிப்பதால் கிராம மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி, சத்துமிக்க உணவைப்பெறச்செய்தல், மூன்றாம் நோக்கம்.

இப்பெருந்திட்டம், தமிழகத்திலுள்ள 383 வட்டாரங்களிலும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் வாயிலாக நிறைவேற்றப்படுகிறது.

இத்திட்டத்தில் நிறைவேற்றப்படும் வேலைகள் என்னென்ன என்பதை அறிவோம்:

சிறிய நீர்ப்பாசன மேம்பாடு, வெள்ளத்தடுப்புப் பணிகள், மண் நீர் வளப் பாதுகாப்பு, காடுகள் வளர்ப்புத் திட்டம், சாலைகள் அமைத்தல், ஆதிதிராவிட மக்களுக்குச் சிறப்பான முறையில் பயன்படும் திட்டங்களை மேற்கொள்ளுதல், தொடக்கப்பள்ளி, ஊராட்சிகள், சமுதாய நிலையங்கள், அரிசி, சிமெண்ட் வைப்பதற்கான கட்டடங்கள் கட்டுதல் இத்திட்டத்தில் அடங்குபவையாகும்.

மேற்கண்ட வேலைகளை எப்போது செய்யவேண்டுமென்ற வரைமுறை ஏதும் இல்லை. ஏழை எளிய, வேலையில்லாத கிராம மக்கள் எவ்வெப்போது வேலையின்றி அதன் காரணமாக, வறுமைக்கு உள்ளாகிறார்களோ அப்போதெல்லாம் இப்பணிகளை ''தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்ட''த்தில் எடுத்துக் கொண்டு நிறைவேற்றி, மக்கள் பயனடையச் செய்யவேண்டும்.

திட்டத்தின் தொடக்க காலத்தில் அரிசி, கோதுமையுடன் ,ஒரு

ரொக்கத்தொகையுமாக ரூ. 8 ஊதியம் அளிக்கப்பட்டது. ஆனால் ''நாளடைவில் இது மிகக் குறைந்ததாகக் காணப்பட்டதால் ரூ. 8 லிருந்து ரூ. 10-க்கு ஊதியம் அதிகரிக்கப்பட்டது. இத்தொகையில் ரூ. 1-85க்கு ஒரு கிலோ அரிசி, ரூ. 3க்கு இரண்டு கிலோ கோதுமையுடன், ரொக்கமாக ரூ. 5.15-ம் தரப்படுகிறது. உழைத்து ஓய்ந்த கரங்கள், அரிசி, கோதுமையை முக்கிய உணவாக வைத்துக் கொண்டு பசியாறலாம். அவர்கள் உழைப்பால் உண்டாகிய நிலையான, கிராம மக்களுக்குரிய சொத்துக்கள், அங்குள்ளவர்களுக்குத்தொடர்ந்து பயனளித்து வரும்.


நீண்ட நாட்களாக, கட்டுப்பாடு ஏதுமின்றி நாம் மரங்களை வெட்டி வீழ்த்தி, அடுப்பு எரிப்பதற்கும், கால் நடைகளுக்கு உணவளிப்பதற்கும் பயன்படுத்தி வருகிறோம். இதன் விளைவாக, எரிபொருள் தேவையை நிறைவு செய்ய வனவளம் ஈடு கொடுக்காத நிலையேற்பட்டுள்ளது. மட்டுமின்றி, இயற்கையின் வெப்ப-தட்ப நிலையும் பாதிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலை மேலும் மோசமாகி விடாமல் தடுப்பதற்காக, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்கு ஒரு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இதற்கென்று ஒதுக்கப்பட்ட தொகை தற்போது 20 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. 860 இலட்ச மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு வினியோகிக்கப்பட்டுள்ளன. சுமார் 10,000 எக்டேர் நிலப்பரப்பில் சமூகக் காடுகள் வளர்க்கப்பட்டுள்ளன.

1986-87ஆம் ஆண்டிற்கு, இத்தொகை 25 விழுக்காட்டிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது ரூ. 905.50 இலட்சமாகும்.

இப்பெருந் தொகையைக் கொண்டு, கிராமத்துக்குச் சொந்தமான பயனற்ற நிலங்கள் மற்றும் வாரியங்கள், பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், கோவில்களுக்கான தரிசு நிலங்களுக்கு, 2-சி பட்டா அளித்து, அவ்விடங்களில் காடுகள் வளர்க்க தமிழ்நாடு அரசு ஆணைபிறப்பித்துள்ளது.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மற்றொரு முக்கியமான அம்சம் ஆதிதிராவிட மக்களுக்கு, வீடுகள் கட்டித் தருவதாகும். 1984-85ஆம் ஆண்டில் 9,358 ''தொகுப்பு வீடுகள்'' (group houses) கட்டித்தரப்பட்டன. 1986-87ஆம் ஆண்டில் மட்டும் 23,565 வீடுகள், ரூ. 2,380.40 இலட்சம் செலவில், கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



தவிர, கிராமப் புறங்களிலே, கழிவறைகள் கட்டுவதும் இத்திட்டத்தின் ஒரு கூறாகும். ரூ.1,200 மதிப்பில் 3,950 கழிவறைகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. கூனியும், குறுகியும், நெளிந்தும், வளைந்தும், திறந்த இடங்களில் இயற்கைக் கடன்களைக் கழித்து வந்த, கிராம வாசிகளின் அன்றாடத் தொல்லைகள் இதன் மூலம் பெரிதும் தகர்த்தெறியப்படும்.


தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தினால், கிராமங்களின் சூழ்நிலையே பெரிதும் மாறி, முன்னேறிக் கொண்டு வருகிறது. அன்றாட வாழ்க்கை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் பெரிய அளவில் தமிழ்நாட்டிலே செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பல்லாயிரக்கணக்கான சிறு பாசன குளங்கள் மேம்பாடு அடைந்துள்ளன. இணைப்புச் சாலைகள் புதிதாக அமைக்கப்பட்டன. பழைய சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. இவற்றின் தூரம் ஏராளம், ஏராளம். இவற்றின் காரணமாக, கிராம மக்களின் பொருளாதார நிலை, வேலைவாய்ப்பு பெரிதும் அதிகரித்துள்ளன. அவர்களுடைய வெளியுலகத் தொடர்பு பன்மடங்காகப் பெருகியுள்ளது.

இத்திட்டத்தின் மிகச் சிறப்பான அம்சம், இவ்வேலைகள் அனைத்தும் ''கண்டிராக்டர்கள்' வசம் ஒப்படைக்கப்படாமல், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நேரடியாகவே நிறைவேற்றப்படுவதுதான். இதனால் இடையிலுள்ளோர்களிடம் செல்லும் பணம் தவிர்க்கப்பட்டு, பயன் நேரிடையாகவே, கிராம மக்களுக்குச் சென்றுவிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்துணைப் பெரிய திட்டத்தைச் செயல்படுத்த, மக்கள் தரப்பிலிருந்து ஆலோசனைகள் வழங்க, வட்டார அளவிலே மக்கள் குழுவும், மாவட்ட மாநில அளவிலே செயற்குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அவை அடிக்கடி கூடி, திட்டநிறைவேற்றத்திற்கு ஆலோசனைகள் கூறுவதுடன், ஆய்வும் செய்கின்றன.



# நந்தனத்தில் ஒரு சந்திப்பு

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் உள்ள வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் உள்ளவர்களை நேர்காணல் விழா நிகழ்ச்சியும், நந்தனம் பகுதியில் உள்ள 'ஒய்-பிளாக்' குடியிருப்பு மற்றும் 'நியூ டவர்' குடியிருப்பின் சுற்றுப்புறங்களில் மரம் நடு விழா நிகழ்ச்சியும் கடந்த 6.12.86 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றன.

இவ்விழாவில் - மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.திருப்பூர் மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

முன்னதாகக் காலையில் ஒய்-பிளாக் குடியிருப்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பங்கேற்ற அவர்கள், அங்கு 25 மரக்கன்றுகளை நட்டார்கள். இவ்விழாவில் குடியிருப்போர் சங்கத் தலைவர் திரு.கே.ஆறுமுகம் எல்லோரையும் வரவேற்றார், திரு.ஏ.காவிரெட்டி மாலைகள் அணிவித்தார்.

பின்னர் 10 மணியளவில் நந்தனம் சமூகக் கூடத்தில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் நிகழ்ச்சிக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கே.ஏ.கே. அவர்கள் தலைமை தாங்கினார். அவர் தமது உரையில் நந்தனத்தை மாதிரி நகரம் போல் உருவாக்கத் தகுந்தமுயற்சிகள் மேற்கொண்டிருப்பதாகவும், எல்லா வசதிகளும் இங்குள்ள மக்களுக்குக் கிட்டப் பாடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். கடந்த பிப்ரவரி மாதம் நடந்த மக்கள் குறைகேட்கும் நாள் கூட்டத்தில் கூறப்பட்ட குறைகளில் முக்கால் பங்குக்கு மேல் நிறைவேற்றப்பட்டு விட்டதாகவும், மீதமுள்ளவை விரைவில் நிவர்த்திக்கப்படும் என்றும் தெரிவித்தார். அதற்காகப் பாடுபட்ட அதிகாரிகளுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

மேலும் அவர் பேசுகையில், இரவு பகலாகக் கட்டப்பட்டு வரும் கோட்டூர்புரம் -நந்தனம் இணைப்புப் பாலம் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று திறக்கப்பட்டுவிடும்; 5 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பில் இப்பகுதியில் கட்டப்பட்டுவரும் நூலகக் கட்டடம் விரைவில் திறக்கப்படும்; இங்குள்ள மேநிலைப் பள்ளி தொடர்பான கட்டடப் பணிகளும் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு.எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில்- இதேபோல நேர்காணல் நிகழ்ச்சி குடிசைப்பகுதி மக்களிடையேயும் நடத்தப்படும்; இன்னும் 43 நகரங்களுக்கு குடிசைமாற்று வாரியப் பணிகள் விரிவாக்கப்படும். இப்பகுதியில் உள்ள வீட்டுவசதிவாரியக் குடியிருப்பில் உள்ள குறைகள் நீங்கத தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றெல்லாம் தெரிவித்தார்.

வீட்டுவசதி வாரியத் தலைவர் திருப்பூர் மணிமாறன் அவர்கள் உரையாற்றும்போது - வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் உள்ளோர் தெரிவித்த குறைகள் மூன்று மாத காலத்திற்குள் நிவர்த்திக்கப்படும் என்றார். சீதம்மா காலனி பகுதியில் விரைவில் ஒரு சமூகக்கூடம் கட்டப்படும் என்றும், டிரான்சிட் ஃபிளாட்டுகளில்வசிப்பவர்களுக்கு அந்த வீட்டைச் சொந்தமாக்குவதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் மேலும் அவர் பேசுகையில் தெரிவித்தார்.

விழாவின் தொடக்கத்தில் ஆயிரம் விளக்குச் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 16 வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் உள்ள இரண்டாயிரம் வீடுகளில் வசிக்கும் பத்தாயிரம் பேர்களுக்கு உள்ள குறைகள் பல்வேறு குடியிருப்போர் சங்கங்களின் சார்பிலும் தெரிவிக்கப்பட்டன.

வீட்டுவசதி வாரியத் தலைமைப் பொறியாளர் திரு.டி.பி.காளியப்பன், மாநகராட்சி உதவி ஆணையர் திரு. ரகுபதி மற்றும் சென்னைப் பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய அதிகாரிகள், மின் வாரிய அதிகாரிகள், தமிழ்நாடு பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.கே.லியாகத் அலிகான், கோழி வளர்ப்பு வாரியத் தலைவர் திருமதி கல்யாணி இராமசாமி, வ.உ.சி. சுப்பிரமணியம் ஆகியோரும் இந்த விழாவில் கலந்துகொண்டார்கள்.

என்.முரளீதரன், பி.எம்.கமாலுதீன், எம்.ஜி.சி.பாலு ஆகியோர் முக்கிய விருந்தினர்களுக்கு மாலைகளும் சால்வைகளும் அணிவித்தனர். செயற்பொறியாளர் திரு. என். எஸ். சண்முகம் வரவேற்புரையாற்றினார். கங்கைகொண்டான் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்




# தேன்கனிக் கோட்டையில் பால் குளிரூட்டு நிலையம்

வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் 16-11-86 அன்று மாண்புமிகு நாடாளுமன்றத் துணை சபாநாயகர் திரு தம்பிதுரை அவர்கள் தலைமையில், மாவட்டப் பால் வளப் பெருந் தலைவர் திரு எஸ். அரங்கநாதன் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு சுற்றுலா மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்கள் ரூ. 24 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் பால் குளிரூட்டு நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, ''படித்த இளைஞர்கள் வேலைதேடி அலைவதை விடுத்து கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டு வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். மேல் நாடுகளில் எல்லா வேலையையும் டிப்ளமோ படித்தவர்கள் தான் செய்கிறார்கள். நம்நாட்டில் படிக்காதவர்கள்கூட எத்தொழிலையும் செய்யலாம் என்ற நிலை உள்ளது. இப்பகுதியில் கால்நடைகளை வாங்க கடன் வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஆயிரம் கறவை மாடுகள் வாங்கினால் கூட இந்தக் குளிரூட்டும் நிலையத்திற்குத் தேவையான 10 ஆயிரம் லிட்டர் பால் சுலபமாகக் கிடைத்துவிடும். இங்குள்ள மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் எண்ணத்தில்தான் மாநில மைய அரசுகள் இக்குளிரூட்டும் நிலையத்தை இங்கு நிறுவியுள்ளன'' என்று அமைச்சர் கூறினார்.

விழாவில் 17 பேருக்குத் தேனீ வளர்க்கவும், ஆடு வளர்க்கவும் ரூ. 1.02 இலட்சமும், பாய் நெசவுத் தொழில் செய்ய மற்றும் கறவை மாடுகள் வாங்க 36 பேருக்கு ரூ. 2.20 இலட்சமும், 8 பேருக்குப் புதிய கிணறுவெட்டுவதற்கு ரூ.1.5 இலட்சமும் கடன் தொகையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். பாலகிருஷ்ணன், பால் வளத்துறை ஆணையர் கருப்பன், தனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே.வி. வேணுகோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

## வனவளர்ப்புத் திட்டம் தமிழகத்துக்குப் பாராட்டு!



புதுடில்லியில் 28.8.86 மற்றும் 29.8.86 ஆகிய இரண்டு நாட்களில் மைய அரசு கூட்டிய இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வனத்துறை அலுவலர்கள் உயர் மட்டக் கூட்டத்தில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் எல்லா மாநில முதலமைச்சர்களும் வனவளர்ப்புச் சம்பந்தமாக 14 அம்சத் திட்டம் அமல்படுத்தக்கேட்டுக்கொண்டதைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், 14 அம்சங்களில் தமிழ்நாடு 5 அம்சங்களில் ''பலே'' ''பலே'' (Very good), 7 அம்சங்களில் ''சபாஷ்'' (good), எஞ்சிய இரண்டு அம்சங்களில் ''தேவலாம்'' ( Fair ) என்றும் மைய அரசின் பாராட்டுதலைத் தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இந்தியாவில் வனவளர்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்களில் தமிழக அரசு முதலிடம் வகிக்கிறது என்று சொல்லலாம்.



# தரம் உயரத் தரும் பயிற்சி

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தில் (டான்சி) சார்பில், நிதி மற்றும் கணக்கு அலுவலர்களின் பயிற்சித் தொடக்கவிழா 2.12.86 அன்று நடந்தது.

மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் திரு ஆனூர் ஜெகதீசன் அவர்கள் பயிற்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தரமான பொருள்களை வழங்கும் துறையாக டான்சி விளங்கி வருகிறது. நட்டத்தைக் குறைத்து லாபத்தைக் கூட்ட வேண்டும் என்ற நோக்கில் இது செயல்பட்டு வருகிறது. இங்குத் தயாரிக்கப்படும் பொருள்களின் தரம் உயரவும், சிறப்பாகப் பணியாற்றவும் இது போன்ற பயிற்சிகள் இன்றியமையாததாகும். பொதுவாக டான்சியில் பணியாற்றும் எல்லாருக்கும் பயிற்சி தந்து, எல்லாரும் திறமையானவர்கள் என்பதை நிலை நிறுத்த வேண்டும். மக்கள் விரும்பி ஏற்கிற அளவுக்கு டான்சியின் தயாரிப்புக்கள் விளங்க வேண்டும்''.

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனம். இந்நிறுவனம் 47 உற்பத்தித் தொழிற்சாலைகளையும், 7 விற்பனை நிலையங்களையும் கொண்டு இயங்கி வருகிறது. இங்குப் பொறியியல் பொருட்கள், மரம் மற்றும் இரும்புச் சாமான்கள், இரும்பு வார்ப்படங்கள், அழுத்தப்பட்ட இரும்புத் தகட்டுப் பொருட்கள், கொல்லுலை உறுப்புகள், கைப் பம்புகள், இலகு மற்றும் கனரக இரும்புக் கட்டுமானங்கள், துத்தநாக மூலாம் பூசப் பட்ட டிரான்ஸ்மிஷன் கோபுரங்கள் போன்றவை உற்பத்தி செய்து விற்பனை செய்யப் பட்டு வருகின்றன.

1965-1966இல் டான்சியின் மொத்த உற்பத்தி மதிப்பு சுமார் ரூ.389 இலட்சங்கள். அது 1985-86இல் ரூ. 2500 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.

டான்சியில் சுமார் 3,700 பேர் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான அறிவியல் கல்விப் பயிற்சி அளித்து, திறமையானவர்களை உருவாக்கி மேலும் அவர்களின் தகுதியை உயர்த்த வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டு, டான்சி, பணியாளர்களுக்குப் பல தரப்பட்ட பிரிவுகளுக்குத் தேவையான பயிற்சிகளைத் தர முன் வந்துள்ளது. இதற்கு முன் 26 பணியாளர்களுக்குச் சென்ற செப்டம்பரில் வெல்டர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்போது 37 கணக்காளர்களுக்கு நிதி நிர்வாகப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. இதற்கு முன் 67 கணக்காளர்களுக்கு ஜூலை-செப்டம்பர் 1986ல் இதே போன்று பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.


இப்பயிற்சிகளின் முக்கிய நோக்கம், புதுமையான கருத்துக்களைத் தனது தொழில் சாலைகளில் புகுத்தி, உற்பத்தித் திறனைப் பன்மடங்கு உயர்த்தி, ஒரு மேன்மையான நிறுவனமாகப் பணி புரிவதேயாகும்.

—நமது செய்தியாளர்

## சேலம் உருக்காலைக்கு சர்வதேச விருது !

சேலம் உருக்காலைக்கு, பிரிட்டிஷ் பாதுகாப்புக்கவுன்சிலின் விருது மூன்றாண்டுகளில் இரண்டாவது தடவையாகக் கிடைத்திருக்கிறது. பாதுகாப்பு உலகத்தின் ''ஆஸ்கார்'' எனப் புகழ் பெற்றது இந்த விருது.

இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் பாதுகாப்புக் கவுன்சில், ஆண்டுதோறும் உலகத்தின் மிகச் சிறந்த பாதுகாப்புத்தரம் வாய்ந்த 30 கம்பெனிகளுக்கு இந்த விருதை வழங்கி வருகிறது.



# வளமான வாழ்வுக்கு

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

## அளிக்கும் விஜய்

### உரங்கள்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப்பெற தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களும் தேவை. மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள். மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மண் பரிசோதனை செய்ய இயலாவிடில் பொது சிபாரிசுப்படி உரமிடுங்கள்.



# 17-17-17




# 14-28-14




# டி.ஏ.பி




# யூரியா




கரும்பு — ஏக்கருக்கு கிலோ

| பகுதி | அடியுரம் | மேலுரம் | |
|---|---|---|---|
| | விஜய் 17-17-17 | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத பகுதி | 140 | 190 | 35 |
| தண்ணீர் பற்றுக் குறை பகுதி | 140 | 145 | 35 |
| அல்லது | | | |
| | விஜய் 14-28-14 | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத பகுதி | 85 | 215 | 55 |
| தண்ணீர் பற்றுக் குறை பகுதி | 85 | 170 | 55 |
| அல்லது | | | |
| | விஜய் டி.ஏ.பி. | விஜய் யூரியா | பொட்டாஷ் |
| தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத பகுதி | 50 | 220 | 75 |
| தண்ணீர் பற்றுக் குறை பகுதி | 50 | 175 | 75 |

சமச்சீர் உரமிட

**விஜய்**



மேலும் விவரங்களுக்கு :
வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்** VIJAY
மணலி, சென்னை 600 068

MFL-1963

# கணிதமேதை ராமானுஜன்

**வாழ்க்கைக் குறிப்புகள்** **தொகுப்பு:ரகமி**

முழுப்பெயர்: ஸ்ரீநிவாச ராமானுஜன். செல்லப் பெயர் 'சின்னசாமி'

தந்தை: குடந்தை 'மாடபூசி' ஸ்ரீநிவாச ஐயங்கார்.

தாயார்: 'சக்கட்டி' கோமளா என்கிற கோமளத்தம்மாள்.



**தாயார் கோமளத்தம்மாள்.**

பிறந்த இடம்: ஈரோடு கோட்டை தெப்பக் குளத்திற்கு அருகிலுள்ள பாட்டனார் 'அமீனா முத்தண்ணா' என்கிற திருநாராயணய்யங்காரின் இல்லம்.

பிறந்த ஆண்டு: 1887 டிசம்பர் 22 வியாழன் ஸ்வர்ஜித்து ஆண்டு மார்கழி 9-ஆந் தேதி.

உடன்பிறந்தவர்கள்: 4 சகோதரர்கள், 1 சகோதரி. (ராமானுஜன் - சடகோபன் - ஒரு பெண் குழந்தை பெயர் தெரியவில்லை-சேஷன்-லஷ்மிநரசிம்மன் - திருநாராயணன்.)

1889 டிசம்பர்: ராமானுஜத்திற்குப் பெரியம்மை போட்டது.

1892 மே.29: காஞ்சிபுரம் 'கொல்லா' சுன்னைய செட்டியார் சத்திரத்தில் நிர்வாகியாக வேலை பார்த்து வந்த ''ஈரோடு முத்தண்ணா'' (பாட்டனார்) வீட்டில்-அக்ஷராப்பியாசம் தொடங்கல்.



**ராமானுஜனின் மனைவி ஜானகி**

1892 அக்டோபர்: விஜயதசமியன்று காஞ்சிபுரம் தேரடியிலுள்ள திண்ணைப் பள்ளியில் சேர்த்தல். பின்னர் ராமானுஜன் கும்பகோணம் செல்லல்

1892 நவம்பர்: கும்பகோணத்தில் மீண்டும் திண்ணைப்பள்ளியில் சேருதல்.

1892 டிசம்பர்: காங்கேயன் தொடக்கப்பள்ளியில் சேருதல்; 5 வயதானதும் உபநயனம் செய்தனர்.

1897 நவம்பர் 'போர்ட் டவுன்ஹால் தேர்வில்' முதல் வகுப்பில் தேறினார்.

1898: கும்பகோணம் நகர உயர்நிலைப்பள்ளியில் 6ஆம் வகுப்பில் சேருதல்

1900: 8ஆம் வகுப்பு படிக்கையில் 'எண் கணிதம்' 'ஜியோமிதி' ''லோனி'' என்ற கணிதமேதை எழுதிய 'திரிகோணமிதி' ஆகிய நூல்களைத் தீவிரமாக ஆய்வு நடத்தினார்.

1903: மெட்ரிகுலேஷன் தேர்வில் முதன்மையாகத் தேறினார்.

1904: கும்பகோணம் அரசினர் கல்லூரியில் 'எப்.ஏ' வகுப்பில் சேர்ந்தார். 'ஜூனியர் சுப்பிரமணியம் ஸ்காலர்ஷிப்' உதவித்தொகை பெறும் தேர்வில் தேர்ச்சி பெறாமல், மீண்டும் அத்தேர்வை எழுதித் தேர்ச்சி பெற்றார்.

1905: 'எப்.ஏ' தேர்வில் தேறவில்லை. அவமானம் தாளாமல் வீட்டைவிட்டு வெளியேறினார். இது குறித்துப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டது. பின்னர் அவராகவே வீடு திரும்பினார்.

1906: பி.வி.சேஷு ஐயரின் முயற்சியால் மீண்டும் அவர் 'எப்.ஏ' தேர்வு எழுத, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். உடல்நிலை காரணமாக, தேர்வு எழுதாமல் கும்பகோணம் திரும்பிச் சென்றார்.



**1907:** மூன்றாம் முறையாக 'எப்.ஏ' தேர்வை தனிப்பட்ட முறையில் எழுதி அதிலும் தேர்ச்சி அடையாமல், கல்லூரிப் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

**1909 ஜூலை 14:** 10 வயதான ஜானகியைத் திருமணம் செய்து கொண்டார்.

**1911:** இந்தியக் கணிதச் சங்கத்திற்கு "Some Properties of Beronoullis" என்ற கணிதக் கட்டுரையைச் சமர்ப்பித்து வெளியிட்டார்.

**1912 ஜனவரி 12:** சென்னை அகௌண்ட்ஸ் ஜெனரல் ஆபீசில் மாதம் 20 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலையில் சேர்ந்தார்.

**1912 மார்ச் 1:** மதராஸ் போர்ட் டிரஸ்டு ஆபீசில் மாதம் 30 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலையில் சேர்ந்தார்.

**1912 டிசம்பர்:** இங்கிலாந்து கணிதமேதை ஜி.எச்.ஹார்டியின் கணிதப்புதிர், ராமானுஜத்தின் பார்வைக்கு வந்தது.

**1913 ஜனவரி 16:** ஹார்டியின் புதிருக்கு ராமானுஜ்ன் விடைகளைத் தயாரித்து, அத்துடன் தனது வறுமை நிலைமையைக் குறித்தும் கடிதம் எழுதினார்.

**1913 பிப்ரவரி 25:** சிம்லாவிலிருந்து இந்திய வானிலை ஆராய்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் ஜில்பர்ட்-டி-வாக்கர் சென்னையில் ராமானுஜத்தின் கணித நோட்டுப் புத்தகங்களைப் பார்வையிட்டார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தார் ராமானுஜத்தை கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக் கொள்வதற்குச் சிபாரிசு செய்தார்.

**1913 ஏப்ரல் 7:** சென்னைப் பல்கலைக்கழக சிண்டிகேட்டும், ராமானுஜத்திற்கு மாதம் ரூ. 75 உதவித்தொகை அளிப்பதற்கும், அவருடைய கணித ஆராய்ச்சிகளைப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கும்படியும் உத்தரவிட்டது.

**1913 மே 1.** சென்னைப் பல்கலைக்கழகத்தில் ராமானுஜன் கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**1914 ஜனவரி 28:** லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஈ.எச்.நெவில் சென்னையில் ராமானுஜத்தைச் சந்தித்து அவரது கணிதநோட்டுப் புத்தகங்களைப் பார்வை இடல். பின்பு லண்டன் பேராசிரியர் ஜி.எச்.ஹார்டியின் விருப்பப்படி லண்டனுக்கு வரும்படி அழைத்தல்.

**1914 பிப்ரவரி:** மெட்ராஸ் போர்ட் டிரஸ்டு தலைவர் சர்.பிரான்ஸிஸ் - ஸ்பிரிங், சென்னை ஆளுநர் லார்ட் பெண்ட்லண்டு பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில், ராமானுஜன் லண்டன் சென்று கணித ஆராய்ச்சியில் ஈடுபட ஆகும் செலவிற்காக ரூ.10,000 உதவ வேண்டினார்.

**1914 மார்ச் 17:** ராமானுஜன் சென்னைத் துறைமுகத்திலிருந்து "எஸ். எஸ். நேவேஸா" கப்பல் மூலம் இங்கிலாந்துக்குப் பயணம்.

**1914 ஏப்ரல். 14:** லண்டன் துறைமுகம் அடைதல்

**1914 ஏப்ரல் 16:** லண்டன்,கிராம் வெல் ரோடிலுள்ள பேராசிரியர் நெவில் பங்களாவில் தங்கினார்.

**1914 ஏப்ரல் 17:** ஜி. எச். ஹார்டியைச் சந்தித்தல்

**1914 ஏப்ரல் 18** லண்டன் டிரினிடி கல்லூரியில் ராமானுஜன் கணித ஆராய்ச்சி மாணவராகச் சேர்ந்தார்.

**1916 மார்ச் 10:** கணித ஆராய்ச்சித் திறனுக்காக ராமானுஜத்திற்கு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் 'பி.ஏ' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

**1917 மார்ச் 16:** காசநோயினால் பாதிக்கப்பட்ட அவர், லண்டனில் தனியார் நர்சிங் ஹாஸ்டல், வேல்ஸ் நர்ஸிங் ஹோம், மாட்லாக் நர்ஸிங் ஹோம் ஆகியவற்றில் சேர்ந்து சிகிச்சை பெற்றார்.

**1918 மார்ச் 16:** லண்டன் ராயல் சொஸைடியினர் ராமானுஜத்திற்குப் 'பெரும் புலவர்' (F. R. S.) பட்டம் அளித்துக் கௌரவித்தனர்.

**1919 ஜனவரி:** மீண்டும் அவருக்கு உடல் நலன் பாதிப்பு; லண்டனிலுள்ள மருத்துவர்கள் 'ராமானுஜன் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வது நல்லது' என்ற யோசனையைத் தெரிவித்தனர்.



கணித மேதை ஜி.எச். ஹார்டி.

**1919 மார்ச் 27:** ராமானுஜன் பம்பாய்த் துறைமுகம் வந்தடைதல்

**1919 ஏப்ரல் 2:** பம்பாயிலிருந்து சென்னை வருகை

**1920 ஜனவரி 12:** படுத்த படுக்கையிலிருந்த ராமானுஜன், தான் கண்டுபிடித்த புதிய கணிதப் புதிருடன் ஜி. எச். ஹார்டிக்குக் கடிதம் எழுதினார். இதுவே ராமானுஜன் எழுதிய இறுதிக் கடிதமாகும்.

**1920 ஏப்ரல் 26:** திங்கட்கிழமை காலை 10:30 மணிக்கு உலகம் புகழும் கணித மேதை ராமானுஜன் தனது 33 வயது நிறைவாவதற்குள் அகால மரணம் அடைந்தார்.

# 15 அம்சத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் சிறுபான்மையினர் நலம்

சி. தங்கராஜு, இ.ஆ.ப.,
ஆணையர் மற்றும் செயலர்,
சமூக நலத்துறை.


அமைதிப்பூங்காவாக உள்ள தமிழகத்தில், மற்ற மாநிலங்களைப் போல் வகுப்பு, மொழி மற்ற இனக்கலவரம் ஏதும் இல்லாமல் இருப்பதற்கு முக்கியக் காரணம், தமிழகத்தில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கும் சிறுபானமை மக்கட்குமிடையே காணப்படும் ஒற்றுமையுணர்வும், தோழமை உணர்ச்சியும்தான். இத்தகைய ஒற்றுமை உணர்வுகளே தேசிய ஒற்றுமை மேம்பட வழிவகை செய்கின்றன.

தமிழகத்தைப் பொருத்தமட்டில, சிறுபான்மை மககளாக கருதப்படுவோர்கள், முகமதியர்கள, கிருத்துவர்கள், சீககியர்கள், புதிய மாாக்கத்தை பின்பற்றும் பௌத்த மதத்தைச் சேர்நதவர்கள், பார்சி இனததவர் மறறும் சமண மதத்தைச்சார்ந்தோர்களாவர். தமிழகத்தில் மேற் கண்ட மதங்களைப் பின்பற்றுபவர்கள், தாங்கள் பின்பற்றும் மதத்தின் அடிப்படையில் சிறுபான்மை இனத்தோர் எனும் தகுதியைப் பெறுகின்றனர். 1981ஆம் ஆண்டு மககள் தொகைக் கணக்கெடுப் பின்படி தமிழகத்தின மக்கட் தொகை 4,84,08,077 ஆகும். இதில் கிருத்துவர்களின் எண்ணிக்கை 27,98,048 அதாவது 5.78% ஆகும். முகமதியாகளின எண்ணிக்கை 25,19,947 அதாவது 5.21% ஆகும். பிற இனததவாகளான சமணர்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தமதத்தினை பின்பறறுவோர்களின் எண்ணிக்கை0.01%க்கு குறைவாகவே உள்ளது. சிறுபான்மையினராகிய கிருத்துவர்களும், முகமதியர்களும், தமிழகத்தில் கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் அதிக அளவில் வசித்து வருகினறார்கள். அவையாவன: (1) சென்னை (2) நீலகிரி (3) திருநெல்வேலி (4) ராமநாதபுரம் (பிரிக்கப்படாதது) (5) தஞ்சாவூர் (6) வடஆர்க்காடு மற்றும் (7) கன்னியாகுமரியாகும். இந்த ஏழு மாவட்டங்களிலும், முகமதியர்களும், கிருத்துவர்களும் 5%லிருந்து 10%வரை நிறைந்து காணப்படுகின்றனர். ஏனைய பெரும்பான்மை மக்களுடன் ஒப்பிடுகையில் சிறுபான்மையினரின் வாழ்க்கைத் தரம் சிறிது தாழ்வாக உள்ளபடியால் அம்மக்கள் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், கிராமப்புற நலங்களின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் பலன்கள் சிறுபான்மை இனத்தவருக்கும் சரிவிகித அடிப்படையில் சென்று அடைகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும் மறைந்த பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சிறுபான்மையினர் நலனுக்கென தனியாக ஒரு 15 அம்சத் திட்டத்தினைத் தீட்டி மைய அரசு அளவில் தீட்டி அதனை மாநிலங்கள் தோறும் நடைமுறைப் படுத்துமாறு எல்லா மாநிலங்களையும் கேட்டுக்கொண்டார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை அந்த 15 அம்சத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதனை ஒவ்வொரு திட்டவாரியாகக் காண்போம்:

**(1) இனக்கலவரங்கள் ஏற்படும் என்று கருதப்படும் இடங்களில் நடுநிலைமை உள்ள காவல்துறை அதிகாரிகளை நியமித்தல்.**

பாரதப் பிரதமரின் 15 அம்சத் திட்டங்களில் ஒன்றான அடிக்கடி இனக்கலவரம் ஏற்படும் பகுதிகளில் அனுபவம் வாய்ந்த நடுநிலைமை வகிக்கும் காவல் துறை அதிகாரிகளை நியமித்தல் என்பதாகும். தமிழ்நாட்டை பொறுத்த மட்டில், முகதியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையேயும், கிருத்துவர்களுக்கு இந்துக்களுக்கும் இடையேயும் ஏற்படும் இனக்கலவரம் மிகவும் அரிது. முக்கியமாக ஆதிதிராவிடர்களுக்கும் பிற சாதியினருக்கும் இடையேதான் இனக்கலவரங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. கடுமையான இனக்கலவரங்கள் அண்மையில் ஏதும் ஏற்பட்டதில்லை. 1982ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கிருத்துவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரம், 1985ஆம் ஆண்டு மதமாற்றத்தினால் இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரத்தினைத் தவிர வேறு குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நடக்கவில்லை. மேலும் இனக்கலவரத்தால் பெரும் பிரச்சனைகள் ஏதும் ஏற்படாதபோதும் எளிதில் இனக்கலவரங்கள் ஏற்படக்கூடிய பகுதிகளில் கூடுதல் திறமையும், நடுநிலைமை எண்ணமும் உணர்வும் கொண்ட காவல்துறை அதிகாரிகளை நியமிக்கும்படியும், காவல் நிலையங்களில் சிறுபான்மையோர் வகுப்பைச் சேர்ந்தவர்களை நியமிக்கும்படியும் காவல் துறைத் தலைமை அதிகாரிக்கு (டைரக்டர் ஜெனரல்) தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.




**(2) நல்ல பணி செய்த காவல்துறை அதிகாரிகளுக்கு வெகுமதியும் அளித்தல்**

இனக்கலவரத்தின் பொழுது வீரச் செயல் செய்து உயிரிழந்த அல்லது காயமுற்ற காவல்துறை அலுவலர்களுக்கு, தனிக் கருணை மானியம் வழங்கும் பொருட்டு, தமிழக அரசு ஏற்கனவே திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி வீரச்செயல் செய்து இறக்க நேரிட்ட காவல்துறை பணியாளர்களுக்கு, தனிக்கருணை மானியமாக 10,000 ரூபாயும் காயமுற்றோர்களுக்கு அதன் தன்மையைப் பொறுத்து 1,000 ரூபாய் முதல் 3,000 ரூபாய் வரையிலும் பணிபுரிய நிரந்தரமாக இயலாதவர்களுக்கு (Permanently in capactor) ரூ. 5,000 மும் வழ்ங்க அனுமதிக்கிறது.

குடும்ப நலத்திட்டத்தின் கீழ் (Famıly benefit Scheme) இறந்த

காவல்துறைப் பணியாளர்களின் குடும்பத்திற்கு ரூ. 20,000 அரசு வழங்குகிறது. அத்துடன் துணைக் கண்காணிப்பாளர் நிலை வரையிலான காவல்துறைப் பணியாளர்கள் தகுதி வாய்ந்த சிரிய பணிக்காக 40(1), 41ல் காவலர் நிலை ஆணைகளின்படி ரொக்கப் பரிசுத்தொகை வழங்கப்படுகின்றனர். சிறப்பு இனங்களில் (Extra ordinary cases) ரொக்கப் பரிசுத்தொகையும் வழங்கப்படுகிறது. வீரச்செயல்களுக்காக முதலமைச்சரின் பதக்கமும் வழங்கப்படுகின்றது.

**(3) இனக்கலவரத்தினைத் தூண்டிவிடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்:**

இம்மாநிலத்தில் தற்பொழுது செயலில் இருந்துவரும் உத்தரவுகள் இனக்கலவரங்கள் தூண்டிவிடுபவர்கள் அல்லது வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வழக்கமாக உள்ள இந்திய குற்றவியல் தண்டனைச் சட்டம் ( I.P.C. ) குற்றவியல் நடைமுறைச்சட்டம் (Cr. I.P.C.) ஆகியவற்றுடன் இம்மாநில அரசு தனிச் சட்டங்களையும் இயற்றியுள்ளது. அத்தகைய சட்டங்களில் ஒன்று; பொதுச் சொத்துக்களை அழிப்பதைத் தடுக்கும் சட்டமாகும். மற்றொன்று 1982ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட குண்டர்கள் சட்டமாகும். (Goonda's act) இனக்கலவரத்தைத் தூண்டுபவர்களை இச்சட்டங்கள் மூலம் அரசு ஓராண்டிற்கு அவர்களை, தடுப்புக் காவலில் வைக்க இயலும்.

**(4) இனக்கலவரங்களை விரைவாக விசாரித்து நீதிவழங்குவதற்கு, தனி நீதிமன்றங்களை ஏற்படுத்துவது:**

இனக்கலவரக் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றங்களைக் கோயம்புத்தூர், கன்னியாகுமரி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்துவதைப்பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**(5) இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாகப் பண உதவி மற்றும் மறுவாழ்வினை அளித்தல்:**

இனப்பற்றுக் காரணமாக ஏனைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இழைத்த அட்டூழியங்களினால் பாதிகப்பட்ட ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுககு நிதி நிவாரணம் அளிப்பதற்காக இந்த



அரசு ஏற்கனவே திட்டமொன்று வகுத்துள்ளது. அதே அளவில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவர்க்கும் நிவாரணம் அளிக்க வழிவகை செய்து ஆணையிட்டுள்ளது. இந்தத்திட்டத்தின்படி இறந்தவர் சம்பாதிப்பவராக இருந்தால் அல்லது நிரந்தர இயலாமைக்கு ஆளானவராக இருந்தால் குடும்பத்திற்கு ரூ. 2,000-மும் தற்காலிக இயலாதவரின் குடும்பத்திற்கு(சம்பாதிப்பராகஇருந்தால்) ரூ. 500 வரை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தத் தொகையினை உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற மைய அரசின் பரிந்துரை இவ்வரசின் பரிசீலனையில் உள்ளது.

**(6) தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் கலவரப் பகுதியில் வகுப்பு ஒற்றுமையினை நிலைநாட்டல:**

இந்தத் திட்டத்தினைச்செயல்படுத்துவது தொடர்பாக, பொது (செய்தி மற்றும் மக்கள்தொடர்பு துறை) மூலமாக வானொலி, மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அறிவுரைகள் முன்னமேயே பிறப்பிக்கப்பட்டுள்ளன. வகுப்பு ஒற்றுமையைக் குறித்த நிகழ்ச்சிகள், நாடகங்கள், விவாதங்கள், பேட்டிகள் முதலான நிகழ்ச்சிகள் அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் மூலமாக முறையாக அவ்வப்பொழுது இடம் பெறச் செய்யப்படுகின்றன.

**(7) இனக் கலவரங்கள் தொடர்பாகப்பத்திரிகைகளில் பொறுப்பற்ற வகையில் தவறான செய்திகளை மக்களுக்கு அளிப்பதைத் தடுப்பதற்கு உரிய சட்டங்களை இயற்றுதல்:**

இனக் குற்றங்கள் தொடர்பாகப் பொறுப்பற்ற வகையில் தவறான செய்திகளை, பத்திரிகைகள் மூலம் செய்திகள் அளிப்பதைத்தடுப்பதற்கு உரிய சட்டங்களை இயற்றுவது பற்றி மத்திய அரசு தீவிரமாகப்பரிசிலித்து வருவதாகத் தெரிகிறது.

**(8) காவல்துறைப்பணியாளர்களை தெரிந்தெடுப்பதிலும் தேர்வுக் குழுக்களிலும் சிறுபான்மையினருக்குத் தனிப்பட்ட முக்கியத்துவம் அளித்தல:**

காவல்துறைப்பணிகளுக்கு, பணியாளர்களைத் தேர்நமதடுக்கும் பொழுது சிறுபான்மை வகுப்பைச் சேர்நதவர்களுக்கு, தனி முக்கியத்துவம் அளிக்க வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு காவல்துறையில் எல்லாப் பதவி நிலைகளிலும் 6.4 சதவீதம் முஸ்லீம்களும், 11.3 சதவீதம் கிறித்தவர்களும் பணிபுரிகின்றனர். மேலும் டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவியில் ஒரு முகமதியரும் டெபுடி இன்ஸ்பெக்டர் பதவியில் இரண்டு கிறித்தவர்களும் உள்ளனர்.

**(9) மைய அரசு காவல்படைகளில் காவலர் பணிகளுக்கு ஆள் சேர்ப்பதில் மைய அரசும் இதே போனறு நடவடிக்கையினை மேற்கொளளுவது:**

இந்தத் திட்டம் மைய அரசினை சார்ந்ததால் அனைத்திந்திய அளவில் நடவடிக்கை மைய அரசே மேற்கொள்ளும்.

**(10) அரசுத்துறை நிறுவனங்களில் ஆள்சேர்ப்பதிலும் சிறுபான்மையினருக்குத் தனிச் சலுகை அளிப்பது:**

இம்மாநிலத்தில் தற்பொழுது உள்ள இட ஒதுக்கீடு விதிகளின்படி அரசுப் பணிகளில் காலியாக உள்ள இடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கு 50 சதவீதம் இடமும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 32 சதவீதம் இடங்களில் பொதுப்போட்டி முறையில் தகுதியின் அடிப்படையில் மற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். மேலும் சிறுபான்மையினரில் முஸ்லீம்கள் மற்றும் கிறித்தவர்கள் பெரும்பாலோனோர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதால் அவர்கள் பிற்படுத்தப்பட்டோருக்கான ஒதுக்கப்பட்ட 50 சதவீதம் பணிகளில் தேர்வு செய்யப்பட வாய்ப்புகள் உள்ளன. அரசுத் துறை நிறுவனங்களுக்கும் சிறுபான்மையினர்

நியமனத்தில் இட ஒதுக்கீடு விதிகளைப் பின்பற்றுமாறு தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**(11) சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் தொடங்குதல்:**

முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் கிருத்துவ மதத்தைச் சேர்ந்த பின்தங்கிய வகுப்பினர் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள சிறுபான்மையினர் இந்திய ஆட்சிப் பணிக்கும் மைய அரசுப் பணிகட்கும் நடைபெறும் தேர்வில் கலந்து கொள்வோர்க்குப் பயிற்சி அளிக்கும் மாநில அரசு நடத்துகின்ற பின்தங்கிய வகுப்பினருக்கான தனிப் பயிற்சி நிறுவனங்களில் அனுமதிக்கப்படத்தகுதியுள்ளவராவர். ஆதி திராவிடர்களாக இருந்து கிறித்தவர்களாக மதம் மாறியவர்களும் ஆதிதிராவிடர் பழங்குடி வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி நிலையத்தில் அனுமதிக்கப்பெறும் தகுதி உடையவராகின்றனர். சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் சில இந்திய ஆட்சிப் பணித் தேர்விலும் மற்றப் பணிக்கான தேர்வுகளிலும் கலந்து கொள்ளும் சிறுபான்மை வகுப்பு மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றன. பாரத பிரதமரின் கட்டளையைச் செயல்படுத்த, சிறுபான்மை வகுப்பினர் கல்வி நிறுவனங்களுடனும் சமயப் பொறுப்புக் கழகங்களுடனும் கலந்து கூட்டங்கள் நடத்துமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தனிப்பயிற்சி வகுப்புகள் தொடங்க, சுமார் 25 கல்லூரிகள் ஏற்கனவே திட்டங்கள் வகுத்து அவற்றைப் பல்கலைக் கழகங்கள் மூலமாக அனுப்பியுள்ளன. மேற்சொன்னவாறு வகுக்கப்பட்ட திட்டங்கள் கீழ் சுமார் 1,250 மாணவர்களுக்குப் பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளப் பயிற்சி அளிக்கப்படும்.

**(12) சிறுபான்மையினர் அதிகமுள்ள பகுதிகளில் தொழில் பயிற்சி நிலையங்களையும் பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளையும் ஏற்படுத்துதல்:**


இந்தமாநிலத்தில் 40தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஐந்து தொழில் பயிற்சி நிலையங்கள் மகளிருக் கானவை. அவற்றில் 15,000 மாணவிகள் கல்வி பயிலுகின்றனர். அந்த 15,000 மாணவியர்களில் 1,200 பேர் சிறுபான்மை இன மாணவியர்களாகும். தொழில் பயிற்சி



நிலையக்கல்வி முகமதிய மாணவர்களை ஈர்ப்பதில்லை. அவர்கள் சுயவேலை வாய்ப்பையே பெரிதும் நம்பியுள்ளனர். முஸ்லீம்கள் இத்தகைய ஆறு முஸ்லீம் கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றனர். அந்தக்கல்வி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 500 மாணவர்கள் கல்விபயிலுகின்றனர் அந்த 500 மாணவர்களில் 200 பேர் மட்டுமே முஸ்லீம்கள் ஆவர்.

**(13) பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் கிடைக்கின்ற நன்மைகளைச் சிறுபான்மையினர் நன்முறையில போதுமான அளவுக்குப் பெற்று வருகின்றனரா என்பதை உறுதி செய்தல்.**

இந்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளுக்கிணங்க இம்மாநிலத்துல் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், கரிம வாயுத் திட்டம் ஆகிய திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பாரதப் பிரதமர் தெரிவித்துள்ள



கருத்தைப் பின்பற்றுமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உத்தரவுகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் சிறுபான்மை மக்கட்கு மேற்கண்ட திட்டங்கள் மூலம் கிடைத்துள்ள பலன்களின் புள்ளி விவரங்கள் பின்னால் தரப்பட்டுள்ளது:

மேற்கண்ட திட்டங்களின் மூலம் சிறுபான்மை மக்கட்குச் சென்று அடைந்த பலன்கள் அம்மக்கள் தொகையின் சரிவிகித அளவிற்குள்ளது என்பது தெரிய வருகிறது.

வளர்ச்சித் திட்டங்களையும் 20 அம்சத் திட்டங்களையும் செயல்படுத்துவது தொடர்பான பல்வேறு குழுக்களில் சிறுபான்மையினரைச் சேர்த்துக் கொள்வது உட்பட பல பிரச்சினைகள் குறித்து, பரிசீலிக்கப்பட்டது. சில மாவட்டங்களில் சிறுபான்மையினர் சிலர் அடங்கிய மாவட்ட வளர்ச்சிக் குழுக்கள் 20 அம்சத் திட்டம் உட்பட பிற திட்டங்களையும் பரிசீலித்து வருகின்றன.

இவை தவிர சமூக நலத்துறையில் ஏற்படுத்தப்பட்ட சிறுபான்மையோர் நல ஆராய்ச்சிப் பிரிவில் ஆராய்ச்சி அலுவலர்கள் இத்திட்டங்கள் செயல்படும் விதம் குறித்து அவ்வப்பொழுது கண்காணித்து, செயல்படும் விதங்களை முறைப்படுத்தி வருகின்றனர்.

**(14) வக்ப் சொத்துக்களை ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளவைகள் தொடர்பான குறைபாடுகளை நீக்குதல்.**

அவசியமான இடங்களில் சுமுகமானசூழ்நிலையை நிலைநாட்டத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பு குறித்து, தமிழ்நாடு வக்ப் வாரியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபோதெல்லாம் அந்த ஆக்கிரமிப்பை அகற்ற, தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு வக்ப் சட்டத்தின் 36ம் பிரிவின் கீழ் தகுந்த நடவடிககைகள் எடுக்கின்றன. தமிழ்நாடு வக்ப வாரியத்தில் இதைப்போன்ற ஆக்கிரமிப்பு வழக்குகள் 11,000 உள்ளன. இவற்றில் 2,531 வழக்குகளில் வாரியத்திற்குச் சாதகமாக நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. 2,955 வழக்குகளில் எதிராக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் 5,751 வழக்குகள் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்படாமல் உள்ளன.

(15) சிறுபான்மையினர் தொடர்பான செயல்களைப் பரிசீலிப்பதற்கு இம்மாநிலத்தில் தனிப் பிரிவு ஒன்றினை ஏற்படுத்துதல்.

சிறுபான்மையினரின் நலனுக்காகப்பாரதப்பிரதமரின் 15அம்சத் திட்டத்தினைக் கண்காணித்து செயல்படுவதற்கான ஒரு சிறப்பு ஆராய்ச்சிப்பிரிவு ஒரு ஆராய்ச்சி அலுவலரையும்இரண்டுஆராய்ச்சி ஆய்வாளர்களையும் கொண்டதாக சமூக நலத்துறையில் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

| திட்டத்தின் பெயர் | இந்துக்கள் | முஸ்லீம்கள் | கிறித்தவர்கள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| ஒ.ஊ.வ.தி (I.R.D.P) | 87% | 7.4% | 5.6% |
| (TRYSEM) | 86.1% | 4.5% | 9.4% |
| தே.உ.வே.தி (N.R.E.P) | 84% | 4.24% | 6.8% |
| ஊ.நி.வே.வா.தி (R.L.E.G.P) | 95.85% | 1.15% | 3% |

# முதன் முதலில்

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஆசை எழுவது இயல்பு தானே?

அதன் விளைவு? நலிந்த பிரிவினரான அருந்ததியர் சமூகத்தினர் சிலர் ஒன்று சேர்ந்தார்கள். 'தமிழ்நாடு நலிந்தோர் முன்னேற்றக் கூட்டுறவுக கடன் வழங்கும் சங்கம்' என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள். இதன் தொடக்க விழாவை 23.11.86 அன்று எளிமையாக நடத்தினார்கள்.

இந்தச் சங்கத்தைப் பற்றியும் இதன் பணிகளைப் பற்றியும் கேட்டபோது, சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு வெ. மோகன கிருட்டிணன் கூறினார்:

''வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள அருந்ததியர் சமூகத்தினர் உருவாக்கிய இந்தக் கூட்டுறவுச் சங்கம் இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கெனப் புதிய குறிக்கோளுடன் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் போன்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகக்கூட்டுறவுச் சங்கங்கள், விற்பனைச் சங்கங்கள் முதலானவை ஏற்கனவே உள்ளன. ஆனால், காலணி தயாரித்தல் போன்ற சிறுசிறு தொழில்களைச் செய்து வரும் அருந்ததியினரின் இந்தக் கடன் வழங்கும் சங்கம் இப்போது தான் முதன் முதலில் தொடங்கப்படுகிறது.

''இந்தச் சங்கத்தில் 363பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுடைய பங்கு மூலதனம் 1 லட்சத்து 12 ஆயிரத்து 610 ரூபாய். சென்னை மத்தியக் கூட்



டுறவு வங்கி, இந்த உறுப்பினர்கள் 110 பேருக்கு 3 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் கடன் தந்துள்ளது.

''வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள இந்தச் சமூகத்தினரின் வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் இந்தக் கடன் தொகை பயன்படுத்திக் கொள்ளப்படும். காலணி செய்தல், தோல் கைப்பைகள் தயாரித்தல், பெட்டிக்கடை வைத்தல், கூடை முடைதல், பால் விற்பனை முதலான தொழில்களில் இவர்கள் ஈடுபடுவார்கள்.


''இந்தச் சங்கம் தனது தொடக்க விழாவில், தங்கள் சமூகத்தைச் சேர்ந்த குழந்தைகள் மேல் படிப்புக்காகவும், தங்கள் இனத்தைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் கிளினிக் வைத்துக் கொள்வதற்காகவும், கடனுதவி தந்திருக்கிறது. இந்த வகையில் 79 பேருக்குத் தொழில் கடனையும், 31 பேருக்குக் கல்விக் கடனாக அதாவது மருத்துவம், பொறியியல் படிப்புக்காகவும் உதவியுள்ளது.''

இந்தச் சங்கத்தின் எதிர்காலத் திட்டம் என்ன?

அருந்ததியினர் சமூகத்திலுள்ள மருத்துவர்களுக்குக் கிளினுக்குகள் மற்றும் 24 மணி நேர மருத்துவமனைகளுக்கான கடன் உதவி வழங்குதல்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், இச்சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கான சங்கங்களைத் தோற்றுவித்து, கடன் வழங்குதல்.

பேட்டி : பி.வி.ஜி



# மாநகர் எங்கும் பசுமை காண்போம்!

சுற்றுப்புறச் சூழலைச் சுத்த மாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தற்போது மக்களுக்கு உணர்த்த வேண்டி உள்ளது. அதன் அடிப் படையில் 1986 நவம்பர், 19 லிருந்து டிசம்பர் 18 வரை உள்ள காலம் இந்தியா முழுதும் தேசிய சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு திங்களாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி, சென் னையில் பல்வேறு இடங்களில் மரம் நடும் விழாக்கள் கருத்தரங் குகள், பேரணிகள் நடைபெற் றன.

சென்னை மாநகராட்சியின் சார்பிலும், மாநகர் எங்கும் மரம் நடும் பணி நடைபெற்று வரு கிறது. டிசம்பர் திங்கள் முடிவிற் குள் மொத்தம் 10 ஆயிரம் மரக் கன்றுகளை நட மாநகராட்சி தீர் மானித்தது. இப்பணி முழுமை யான அளவில் வெற்றிபெற சமுதாயத்தின் எல்லாத் தரப்பு மக்களையும் குறிப்பாக மாணவ சமுதாயத்தை ஈடுபடுத்த முடிவு செய்தது.

இதனடிப்படையில் சென்னை மாநகராட்சியும் அண்ணா பல் கலைக்கழக மாணவ மாணவி யரும் இணைந்து நடத்தும் மரம் நடும் விழா பல்கலைக்கழக வளா கத்தில் 28.11.86 அன்று நடை பெற்றது. இவ்வளாகத்தில் உள்ள வெட்டவெளி நிலப்பரப் பில் 300 கன்றுகளும் வெளியிடங் களில் 700 கன்றுகளுமாக 1000 கன்றுகள் அன்று ஒரு நாளில் மட்டும் நடப்பட்டன. மொத்தம் இதுவரை 4,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ண சாமி அவர்கள் மரக்கன்றுகளை நட்டு விழாவைத் தொடங்கி வைத்தார். அதே நேரத்தில் பல் கலைக் கழக மாணவ, மாணவி யரும் மரக்கன்றுகளை நட்டனர்.

விழா வரவேற்புரை ஆற்றிய சென்னை மாநகராட்சி ஆணை யாளர் திருமதி சாந்தாஷீலா நாயர் இ.ஆ.ப. ''மாநகராட்சி வரலாற்றில் இதுபோன்ற அதிக அளவில் மரம் நடும் நிகழ்ச்சி இது வரை நடைபெற்றதில்லை'' என்று பெருமை ததும்பக் கூறி னார். சென்னை மாநகராட்சி சிறப்பு அலுவலர் திரு.கி. சந்திர சூடன் இ.ஆ.ப. விழாத் தலைமை ஏற்றார்.

கல்வி நிறுவன வளாகம் ஒன் றில் மரம் நடும் பணிக்கு, முதன் முதலில் அண்ணா பல்கலைக் கழ கம் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்த அண்ணா பல் கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர் கள், ''மரத்தின் பயனை நன்கு அறிந்த நிறுவனத்திற்கு இந்த உதவி கிடைத்திருக்கிறது'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்து, இந்த வளாகத்திற்குள் நடப்பட்ட கன்றுகள் நன்கு பாதுகாப் புடன் வளர்க்கப்படும் என்று உறுதியளித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு சைதை துரைசாமி, ''மரம் நடும் அவசியத்தை மக்கள் உணர வேண்டும் என்பதற்காகத்தான் இத்தகைய விழாக்கள் நடை பெறுகின்றன'' எனத் தெரிவித் தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ண சாமி அவர்கள் உரையாற்றுகை யில், ''கிராமங்களில் மட்டும் ஏறத்தாழ 18 கோடி டன் மரங் கள் விறகுக்காக எரிக்கப்படுகின் றன. காடுகள் அழிக்கப்படுகின் றன. இதன் காரணமாக நாட் டின் வளம் பாதிக்கப்படுகிறது. இதுபோன்ற மரம் நடும் விழாக் கள் மரம் வளர்ப்பதன் அவசி யத்தை மக்களுக்கு நன்கு உணர்த் தும். இம்முயற்சி தொடர்ந்து செயல்பட்டு வெற்றிபெற வேண் டும் ''என்று கூறினார்.

பாதையோரங்களில் நடப் படும் மரக்கன்றுகள் ஒவ்வொன் றுக்கும் ரூ. 300 செலவில் பாது காப்பு வேலி போடப்படுகிறது. இப்பணிக்காக பாரத் பெட்ரோ லியக் கழகம் தந்த ரூ. 60,000க் கான காசோலையை, அக்கழகத் தின் சார்பில் திருமதி கல்யாணி சுப்பிரமணியம் வழங்கினார்.

இதுபோல் மரம் வளர்ப்புப் பணிக்கு ஸ்பிக், ஐ.ஓ.சி, ஓ.என்.ஜி.சி, ஐ.ஓ.பி. ஆந்திரா வங்கி, மயிலாப்பூர் அகடமி போன்ற சில நிறுவனங்களும் நிதி வழங்க இசைந்துள்ளதாக விழாவில் தெரிவிக்கப்பட்டது.

—நமது செய்தியாளர்



# ஒரு வாரம் நடந்த ஒருமைப்பாட்டு விழா



**அ**ன்னை இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள் விழா தேசிய ஒருமைப்பாடு நாளாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு அரசின் சார்பில், 19.11.86 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கிய இவ்விழா, ஒருவார விழாவாக 25.11.86 வரை கொண்டாடப்பட்டது.

முதல்நாள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், அன்னை இந்திரா காந்தி 'திருவுருவப் படத்தினைத் திறந்துவைத்து, தேசிய ஒருமைப் பாட்டுவாரவிழாவைத் தொடங்கி வைத்தார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்மட்டக் குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமி நாதன் அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.



இரண்டாம் நாள் நிகழ்ச்சி 'சிறுபான்மையினர் நல நாளா'க் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு த. இராமசாமி அவர்கள் பங்கேற்ற இந்நிகழ்ச்சிக்கு -பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு எஸ்.ராஜரத்தினம் இ.ஆ.ப. தலைமை தாங்கினார். சமூக நலத்துறை ஆணையர் மற்றும் செயலர் திருசி.தங்கராசு,இ.ஆ.ப, சென்னைப் பெருநகர்க் குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு. ஜேப்பியார், தமிழ்நாடு பாட நூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.லியாகத்அலிகான், திரு.இ.பதுருத்தீன் ஆகியோர் உரையாற்றினர்.

21.11.86 நிகழ்ச்சி 'மொழி ஒற்றுமை நாளாக' நடைபெற்றது. மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தலைமையேற்றார். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜி.புஜங்கராவ் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றிய இவ்விழாவில்,திருக்குறளார் திரு. வீ.முனுசாமி, கல்வித்துறை இயக்குநர் திரு.கி.கோபாலன், டாக்டர் ந.சஞ்சீவி ஆகியோர் பேசினர்.

ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு.பி.பாஸ்கரதாஸ் இ.ஆ.ப., வரவேற்புரையோடு தொடங்கி நடைபெற்ற 22.11.86ஆம் நாள் விழாவில், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு.அ.அருணாசலம் அவர்கள் தலைமை தாங்கினார். 'நலிவடைந்தோர் நல நாளா'க் கொண்டாடப்பட்ட இவ்விழாவில் சமூகநலத்துறை ஆணையர் திரு. சி.தங்கராசு இ.ஆ.ப., டாக்டர் சு. பாலசந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி டி.யசோதா, திரு செ.கு. தமிழரசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

தமிழ்வளர்ச்சி இயக்குநர் டாக்டர் சு.செல்லப்பன் வரவேற்புரையோடு தொடங்கிய 'கலாச்சார ஒற்றுமை நாள் விழா' வுக்கு (23.11.86) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ்.சாமிக்கண்ணு அவர்கள்




தலைமை தாங்கினார். தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை செயலாளர் டாக்டர் ஔவை நடராசன், போக்குவரத்து ஆணையர் திரு. எஸ்.டி.காசி ராஜன்,இ.ஆ.ப., பேராசிரியை திருமதி சாரதாநம்பி ஆரூரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். விழா முடிவில் கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் வில்லுப் பாட்டு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

சமூக நலத்துறை இணை இயக்குநர் திருமதி நிர்மலா வரவேற்புரையோடு 24.11.86 ஆம் நாள் 'மாதர் நலநாள்' நிகழ்ச்சியாக தேசிய ஒருமைப்பாட்டு நாள் கொண்டாடப்பட்டது. மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். திருமதி பா. வளர்மதி, எம். எல். ஏ., திருமதி சரோஜினி வரதப்பன், திருமதி அரசு மணிமேகலை ஆகியோர் பேசினார்கள்.


தேசிய ஒருமைப்பாட்டு வார விழாவின் நிறைவு நாள் விழா 'பாதுகாப்பு நாளா'க் கொண்டாடப்பட்டது.

சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி சாந்தாஷீலாநாயர் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.


ஒவ்வொருநாள் விழா முடிவிலும் மாணவ மாணவிகள் கலந்து கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.





சென்னை பெரியார் நகரில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நூறு படுக்கைகள் கொண்ட புறநகர் மருத்துவமனையை 12-12-86 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்து வைத்தார்.

முதறிஞர் இராஜாஜி அவர்களின் பிறந்த நாளன்று (10.12.86) சென்னை பாரிமுனையிலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும் மாலை அணிவித்தனர்.



மகாகவி பாரதியார் பிறந்த நாளன்று (11.12.86) சென்னை கடற்கரையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர் நிலைக்குழுத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்களும் மாலை அணிவித்தனர்.



# தமிழரசு

## பொங்கல் மலர் 1987

பக்கம் : 250
விலை : ரூ. 6-00


● கதைக் கொத்தாக
● கட்டுரைக் களஞ்சியமாக
● கவிதைப்பெட்டகமாக

கண்ணைக் கவரும்
வண்ணப் படத்
தொகுப்பாக வெளிவருகிறது !

விவரங்களுக்குத் தொடர்பு கொள்க:

**உதவி இயக்குநர் [விற்பனை-விநியோகம்]**

" தமிழரசு " அரசினர் தோட்டம் சென்னை - 600 002.


**சென்ற இதழில்...**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்தும் ஓவியம் சென்ற இதழின் (1-12-86) அட்டையை அலங்கரித்தது.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது

முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




DIPR/Efficient

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

